











# விடுதலைப்புலிகள்




குரல்: 130 சித்திரை - வைகாசி, 2006 அன்பளிப்பு: 12/=

# தடைகள் உணர்த்த முயலும் அரசியல் செய்திகள் என்ன!

**தடை செய்யப்பட்ட அமைப்புகள் பற்றி ஐரோப்பிய யூனியன் வெளியிட்ட பட்டியலில் புலிகள் இயக்கமும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் அமெரிக்கா - அவுஸ்திரேலியா - கனடா - இந்தியா போன்ற நாடுகள் புலிகளைத் தடை செய்யப்பட்ட இயக்கமாக அறிவித்திருந்தன.**

**புலிகளுக்கு எதிராக மேற்குறித்த நாடுகள் விதித்த தடை அறிவிப்புகள் முற்று முழுதாகவே தமிழ் மக்களுக்கு எதிரானவை. தமிழ் மக்களின் பாதுகாப்பை - அரசியல் வாழ்வைக் காலில் போட்டு மிதித்துவிட்டு போர்வெறி கொண்ட சிங்கள அரசுக்கு மேற்குறித்த நாடுகள் உதவியுள்ளன என்பதே நடைமுறையில் உண்மையாகும்.**

தத்தம் நாடுகளது நலன்களைக் கருத்தில் எடுக்காமல் தமிழ் மக்களின் நலன்களை மட்டும் கருத்தில் எடுத்துச் செயற்படுவதால் சில உலக நாடுகளுக்குப் புலிகள் இயக்கம் மீது வெறுப்பேற்படுகிறது.

ஆனால் புலிகள் இயக்கம் மீதான தடை நடவடிக்கைக்கு, அந்த உலக நாடுகள் கூற முற்படும் அரசியல் காரணங்கள் வலுவற்றவையாகவே உள்ளன.

தடை அறிவிப்பின் போது ஐரோப்பிய ஒன்றியம் பின்வருமாறு புலிகளைக் குற்றம் சாட்டுகின்றது. "சமாதான முயற்சியில் அர்ப்பணிப்பையும் - பொறுப்புணர்வையும் புலிகள் வெளிப்படுத்தவில்லை"... "அமைதி வழிச் செயற்பாட்டையும் - அரசியல் தீர்வையும் பாதிக்கக் கூடிய செயற்பாடுகளைப் புலிகள் செய்தனர்...".

ஐரோப்பிய யூனியனின் மேற்குறித்த குற்றச்சாட்டுக்கள் அபத்தமானவை. ஆதாரங்கள் அற்றவை. சிங்கள அரசுக்கு மட்டுமே பொருந்தக் கூடியவை. கடந்த நான்கு வருட அரசியல் நடவடிக்கைகளில் மேற்குறித்த

**(02ஆம் பக்கம் பார்க்க)**



தமிழீழத் தேசியத் தலைவர்
அவர்களுடன் கேணல் ரமணன்



பொங்கு தமிழில்
உயர்த்தினோம்
புரியவில்லை!

புரிந்தோம்...
பொங்கி
நாங்கள்
எழுகிறோம்.

இனி...
அழுவதில்லை
அழிவதில்லை
நிமிர்கிறோம்.

# ஐரோப்பிய யூனியனின் தடை அநியாயமான நடவடிக்கை

பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் இணைத்துக் கொண்டுள்ளதாக ஐரோப்பிய யூனியன் அறிவிப்புச் செய்துள்ளது.

மே 26. 2006 அன்று ஐரோப்பிய யூனியன் எடுத்த புலிகள் இயக்கத்திற்கு எதிரான இந்தத் தடை நடவடிக்கை தமிழ் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

கடந்த 4வருட சமாதான காலத்தில் - சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் - புலிகள் காட்டிய அரசியல் அணுகுமுறைகளை - இராஜதந்திர நகர்வுகளை ஐரோப்பிய யூனியனின் தடை கொச்சைப்படுத்தியுள்ளது.

இதேசமயம், கடும்போக்கும் - போர் வெறியும் கொண்ட சிங்கள அரசு; தொடர்ந்தும் தனது இனவெறி அரசியலைத் தொடங்குவதற்கான உற்சாகத்தையும் ஐரோப்பிய யூனியனின் தடை வழங்கியுள்ளதெனலாம்.

நோர்வே அரசின் முன்னிலையில் போர்நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்ட காலத்தில் இருந்து ஜெனிவா முதலாம் கட்டப் பேச்சு வரை புலிகளுக்கும் - சிங்கள அரசுக்குமிடையே எத்தனையோ அரசியல் விடயங்கள் இணக்கம் காணப்பட்டிருந்தன.

ஆனால், அவற்றில் எதையுமே அமுற்படுத்த சிங்கள அரசு முன்வரவில்லை. முற்றுமுழுதாக மனிதாபிமானத்தை நோக்காகக் கொண்ட சுனாமி பொதுக்கட்டமைப்பையே சிங்கள அரசு நடைமுறைப்படுத்தவில்லை.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக மகிந்த அரசின் கீழ் ஒட்டுப்படைகளின் கொலைவெறிச் செயல்கள் அத்துமீறிவிட்டன. அவற்றைக் கட்டுப்படுத்த மகிந்த அரசு முயலவேண்டும் - இல்லாவிடின் சமாதான சூழல் சீர்குலைந்து போர்ப்பதட்டம் ஏற்படும் என்று புலிகள் இயக்கம் எச்சரிக்கை மேல் எச்சரிக்கைகள் செய்துவந்தது.

புலிகளின் இந்தக் கள நிலைப்பாட்டை நோர்வே உட்பட சர்வதேச நாடுகள் ஏற்றிருந்தன. ஜெனிவா முதலாம் கட்டப் பேச்சின் தொனிப்பொருளாக 'ஒட்டுப்படைகளின் ஆயுதக் களைவு' இடம் பிடித்திருந்தது. மகிந்த அரசு இதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சர்வதேச அழுத்தம் பிரயோகிக்கப்பட்டிருந்தது.

ஆனால், எதுவுமே நடைபெறவில்லை. சர்வதேச அழுத்தத்தை மகிந்த அரசு பொருட்படுத்தவில்லை. இன்னும் சொல்லப்போனால் ஒட்டுப்படைகளின் இருப்பை நியாயப்படுத்தியதுடன் - ஆயுதக் களைவுக்கும் மகிந்த அரசு மறுத்துவிட்டது.

மகிந்த அரசின் இந்த நிலைப்பாடு தமிழர் தாயகத்தில் பதட்ட நிலையைத் தோற்றுவித்தது. ஒட்டுக்குழுக்களைப் பயன்படுத்திப் புலிகளைச் சீண்டும் வகையில், தாக்குதல்களை நெறிப்படுத்துவதில் சிங்களப் படைகள் ஈடுபட்டன.

இது நிழல் யுத்தமொன்றைத் தோற்றுவித்தது சமாதான காலத்திலேயே வன்முறைகளுக்கும் - எதிர்வன்முறைகளுக்கும் வழிவகுத்துக் கொடுத்தது. சமாதான சூழலை அது கெடுத்துவிட்டது.

இந்தவகையில், தற்போதய பதட்ட நிலைக்குச் சிங்கள அரசே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும். இதற்குள் புலிகள் இயக்கத்தைச் சம்பந்தப்படுத்த முயல்வது நியாயமற்றது. புலிகளை ஒருதலைப்பட்சமாகக் குற்றம்சாட்டும் நோக்கம் கொண்டது.

அநீதியானவகையில் பக்கச்சார்பாகச் செயற்பட்டுப் புலிகள் இயக்கத்தைக் கொச்சைப்படுத்தும் வகையிலேயே ஐரோப்பிய யூனியனின் தடை நடவடிக்கை அமைந்துள்ளது என்றே புலிகள் இயக்கம் கருதுகின்றது.

சமாதான செயற்பாடுகளுக்குத் தொடர்ச்சியாகக் குந்தகம் விளைவித்து வரும் மகிந்த அரசைத் தப்பிக்க விட்டுவிட்டு புலிகள் இயக்கத்தைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்த ஐரோப்பிய யூனியன் முயல்வது சமாதான சூழலை வலுப்படுத்த எந்த வகையிலும் உதவப்போவதில்லை.

மாறாக, இதுவரை காலமும் சிங்கள அரசு கடைப்பிடித்துவந்த சமாதான விரோத நிலைப்பாட்டிற்கு, ஐரோப்பிய யூனியனும் அங்கீகாரம் வழங்கிச் சிங்கள அரசின் கடும்போக்கை ஊக்குவிப்பதாகவே அமைந்துள்ளது.

தமிழரின் விடுதலைப் போராட்டத்தைத் தோற்கடிக்கும் சதி நோக்குடன் புலிகள் இயக்கத்தையும் - தமிழ் மக்களையும் பிரித்து - வேறுபடுத்திக்காட்டுவது சிங்களப் பேரினவாதிகளின் தந்திரோபாய அரசியலாகும்.

இந்தச் சூழ்ச்சிச் சித்தாந்தத்தை ஐரோப்பிய யூனியனும் தத்தெடுத்து - பயன்படுத்த முயன்றிருப்பதைப் புலிகள் இயக்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

"ஐரோப்பிய யூனியனின் தடை புலிகளை இலக்காகக் கொண்டதே தவிர தமிழ் மக்களை அல்ல" என்று ஐரோப்பிய யூனியன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தமிழினம் மீது ஒட்டுமொத்தப் போரைத் திணித்துவிட்டு "புலிகளுக்கு எதிராகத்தான் போர், தமிழ் மக்களுக்கு எதிராக அல்ல" என்று சிங்கள அரசு கூறுவதைப் போன்றே ஐரோப்பிய யூனியனின் கூற்றும் அமைந்துள்ளது.

இலங்கைத்தீவில் அமைதியை ஏற்படுத்த முயலும் இணைத்தலைமை நாடுகளின் கூட்டில் ஐரோப்பிய யூனியனும் ஒரு அங்கம் வகிக்கின்றது. இந்த வகையில் சமாதான முயற்சியிலும் அது ஒரு பங்காளியாக உள்ளது.

ஆனால், சமாதான முயற்சிகளின் தேக்கநிலைக்கு இருதரப்பையும் குற்றம் சாட்டிவிட்டுப் புலிகளுக்கு எதிராக மட்டும் நடவடிக்கை எடுக்க ஐரோப்பிய யூனியன் முயன்றிருப்பது நியாயமான சில சந்தேகங்களை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

ஐரோப்பிய யூனியனின் நடுவுநிலை தொடர்பாகவும், அதன் மீதான நம்பகத்தன்மையிலும் தமிழ் மக்களுக்கு நியாயமான ஐயங்கள் எழுந்துவிட்டன. எதிர்காலத்தில் அதனது சமாதானப் பங்களிப்பிலும் பாதிப்புகள் ஏற்படக்கூடிய புறச்சூழலும் எழுந்துள்ளது.

எனவே, புலிகளுக்கு எதிராக ஐரோப்பிய யூனியன் எடுத்துள்ள தடை அறிவிப்பை அது மீள்பரிசீலனை செய்து மீண்டும் நடுவுநிலைப் போக்கைக் கடைப்பிடித்து சமாதானப் பங்காளியாகத் தொடர்ந்து செயற்பட வேண்டும் என்று புலிகள் இயக்கம் வேண்டுகோள் விடுக்கின்றது. ●

**(01ஆம் பக்கத் தொடர்ச்சி)**

உண்மைகளை அனைவரும் கண்டு கொள்ள முடியும்.

எனவே, புலிகளுக்கு எதிராகச் சம்பந்தப்பட்ட நாடுகள் செய்த தடை அறிவிப்புக்கள் உண்மையின் அடிப்படையில், அரசியல் நேர்மையுடன் செய்யப்பட்டவைகள் அல்ல. மாறாக அவைகள் சிங்கள அரசின் நலன் சார்ந்ததும் - தத்தமது அரசுகளின் நலன்கள் சார்ந்தும் மேற்கொள்ளப்பட்ட பாரபட்ச நடவடிக்கைகள் என்பதே புலிகளின் உறுதியான நிலைப்பாடாகும்.

செய்யப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தைச் சிங்கள அரசு நடைமுறைப்படுத்தவில்லை - நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் முடிவுகளைச் சிங்கள அரசு அமுற்படுத்தவில்லை - ஜெனிவாப் பேச்சின் முடிவுகளைச் சிங்கள அரசு செயற்படுத்தவில்லை... என்பது அரசு மீது புலிகள் சுமத்தும் ஆதாரமான குற்றச் சாட்டுக்கள். மேற்குறித்த குற்றச் சாட்டுக்களைப் புலிகள் மீது சிங்கள அரசு ஒருபோதும் சுமத்தவில்லை.

ஆனால், ஐரோப்பிய யூனியனின் தடையைத் தொடர்ந்து இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகள் வெளியிட்ட அறிக்கையில் மேற்குறித்த குற்றச்சாட்டுக்களை அது இருதரப்பு மீதும் சுமத்தியுள்ளது. இதன் மூலம் சிங்கள அரசையும் பாதுகாத்து - சர்வதேச சமூகத்தையும் குழப்பியடித்துள்ளது.

சிங்கள அரசின் கடும்போக்கு நிலைப்பாட்டாலும் - சமாதான விருப்பமின்மையாலுமே தற்போதைய சமாதானச் சூழல் குழப்பியடிக்கப்பட்டுள்ளது.

ஆனால், ஐரோப்பிய யூனியனும் சரி - இணைத்தலைமை நாடுகளும் சரி "இரு தரப்பும் தவறுவிட்டுள்ளன, இருதரப்பும் சமாதான நடவடிக்கையில் பொறுப்புடன் செயற்படவில்லை"... என்று பொதுவாகக் குற்றம் சாட்டுகின்றன.

ஆனால், புலிகள் இயக்கத்திற்கு எதிராக மட்டும் தடை நடவடிக்கை எடுத்துள்ளன.

ஏன் இந்த வேறுபாடு!

ஏனென்றால் சிங்களத் தரப்பிற்கு ஒரு அரசு உண்டு. தமிழர் தரப்பிற்கு தனியரசு இன்னும் உருவாகவில்லை. எனவே, அரசு எதைச் செய்தாலும் உலகம் அதைக் கண்டு கொள்ளாமல் விடுகின்றது. தனியரசில்லாத தமிழர் தரப்பு மீது - புலிகள் இயக்கம் மீது சுலபமாகக் குற்றம் சாட்டி - தடை நடவடிக்கைகளையும் அறிவித்து எமது போராட்டத்தைக் கொச்சைப்படுத்தச் சில நாடுகள் முனைகின்றன.

ஐரோப்பிய யூனியனும் - இணைத்தலைமை நாடுகளும் தமிழ் மக்களுக்கு ஒரு அரசியல் செய்தியைச் சொல்லாமல் சொல்கின்றன.

தமிழ் மக்களும் விரைவாகத் தனி அரசொன்றை நிறுவவேண்டும் என்பதே அந்தப் பூடகமான அரசியற் செய்தியாகும்.

அவ்வாறு தமிழீழத் தனி அரசு அமைக்கப்பட்டால் இந்தத் தடை - தண்டனை என்ற அரசியல் அவமதிப்புக்கள் புலிகள் இயக்கத்திற்கும் ஏற்படமாட்டாது.

எனவே, தனி அரசொன்றை உருவாக்கும் இலட்சியத்தில் தமிழ் மக்கள் வேகமான செயற்பாட்டையும் - இறுக்கமான ஒற்றுமையையும் வெளிப்படுத்த வேண்டிய அவசிய தேவை தமிழீழ மக்களுக்கு எழுந்துள்ளது.

எமது போராட்டத்திற்கெதிரான தடைகளை வெற்றிக்கான படிக்கட்டுகளாக மாற்றும் வல்லமையை நாம் முன்பும் பல தடவைகள் நிரூபித்துள்ளோம். எமது மக்களின் முழுமையான ஆதரவுடன் தொடர்ந்தும் அதை நிரூபிப்போம். ●

# “வீரியரின் பூமியாக இது விளங்கட்டும்”

- க.வே.பாலகுமாரன் -

சிறிலங்கா என்றால் இப்போது உலகால் எவ்வாறு பொருள் கொள்ளப்படும்? அண்மையில் வோசிங்டனிலுள்ள ஆய்வமைப்பொன்று உலகிலுள்ள தோற்றுப்போய்விட்ட நாடுகள் பட்டியலொன்றைத் தயாரித்தது. பல்வேறு குறிகாட்டிகளை அடிப்படையாகவைத்து அறிவியலடிப்படையில் இது தயாரிக்கப்பட்டது. **“எங்கே ஒரு அரசாங்கம் தனது ஆள் புலத்தின் கட்டுப்பாட்டினை இழக்கிறதோ எங்கே அதன் கணிசமான குடிமக்கள், அதனைச் சட்டபூர்வமான அரசாங்கமாகக் கருத மறுக்கின்றார்களோ, எங்கே அதனால் தனது மக்களுக்குரிய பாதுகாப்பினை வழங்கமுடியாமல் அவர்களுக்கான பொதுத்தேவைகளை நிறைவேற்ற முடியாமல் இருக்கின்றதோ, எங்கே தனது படைப்பலப் பிரயோகத்தில் தனியுரிமையை இழக்கிறதோ, அங்கே அது தோற்றுப்போய்விட்ட அரசாகக் கருதப்படும்.”** இத்தகைய நிலையிலுள்ள 40 நாடுகளை மிக ஆபத்தான, ஆபத்தான நிலை என இரண்டாக வகுத்து வெளியிடப்பட்டுள்ள பட்டியலில் சிறிலங்கா 25ஆவது இடத்திலுள்ளது. 2006ஆம் ஆண்டு அறிக்கையில் சிறிலங்கா எந்த இடத்தைப் பெறும்? ஈராக், ஆப்கான், பாகிஸ்தான் போன்றவை இடம் பெறும் முதல் பத்து நாடுகள் வரிசையிலா? இவ்வாறு சிறிலங்கா தோற்றுப் போவதற்கு எது பிரதான காரணம்? அமெரிக்கப் பேராசிரியர் புல்ஜென்ஸ் கூறுகின்றார். **எதையும் நினைவில் கொள்ளாத, ஞாபகத்தில் வைத்திருக்காத மறதித் தேசமிது.”** மாமனிதர் சிவராம் கணக்கிட்டு எழுதியதுபோல தனது முழு படைபலத்தின் 80 விழுக்காட்டிற்கு மேலாகத் திரட்டி, பல நாட்களாக ஒரு நாளில் பல தடவைகளாகப் படையெடுத்தும் அக்கினிச் சுவாலை சந்தித்த படுதோல்வியைக் கூட மறந்துவிட்ட கடும் மறதிநோயால் அவதிப்படும் தேசமிது.

இதன் விளைவென்ன? 1956இன் பின்னர் தமிழர் குருதியால் குளிப்பாட்டப்பட்ட இத் தேசத்தில் மீண்டும் “குருதிக் காட்டின் ஓலங்கள்” கேட்கத் தொடங்கிவிட்டன. இந்நிலையை சர்வதேசம் ஓரளவிற்காவது புரியத் தொடங்கியுள்ளது என்று நாம் கூறமுடியும். வழமையாகப் பேச்சுக்களில் முடக்கம், தேக்க மேற்படும் பொழுது போராட்ட இயக்கங்கள்மேல் பழிபோடும் உலகு இப்போது இங்கு இரு தரப்பையும் கண்டித்து அறிக்கை விட்டதோடு நிற்காமல் முத் தரப்பையும் கடுமையாகக் கண்டிக்கும் நிலை யிலுள்ளது. நீதிக்குப் புறம்பான வகையில் நிகழ்த்தப்படும் படுகொலைகளை விசாரிக்கும் ஐ.நாவின் விசேட பிரதிநிதியான பேராசிரியர் பிலிப் அல்ஸ்ரன் தன் வருடாந்த அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். “சிறிலங்கா அரசு அரசியற் படுகொலைகள் பற்றிய விசாரணைகளை முறையாக மேற்கொள்ளவில்லை. இவை தொடர்பில் எவரும் அடையாளம் காணப்பட்டதாகவோ, கைதானதாகவோ அறியப்படவில்லை. அப்படி ஏதும் நடந்திருந்தாலும் சாட்சிகள் கடும் அச்சுறுத்தல்களுக்கு உட்படுத்தப்படுகின்றன. இதற்கு அண்மையில் திருமலையில் ஐந்து மாணவர்களில் ஒருவரின் தந்தையான மருத்துவர் மனோகரனுக்கு விடப்படும் மிரட்டல்களை உதாரணமாகக் காட்டலாம். மிக அண்மையில் சிங்களத் தேசத்திற்குச் சற்று அதிர்ச்சியூட்டும் அறிவிப்பொன்று வெளிவந்தது. ஏப்பிரல் 1995ஆம் ஆண்டு அமெரிக்க ஒக்கலகோமா அரசு கட்டிடம் மீதான குண்டுத்தாக்குதலின் பின் அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட TKB எனப்படும் (TERRORISM KNOWLEDGE BASE) பயங்கரவாதத் தகவல் தளம் எனப்படும் அமைப்பே ஜாதிகெல உறுமயவின் முன்னோடி அமைப்பான சிகல உறுமயவைப் பயங்கரவாத அமைப்பாகப் பட்டியலில் சேர்த்துள்ளது. இவ்வாறாக ஆங்காங்கே சருவதேசம் நீண்ட உறக்கத்திலிருந்து விழிப்பதாகத் தெரிந்தாலும் இவையாவும் சிங்கள தேசத்தில் ஏதாவது தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பது ஐயத்திற்குரியது. தனது போக்கிற்குச் சாதகமற்ற கருத்துக்களைப் புறந்தள்ளுவதே சிங்களத்தின் இயல்பு.

எனவே இத்தகைய நிலையிலே மீண்டும் படுகொலைகள் அரங்கேற எம் தாயகம் குருதியால் குளிப்பாட்டப்படுகின்றது. 1956ஆம் ஆண்டு யூன் மாதம் 05ஆம் திகதி இங்கினியாகலையில் கரும்புத் தொழிற் சாலையில் பணி செய்துகொண்டிருந்த 150 தமிழ் தொழிலாளர்கள் அதே தொழிற்சாலையில் பணி செய்த சிங்களவரால் கூரிய ஆயுதங்களால் வெட்டப்பட்டுக் கொலைசெய்யப்பட்டு அரைகுறை உயிருடன் இருந்தவர்களையும் எரியும் தீயில் தூக்கிவீசிய அக்கணம் தொட்டு இக்கட்டுரை எழுதி முடிக்கும் வரை ஆங்காங்கே கொல்லப்பட்டு வீசப்பட்டு கிடக்கும் தேசப்பற்றாளர்வரை **சிங்களவர் நடத்துவது பழிவாங்கல், படுகொலையல்ல. இது திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் இனக்கொலை. ஒரு இனத்தைப் புவிப்பந்திலிருந்து அகற்றப் பல வழிகளாலும் மேற்கொள்ளப்படும் திட்டமொன்றின் முதன்மைச் செயற்பாடு என்பதை உணர்தலே.**

இனக்கொலையென்றால் என்ன? இதற்குரிய சட்ட வரைவிலக்கணம் என்ன? போலந்து நாட்டைச் சேர்ந்த யூத அறிஞரான ராபேல் லெம்கின் (RAPHAEL LEMKIN, 1900 - 1959 ) என்பவர் யூதருக்கெதிரான கிட்லரின் இனக்கொலையின் பின்னணியில் எடுத்த அயராத முயற்சியின் விளைவாகச் சருவதேசத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இனக் கொலையைத் தண்டிப்பதற்கான, தடுப்பதற்கான சட்டக்கோவையொன்று 1948ஆம் ஆண்டு டிசம்பர் ஒன்பதாம் திகதி ஐ.நா பொதுச்சபையில் அங்கீகரிக்கப்பட்டது. 1951ஆம் ஆண்டு சனவரி 12ஆம் திகதி (தீர்மான இல 260 (111)) மூலம் இவ்விதிகள் நடைமுறைக்கு வந்தன. இதன் விதிகள் பல நாடுகளின் தேசிய குற்றவியல் சட்டங்களில் இணைக்கப்பட்டுள்ளன. இதற்கமைவாகச் சருவதேசக் குற்றவியல் நீதிமன்றும் (ICC) தாபிக்கப்பட்டது. இவற்றின்படி பின்வருவன வற்றில் ஏதாவது ஒரு செயற்பாடு தேசியத்தின் இனக்குழுமத்தின், மதக்குழுவொன்றின் அல்லது இவை போன்றவற்றினை, முழுமையாகவோ, பகுதியாகவோ அழிப்பதற்கான இலக்கைக்கொண்டு நிகழ்த்தப்படுமாயின் அது இனக்கொலையாகும். அவையாவன

(அ) இத்தகைய குழுவொன்றின் அங்கத்தவர்களைக் கொலைசெய்தல்.

(ஆ) இத்தகைய குழுவொன்றின் அங்கத்தவர்களுக்கு உடல் ரீதியான அல்லது மனரீதியான கடுமையான தீங்கினைச் செய்தல்.

(இ) இத்தகைய குழுவொன்றின் பௌதிக இருப்பினை முற்றாக, அல்லது பகுதியாக அழிப்பதற்காக இக்குழுவின் வாழ்நிலையில் வேண்டுமென்றே பெரும் பாதிப்பினை ஏற்படுத்தல்.

(ஈ) இக் குழுவினுள் குழந்தைகளின் பிறப்புக்களைத் தடுக்கும் நோக்குடன் செயற்படல்.

(உ) இத்தகைய குழுவொன்றின் குழந்தைகளை இன்னொரு குழுவிற்குக் கை மாற்றிவிடல்.



அல்லைப்பிட்டிப் படுகொலை - 2006

**சிங்களவர் நடத்துவது பழிவாங்கல், படுகொலையல்ல. இது திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் இனக்கொலை. ஒரு இனத்தைப் புவிப்பந்திலிருந்து அகற்றப் பல வழிகளாலும் மேற்கொள்ளப்படும் திட்டமொன்றின் முதன்மைச் செயற்பாடு என்பதை உணர்தலே.**

ஆகவே, தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அவர்கள் மீது நடத்தப்படுவது இனக்கொலையே. இனக்கொலை என ஒவ்வொரு முறையும் உலகால் உச்சரிக்கப்படும் பொழுது அது மீண்டும் நடந்துவிடக் கூடா தென்பதே உலகின் தியானம் எனப்பட்டாலும் அது உண்மையில் அவ்வாறில்லை. நாசிகளிடமிருந்து கற்ற பாடம் உலகிற்கு எவ் வகையில் பயன்பட்டது? குறிப்பாக றுவண்டாவில் நடைபெற்ற 10 இலட்சம் மக்களின் படுகொலைகளை உலகம் நினைத்திருந்தால் தடுக்க முடிந்திருக்கும் என்பது பலராலும் சுட்டிக்காட்டப்பட்டது. இனக்கொலை நடக்க முன்னர் அதையுணர்ந்து தடுக்காமல், நடந்த பின் குற்றவியல் நீதிமன்றுகளை உருவாக்கி விசாரிப்பதால் என்ன பயன் என்பது அறிஞர்களால் முன் வைக்கப்படும் விவாதம். எனவே சிறிலங்காவில் கொலைவெறி பிடித்தாடும் குழுக்களுக்கு நேரடியாகத் துணைபுரியும் சிறிலங்கா அரசோடு நட்புப்பேணும் உலகம், அதைப் பலப்படுத்திட உதவும் உலகம் இன்னொரு றுவண்டாவாக, பொசுனியாவாக இத் தீவு மாறாமல் தடுத்திட முனையும் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதியென்பதன் பொருளென்ன? இது இனக்கொலைக்குத் தூண்டலாக அமைகிறதல்லவா?

எனவேதான் மிகக் காத்திரமான, தீர்மானமான முடிவொன்றைச் சர்வதேசத்தின் முன் புலிகள் இப்போது வைக்கின்றார்கள். 1956ஆம் ஆண்டு இனக்கொலை நிகழ்த்தப் பட்ட காலம் தொட்டு மிக அண்மைக்காலம் வரை தமிழ் மக்கள் திட்டமிட்டுப் பாதுகாப்புத் தரப்பால் படுகொலை செய்யப்படும் இந்த நாள்வரை 150இற்கு மேற்பட்ட கொத்துக் கொத்தான படுகொலை நிகழ்வுகள் பதிவாக்கப் பட்டுள்ளன. 1940களிலிருந்து ஒவ்வொரு பத்தாண்டுகளாகத் தமிழ்த் தேசிய இனத்தின் பாரம்பரிய வதிவிடங்கள் பறித்தெடுக்கப் பட்டன. (இவை தொடர்பில் ஆழமான ஆய்வுகளை மேற்கொண்ட திருமலை ரவி ஏறத்தாழ எண்ணாயிரம் சதுரகிலோமீற்றர் பரப்பளவு நிலம் பறிக்கப்பட்டதாகக் கணித்துள்ளார்.) 1940கள் தொட்டு இற்றைவரை நிலப்பறிப்பும், இனக்கொலைகளும் தொடர்கின்றன. எனவே எம் மக்கள் மனம் குமுறிக் கொந்தளித்து குரலெழுப்புகின்றனர்.

“தள்ளி நில்<br>
பிய்த்துப் பிடுங்குவதற்கு<br>
நகங்கொண்ட<br>
பிசாசே உன் கையை எடு!<br>
எம் உயிர் கொண்டபிணைப்பின் வலயத்துள்<br>
ஏன் நுழைந்தாய்?<br>
உந்திக் கமலத்தின்<br>
உடனிருப்பை ஏன் பறித்தாய்?

**குறு நகை மலர்களை<br>
குழந்தைகளின் கழுத்தை<br>
திருகியெறிந்ததென<br>
காலடிக் கீழ் போட்டாயே பாவி<br>
பால் குடியின் மென் கதறல்<br>
கேளாச் செவி படைத்தாய்!!**

இத்தகைய நிலையிலே புலிகள் புதிய பரிமாணமொன்றினைப் புலப்படுத்துகின்றார்கள். சிங்களமும் சருவதேசமும் நிறைவேற்ற வேண்டிய கடப்பாடுகளைத் தாமே நிறைவேற்றுகின்றனர். சிங்களத்தினை “சன நாயகப்” படுத்தும் பொறுப்பு - போர்நிறுத்த உடன்பாட்டின் சிங்களத் தரப்பின் கடப்பாடுகளை நிறைவேற்றும் பொறுப்பு. (ஏன் சிங்களத்தினை பேச்சிற்கு அழைத்துவந்ததும் புலிகளேயல்லவா) இவை யாவற்றினையும் விட இன்னொரு இனக்கொலை இங்கே நிகழாமல் தடுத்திடும் இமாலயப்பணியும் புலிகளுக்கேயுரியது. இவ்வகையில் எமது தாயகம் வீரியரின் பூமியாக இப்போது திகழ்கின்றது. வரலாறு தமிழரைப் பார்த்துச் சொல்கின்றது.

“அறிக<br>
உனதிருப்பில் இமயத்தின் வலுவேற்றம்<br>
உச்சியிலே<br>
விடுதலை ஞாயிற்றின் சிரசுதயம்<br>
மீட்டெடு - மீட்டெடு<br>
புவியெங்கும் உயிர்க்குருதிச் சுற்றோட்டம்<br>
நிகழவிடு”

(இங்கு கையாளப்பட்ட அனைத்து கவிதை வரிகளும் நன்றியுடன் கவிஞர் வில்வரத்தினத்தின் காலத்துயர் கவிதை நூலிருந்து பெறப்பட்டவை)

# அரசுக்கும் அரசுக்கும் இடையேயான உறவென்பது ஒடுக்குமுறைக்குத் துணைபோகும் தத்துவம்.

அரசுகள் அரசுகளுக்கிடையேயான உறவுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. முதலாவது அர்த்தத்தில் சர்வதேச உறவென்பது அரசுக்கும் அரசுக்கும் இடையேயான உறவை அடிப்படையாகக் கொண்டது. மற்றெல்லாம் இரண்டாம் மூன்றாம் பட்சமானவை. உலகளாவிய பொருளாதாரப் பொதுப்போக்கு அடிப்படையானதேயாயினும் அது முதலாவதாக அரசுக்கூடாகவே அணுகப்படுகின்றது. ஆதலால் அரசுக்கும் அரசுக்கும் இடையேயான உறுவுச்சங்கிலியில்தான் ஏனைய அம்சங்கள் தொங்கும் முதற்கட்டப் பரிதாபம் உண்டு.

அரசுக்கும் அரசுக்கும் இடையேயான உறவிற்குத்தான் சர்வதேச அரசியல் நெறிமுறைகள் முதலாவது இடத்தை அளிப்பதுடன் ஓர் அரசுக்குள் நிகழக் கூடிய ஒடுக்குமுறைகளையும் அநீதிகளையும் அவை உள்நாட்டு விவகாரமென முதலில் வியாக்கியானப்படுத்துகின்றன. அவ்வாறு ''உள்நாட்டு விவகாரம்'' என அவர்கள் வர்ணிக்கும் ஒடுக்குமுறைகளுக்கான தீர்வாக ''மனித உரிமை'' என்ற மேம்போக்கான ஒரு கோஷத்தினை அவைகள் முன்வைக்கின்றன. ''மனித உரிமை'' என்ற மேம்போக்கான நலிந்த குரலானது ஒடுக்கப்படும் மக்களின் பிரச்சினையைத் திசை திருப்பத்தான் பெரிதும் உதவுவதுடன் அது ஒரு பூச்சு மெழுக்குத் தந்திரமாகவும் காணப்படுகின்றது.

அரசுக்கும் அரசுக்கும் இடையேயான உறவு, உள்நாட்டு விவகாரம், மனித உரிமை என்ற வகைப்பாட்டிற்குள்ளால் ஓர் அரசுக்குள் நிகழும் ஒடுக்குமுறைகளை அணுகும் போக்கானது எப்போதும் ஒடுக்கும் அரசிற்குச் சாதகமான அடிப்படைகளைக் கொண்டதாகவே காணப்படுகின்றது.

தமிழீழ மக்களின் பிரச்சினையானது வெறும் மனித உரிமைப் பிரச்சினையோ, அன்றி ஓர் உள்நாட்டுப் பிரச்சினையோ அல்ல. அது ஒரு தேசிய இனத்தை அடக்கும் இன்னொரு தேசிய இனத்தின் பிரச்சினையாகும். அதாவது மனித உரிமை என்பது வெறுமனே தனிமனித உரிமை என்ற உயிர்வாழ் அர்த்தத்தில் மட்டும் பிரயோகிக்கப்படுகின்றதே தவிர ஒரு தேசிய இனத்தின் கூட்டுரிமை என்ற அர்த்தத்தில் அது பிரயோகிக்கப்படுவதில்லை.

இத்தகைய வியாக்கியானங்களுக்கூடாகத்தான் தமிழீழ மக்களின் பிரச்சினையைச் சர்வதேச அரங்கில் நோக்குகின்றனர். இத்தகைய பின்னணியில் ஒடுக்கும் அரசுடன் பேச்சுவார்த்தைகள் மூலமாகத் தீர்வுகாணுமாறான ஒரு வழிமுறை சர்வதேச சமூகத்தால் முன்வைக்கப்படுகின்றது. பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பது ஒரு நாகரிகமான சிறந்தவழிதான். ஆனால் ஒடுக்கும் அரசு அந்த நாகரீகத்திற்கு முரணாக நடக்குமிடத்து சர்வதேச சமூகம் அதற்கு முன்வைக்கும் மாற்றுவழிதான் என்ன என்பதே கேள்வி.

அமெரிக்க - ஈராக்கியப் பிரச்சினையையும் அமெரிக்க - ஈரானியப் பிரச்சினையையும் எடுத்துக்கொள்வோம். ஈராக்குடன் அமெரிக்க அரசிற்குப் பிரச்சினை ஏற்பட்டதும் அது பேச்சுவார்த்தைக்கு அப்பால் பொருளாதாரத் தடைகளை விதித்தது. பின்பு அதற்கும் அப்பால் படைகளைத் தரையிறக்காத விமானத்தாக்குதல்களைப் புரிந்தது. பின்பு அதனையும் தாண்டி இறுதியாக அமெரிக்க அரசு படைகளை இறக்கி நேரடி இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றது. தற்போது ஈரானின் அணுகுண்டு விவகாரத்தில் முதலாவதாக ராஜீய நடவடிக்கைகள் என்றும், இரண்டாவதாகப் பொருளாதாரத் தடை நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும், இறுதியாக இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டிவருமென்றும் அமெரிக்க அரசு கூறிவருகின்றது.



அப்படியாயின் தமிழீழ மக்கள்மீதான சிங்கள அரசின் ஒடுக்குமுறைக்கு வெறுமனே மனிதாபிமானப் பிரச்சினை, மனித உரிமை விவகாரம் என்ற நீலிக் கண்ணீர் மட்டும் போதுமானதல்ல என்பது வெளிப்படையானதாகும். நிலைமை இப்படி இருக்கையில், அதாவது ஒடுக்கும் அரசிற்கு எதிராகவே சர்வதேசம் செயற்பட வேண்டியதற்குப் பதிலாக ஒடுக்குமுறையை எதிர்த்து எழுந்துள்ள தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான நடவடிக்கைகளையே சர்வதேச சமூகமும் மேற்கொள்வதானது ஒடுக்குமுறைக்குச் சர்வதேச சமூகமும் துணைபோவதாய் அமைந்துள்ளது.

சிங்கள அரசானது ஒரு போதும் பேச்சுவார்த்தைகள் மூலமான தீர்விற்குத் தயாரில்லாதது. பேச்சுவார்த்தைகளில் சிங்கள அரசு அவ்வப்போது ஈடுபடுவதாகப் பாசாங்கு செய்வது தான் உண்மையே தவிர அது தீர்வு காண்பதில் சிறிதும் விருப்பமற்றதாகும்.

சிங்கள அரசின் முதலாவது ஒடுக்குமுறை நடவடிக்கையே தமிழ் பேசும் மக்களின் பேச்சுரிமையை மறுப்பதில் தளமிட்டது. அது சட்டங்களால் தமிழ் பேசும் மக்களை ஒடுக்கும் நடவடிக்கையில் கால்வைத்தது. தமிழ்பேசும் மக்களிற்கு எதிராகச் சட்டங்களை உருவாக்கிவிட்டு அச்சட்டங்களை நடைமுறைப்படுத்துவதே அரசின் கடமை என்று அது கூறிச் செயற்படுகின்றது. சிங்கள அரசு கூறும் ''சட்டமும் ஒழுங்கும்'' என்பது தமிழ்பேசும் மக்களை ஒடுக்கும் வழிமுறையாகும். இந்நிலையில் சட்டத்திற்குப் பணிவதோ அச்சட்டத்தை அமுற்படுத்தும் பொலீஸ், மற்றும் இராணுவத்திற்குப் பணிவதோ தர்மமாகாது. அதனை எதிர்ப்பதும் அவற்றை மீறுவதும் தான் நீதியும் நியாயமுமாகும். எனவே சிங்கள அரசின் சட்டத்தையும் ஒழுங்கையும் மீறுவது, அதனை அமுற்படுத்தும் படையை எதிர்கொள்வது என்பன எல்லாம் உரிமையின் பாற்பட்ட மிக நீதியான செயல்முறைகளேயாகும்.

இறுதியாக ஒரு சில சட்டங்களை நோக்குவோம். ''பயங்கரவாதத்'' தடைச்சட்டத்தின் மூலமும் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தற்சட்டத்தின் மூலமும் தமிழ்மக்களின் அனைத்து வகையான பேச்சுரிமை, ஜனநாயக உரிமை, கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திரம் என்பவற்றிற்குச் சிங்கள அரசு தடைவிதித்தது. இத்தகைய சட்டங்களை அமுற்படுத்துவதே அரசின் கடமையும், பொறுப்பும் என அது கூறுகின்றது. அதன்படி பார்க்கையில் தமிழீழ மக்களை அடக்கி ஒடுக்குவதே அரசின் கடமையும் பொறுப்பும் என்றாகிவிடுகின்றது. இத்தகைய பின்னணியில் அரசிற்கு எதிரான போராட்டத்தைத்தவிர வேறு மாற்றுவழி தமிழ்பேசும் மக்களிற்கு இருக்க முடியாததா கின்றது.

இராஜபக்ச அரசாங்கம் முழு அளவில் இராணுவத் தீர்வில் அக்கறை கொண்டுள்ளது. அது பேச்சுவார்த்தைகள் பற்றிப் பாசாங்காகக் குரல் எழுப்புகின்றதேயாயினும் இராணுவ நோக்கு நிலையில் நின்றே செயற்பட்டு வருகின்றது. இது இராஜபக்ச அரசாங் கத்திற்கு மட்டுமேயுரிய ஒரு தனியம்சமல்ல. சிங்கள அரசாங்கங்கள் அனைத்திற்குமுரிய ஒரு பொதுவான குணாம்சமாகும்.

**இராஜபக்ச அரசாங்கம் முழு அளவில் இராணுவத்தீர்வில் அக்கறை கொண்டுள்ளது. அது பேச்சுவார்த்தைகள் பற்றிப் பாசாங்காகக் குரல் எழுப்புகின்றதேயாயினும் இராணுவ நோக்கு நிலையில் நின்றே செயற்பட்டுவருகின்றது. இது இராஜபக்ச அரசாங்கத்திற்கு மட்டுமேயுரிய ஒரு தனியம் சமல்ல, சிங்கள அரசாங்கங்கள் அனைத் திற்குமுரிய ஒரு பொதுவான குணாம்சமாகும்.**

ஐ.தே.க.வின் தொடர்ச்சியான 17 ஆண்டுகால ஆட்சிக் காலத்தில் முறையே ஜே.ஆர் அரசாங்கம், பிரேமதாச அரசாங்கம், விஜயதுங்கா அரசாங்கம் என்பன தொடர்ச்சியான இராணுவப் படுகொலை அரசியலையே செய்துவந்தன. அந்த யுத்தத்தில் சிங்கள மக்கள் அலுத்தும், சலித்தும் போயினர் என்பது ஒருபுறமிருக்கத் தமிழ்மக்களிற்கு எதிரான நடவடிக்கைகளால் உருவாக்கப்பட்ட அதே சட்டங்களையும் இராணுவத்தையும் சிங்கள மக்களிற்கும் எதிராக ஐ.தே.க அரசாங்கங்கள் பயன்படுத்தின. அத்தகைய பின்னணியில் 199 ஆம் ஆண்டு 'சமாதானக்'கோஷ துடன் முன்வந்த திருமதி.சந்திரிக காவிற்குச் சிங்களமக்கள் அமோக ஆதரவளித்தனர். ஆனால் சமா தானத் தேவதை வேடத்தில் ப விக்கு வந்த சந்திரிக்கா வி வில் யுத்தத்தேவதையானார்.

- சாரணன் -

அதாவது கைத்தொழி மயப்படாத இலங்கைத்தீவானது பொருளாதார நெருக்கடிகளை பிரசவிக்கும் மண்ணாய் உள்ளது சிங்கள ஆட்சியாளரின் தவறான பொருளாதாரக் கொள்கைக இலங்கைத்தீவை ஆதாள பாத ளத்திற்கு தள்ளிவிட்டுள்ளன இந்நிலையில் பல வாக்குறுதி களுடன் பதவிக்குவரும் சிங்கள ஆட்சியாளர்கள் அவற்றை நிறை வேற்ற முடியாத இடத்து, பொரு ளாதாரப் பிரச்சினைகளுக்கு அவர்களால் தீர்வுகளைக்கான முடியாத இடத்து அதனை தமிழரின் பிரச்சினையாகத் திசை திருப்பி யுத்தத்தின் மூலமான ஒ வானவேடிக்கைக்குப் புறப்படுகி றனர். அவ்வாறு தமிழ் மக்களை கொன்றழிக்கும் யுத்தமானது சிங் கள மக்களைத் திசைதிருப்ப வல்ல தந்திரமாய் மட்டும் அமை யாது. ஆட்சியாளர்கள் தம்மை முற்றிலும் இராணுவ மயப்படுத்த அத்தகைய இராணுவப் பலத்தில் மூலமும் இராணுவ ஆட்சி நட வடிக்கைகள் மூலமும் சிங்கள மக்களிடமிருந்தும் தம்மைத் த காத்துக் கொள்கின்றனர்.

ஆதலால் யுத்தமென்பது வெறுமனே ஒரு திசைதிருப்ப லாக மட்டுமமையாது. சிங்கள ஆட்சியாளர்கள் தம்மை சிங்கள மக்களிடமிருந்து தற்கா துக்கொள்வதற்குரிய ஓர் இராணு வப் பரிமானமாகவும் அமைந்து கொள்கின்றது.

இவ்வாறு பார்க்கையில் சிங்கள ஆட்சியாளர்களுக்கு சமாதானம் என்பது ஓர் எதிரிய கும். ''சமாதான'' வார்த்தை களைக் கூறிக்கொண்டு யுத்தத் தையே தமது அரசியல் வழி முறையாகக்கொள்கின்றனர் அதாவது தமிழ்மக்களை ஒடுக்கு வதன் பெயரால் அவர்கள் சிங்கள அரசியலையே இராணுவமய படுத்திவிடுகின்றனர்.

இந்த வகையில் ப விக்கு வந்துள்ள இராஜபக்சவு பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியாத நிலையில் அவர் ஒரு யுத்தத்திற்கே தயார கின்றார். யுத்தத்தை நோக்கி சிங்கள அரசியலின் அரசிய பொருளாதார முரண்பாடுகள் படி படியாகக் கூர்மையடைந்து செ கின்றன. இதனை அவர் முழு அளவில் வெளிநாட்டு ரீதியா அரசியல், இராணுவ அனுசரணை கள் மூலம் நிறைவேற்றத் துடி கின்றார். இந்தவகையான இரா ணுவ ஒடுக்குமுறைக்கான அர யலை அரசுக்கும் அரசுக்கு இடையேயான உறவென்று பூ மெழுக முடியாது.







# கொடூரமான இன அழிப்பு முயற்சியில் பிரேமதாசாவை விஞ்சிவிட்ட மகிந்தராஜபக்ச

— எல்லாளன் —







**தா**ன் யார் என்பதை மகிந்த ராஜபக்ச வெளிப்படுத்தி வருகின்றார். இதுவரையான சிங்கள ஆட்சியாளர்களில் மிகவும் கொடூரமான கொலை வெறித்தாகம் கொண்ட ஆட்சித்தலைவராக மகிந்த ராஜபக்ச காணப்படுகின்றார்.

பேச்சில் மென்மையும் - செயலில் கொலைவெறியும் கொண்ட பிரேமதாசாவை விடவும் குரூரமான சனாதிபதியாக மகிந்த ராஜபக்ச அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தலை வேறு - உடல் வேறாகத் தமிழர்களைப் படுகொலை செய்வித்து ஆற்றிலும் - வயல்களிலும் - வீதியோரங்களிலும் வீசி எறிவது பிரேமதாசாவின் காலத்து வழமையாக இருந்தது.

பிரேமதாசாவின் பிரதான கொலைக் களங்களாகக் கொழும்பு மாவட்டம் - கிழக்கு மாகாணமும் விளங்கியிருந்தன.

பிரேமதாசாவின் தலை அறுக்கும் காட்டுமிராண்டித்தனத்தை மகிந்தரும் பின்பற்றத் தொடங்கிவிட்டார். அண்மையில் கொழும்பு - அவிசாவளையில் தலைகள் துண்டிக்கப்பட்ட தமிழர்களின் ஐந்து உடல்கள் வீசியெறியப்பட்டுக் கிடந்தன.

மகிந்தரின் கொலைக்களமோ பிரேமதாசாவையும் விஞ்சும் அளவுக்கு விரிந்து - பரந்து கிடக்கின்றது. வடக்கு - கிழக்கு, கொழும்பு மற்றும் மலையகம் என்று சிங்களப் படைகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகள் அனைத்திலும் மகிந்தரின் பயங்கரவாதச் செயற்பாடுகள் தாண்டவமாடுகின்றன.

பிரேமதாசாவின் கொலைக்கரங்களாகப் பெரும்பாலும், விசேட அதிரடிப்படையும் - சிங்கள இராணுவமும் செயற்பட்டிருந்தன.

ஆனால், மகிந்தரின் கொலையாளிகளாகச் சிங்களத்தின் அனைத்துவகைப் படைகளும் செயற்படுகின்றன. ஒட்டுக் குழுக்களும் கொலைச் செயற்பாடுகளில் இணைந்து செயற்படுகின்றன.

தமிழர்களைக் கொன்று அழிப்பதுதான் தமிழரின் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்று பிரேமதாசா நினைத்துச் செயற்பட்டார். அவரின் வழியைப் பின்பற்றியுள்ள மகிந்த ராஜபக்ச கொடூர இனக் கொலையைத் தீவிரப்படுத்தியுள்ளார்.

கடந்த காலங்களில் தமிழர்களைக் கொன்றழிப்பதில் பெயர் பெற்றிருந்த சிங்களப் பிரமுகர்களை மகிந்தர் அரவணைத்துக் கொலைப் பொறுப்புக்களை வழங்கிவருகின்றார்.

முன்னால் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவிற்குக் “கொழும்பைப் பாதுகாக்கும் பொறுப்பு” வழங்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

முப்படைகள் மற்றும் காடையர்களுடன் இணைந்து இப்போது மூவாயிரம் சிங்களவர்களைக்கொண்ட ஒரு மேலதிக கொலைப் படையும் கொழும்புவாழ் தமிழர்களை வேட்டையாடத் தயாராகின்றது. இந்த மூவாயிரம் பேருக்கு ரத்வத்த பொறுப்பாக இருப்பாராம்.

இதேபோன்றுதான் முன்னாள் கொலைஞன் கொட்டகதெனியாவிடம் சிறப்பு அதிரடிப்படைப் பிரிவொன்றை மகிந்த ராஜபக்ச வழங்கியுள்ளார். திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்களைக் கொன்றழிக்கும் பொறுப்பு கொட்டகதெனியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஐந்து தமிழ் மாணவர்களைக் கொன்று அந்தத் தொழிலைக் கொட்டகதெனியா ஏற்கனவே ஆரம்பித்துவிட்டார்.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தமிழர்களை இனக்கொலை செய்யும் பொறுப்பு இராணுவப் புலனாய்வுப் பிரிவிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இவர்களின் பிரதான வேட்டைநாயாகக் கருணாகுழு செயற்படுகின்றது.

யாழ் குடாநாட்டில் சிங்கள இராணுவமும் சிங்களக் கடற்படையும் இந்தக் கொலைத்தொழிலைப் பொறுபேற்றுள்ளன. ஈ.பி.டி.பி தேச விரோதிகள் இவர்களுக்குத் துணைபுரிந்து வருகின்றனர்.

**ஆக்கிரமிப்புக்குள் உள்ள தமிழர் தாயகப் பகுதிகளில் ஒவ்வொரு நாளும் தமிழர்கள் கொல்லப்படுகின்றனர். பல சம்பவங்களில் குடும்பம் குடும்பமாகக் கொன்று குவிக்கப்பட்டு இனப்படுகொலையை மகிந்தராஜபக்ச அரங்கேற்றி வருகின்றார்.**

ஆக்கிரமிப்புக்குள் உள்ள தமிழர் தாயகப்பகுதிகளில் ஒவ்வொருநாளும் தமிழர்கள் கொல்லப்படுகின்றனர். பல சம்பவங்களில் குடும்பம் குடும்பமாகக் கொன்று குவிக்கப்பட்டு இனப்படுகொலையை மகிந்த ராஜபக்ச அரங்கேற்றி வருகின்றார். கொலையாளிகளை அவர் பாதுகாத்து வருகின்றார்.

அதிதீவிர இனவாதம் பேசிய ஜே.வி.பி. கட்சியினரே திகைப்படைந்து - மௌனம் காக்கும் அளவுக்கு தமிழர்களைக் கொன்றழிக்கும் மகிந்தரின் தீவிர “செயல்வீரம்” தொடர்ந்தபடியுள்ளது. சிங்களப் பத்திரிகை உலகமும் மகிந்தரின் கொலை அரசியலை நியாயப்படுத்தி வருகின்றன.

போர்நிறுத்த காலத்திலேயே சர்வதேச சமூகத்தின் முன்னிலையிலேயே அப்பாவித் தமிழ் மக்கள்மீது வான் தாக்குதல்களையும், கடல்வழிப் பீரங்கித்தாக்குதல்களையும், ஆட்டிலறித் தாக்குதல்களையும் பெருமெடுப்பில் நடாத்துமளவிற்கு மகிந்த ராஜபக்சவிடம் கொலைவெறி நிறைந்து காணப்படுகின்றது. கொலைகளுக்கு எதிரான சர்வதேச அபிப்பிராயங்களையும் அவர் கருத்தில் எடுத்துக்கொள்ளவில்லை.

கொலைகளை நிறுத்தும்படி அரசைக் கோரித் தமிழ் மக்கள் நடாத்தும் சாத்வீகவழிப் போராட்டங்களுக்கும் மகிந்த ராஜபக்ச செவிசாய்க்கவில்லை.

மகிந்தரின் கொலைவெறியை மொத்தத்தில் சர்வதேச சமூகத்தினாலும் நிறுத்த முடியவில்லை - தமிழரின் சனநாயகவழிப் போராட்டங்களாலும் நிறுத்த முடியவில்லை

தமிழ் மக்கள் மீது மகிந்த அரசு ஒரு போரைத் திணித்தபடி உள்ளது. பொருளாதாரத் தடையையும் தமிழ் மக்கள் மீது திணித்து வருகின்றது. மீன்பிடித் தடையையும் மீண்டும் அமுல்படுத்தத் தொடங்கியுள்ளது.

போர் ஆரம்பமானால் அதைச் சாட்டாக வைத்துக்கொண்டு ஆயிரக்கணக்கில் தமிழ் மக்களை அழிக்கவும் மகிந்த அரசு ஆயத்தமாக உள்ளது. அந்த மக்கள் அழிவை புலிகள் இயக்கம் மீது சுமத்திப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக ஒரு சர்வதேச அபிப்பிராயத்தைத் திரட்டவும் திட்டமிட்டடுள்ளது. அதற்கான முன் தயாரிப்பாகவே கொலைகாரத் தளபதிகளைத் தனது போர் இயந்திரத்தின் தலைமைப் பொறுப்புகளில் நியமித்துள்ளது.

முழு அளவிலான போரைத் தமிழ் மக்கள் மீது ஏவிப் போரைப் பிரகடனப்படுத்தினால் சிங்கள அரசுக்கான சர்வதேச உதவிகள் தடைப்பட்டுவிடுமோ! என்றும் மகிந்த அரசு எண்ணுகின்றது. அதனாலேயே புலிகள் போரைப் பிரகடனப்படுத்தட்டும் என்று கருதிப் புலிகளைச் சீண்டும் விதத்தில் தமிழர் படுகொலைகளைப் பரவலாகக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

மகிந்த அரசின் கொலைவெறி அரசியலால் புலிகள் இயக்கம் பொறுமையின் விளிம்பிற்கே தள்ளப்பட்டுள்ளது. சமாதான சூழலையும் மகிந்த அரசு முழுமையாகக் குழப்பியடித்துள்ளது.

கடந்த நான்கரை வருட சமாதான முயற்சிகள் தமிழ் மக்களைப் பொறுத்த வகையில் விழலுக்கு இறைத்த நீராகிவிட்டன.

மகிந்த அரசுக்குப் புலிகள் கொடுத்த கால அவகாசமும் தீர்ந்தபடி உள்ளது.

கடந்த மாவீரர் நாள் செய்தியில் தலைவர் பிரபாகரன் கூறியதுபோல இந்தவருட (2006) இறுதிக்குள் போராட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டிய நிர்பந்தத்துள் புலிகள் இயக்கம் உள்ளது.

சமாதான காலத்தில் தமிழ் மக்கள் தொடர்ச்சியாகவும், பெருமெடுப்பிலும் கொல்லப்படும்போது தொடர்ந்தும் அதைப் பொறுத்துக்கொண்டு சமாதான நம்பிக்கையில் திளைத்திருக்கப் புலிகள் இயக்கம் தயாராகயில்லை.

தமிழ் மக்கள் பொறுமை இழந்துவிட்டனர். கொலைகாரச் சிங்களப் படைகள் மீது பதிலடித் தாக்குதலைத் தொடுத்து தமிழ் மக்களைப் பாதுகாக்க முனையும்படி புலிகளின் தலைமைக்குத் தமிழ் மக்கள் அழுத்தம் கொடுத்தபடி உள்ளனர்.

எல்லைப் புறங்களில் வசிக்கும் சிங்களக் கிராமவாசிகளுக்கு மகிந்த அரசு ஆயுதங்களை வழங்கிவருகின்றது. தமிழ் மக்களும் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளத் தற்காப்புப் பயிற்ச்சிகளைப் பெறத்தொடங்கிவிட்டனர். மகிந்த அரசு சிங்கள மக்களுக்குப் போராயுதங்களைக் கொடுப்பதுபோல தமக்கும் ஆயுதங்களை வழங்கப் புலிகள் இயக்கம் முன்வரவேண்டும் என்று தமிழ்மக்கள் கோரிக்கைகள் விடுக்கத் தொடங்கியுள்ளனர்.

**போர் நிறுத்த காலத்திலேயே சர்வதேச சமூகத்தின் முன்னிலையிலேயே அப்பாவித் தமிழ் மக்கள் மீது வான் தாக்குதலையும், கடல்வழிப் பீரங்கித் தாக்குதல்களையும், ஆட்டிலறித் தாக்குதலையும் பெருமளவில் நடாத்துமளவிற்கு மகிந்த ராஜபக்சவிடம் கொலைவெறி நிறைந்து காணப்படுகின்றது.**

இலங்கைத்தீவில் போர் மேகம் கருக்கொள்ளத் தொடங்கிவிட்டது. தமிழர் தாயகத்தில் இருந்து சிங்களப் படைகளை விரட்டியடித்து எமது மண்ணையும் - மக்களையும் முழுமையாக விடுவிக்கும் முயற்சியில் தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாகவே களமிறங்க வேண்டிய வரலாற்றுத் தேவையும் எழுந்துவிட்டது.

இந்த வரலாற்று நிர்பந்தத்தைத் தமிழ் மக்கள் உணர்ந்துகொண்டு சிங்கள அரசு திணித்துவரும் போரை எதிர்கொள்ள முழு அளவில் எங்களைத் தயார்படுத்திக் கொள்வதே தமிழ் மக்கள் முன்னாலுள்ள இன்றைய அவசரக் கடமையாகும். ●

— திருமலைக் கலவரங்கள் —

# இந்து சமுத்திரத்தின் திறவுகோல் யாருக்கு?

– இராசமைந்தன் –

**மாகாரின் மின்கொடி மடக்கின ரடுக்கி**
**மீகார மெங்கணும் நறுந்துகள் விளக்கி**
**ஆகாய கங்கையை யங்கையி லள்ளிப்**
**பாகாய செஞ்சொலவர் வீசுபடு காரம்**
**- கம்பர்**

வான்மீகி தன் புகழ்பெற்ற இலக்கியத்தை அமைக்கும்போது திருகோணமலையைப் பற்றிச் சொல்லுவதே அந்த நகரைப்பற்றி நம்மால் பெறக்கூடிய மிகப் பழைய செய்தியாக அமைகிறது. அதன் மாடிகளை ஒளியூட்டி நறுமணம் இடுவது பற்றிக் கம்பர் வருணிக்கிறார். கி.மு. 3ம் நூற்றாண்டின் பட்டினப்பாலையில் சொல்லப்படுகின்ற தானிய ஏற்றுமதியும் திருமலைத் துறைமுகத்தினூடாகவே நிகழ்ந்திருக்கும். பொன் விளைக்கும் தமிழர் தாயகப் பிரதேசத்தின் உட்புற ஆற்றுச்சாலையும் வெளிவாயிலான இயற்கைத் துறைமுகமும் அதைக் காவல் செய்வதற்காக அலைதழுவும் மலையின் மேல் அமைக்கப்பட்ட விற்கோபுரங்களும் அந்நாட்களில் சுறுசுறுப்பாக இயங்குவதைக் கற்பனைசெய்துபார்க்கும் எந்தவொரு தமிழருக்கும் நாம் எதையெல்லாம் பறிகொடுத்திருக்கிறோம் என்ற ஏக்கம் எழவே செய்யும்.

> தமிழர் தாயகத் தரைத்தோற்றத்தில் மிகவொடுங்கிய பகுதியான திருமலையை சிங்கள மயமாக்கு வதன்மூலம் தென்பகுதியைத் துண்டாடி, தாயகக் கோட்பாட்டிற்கு மிகப்பெரிய சவாலை ஏற்படுத்தலாம் என்பதே சிங்களத்தின் கணிப்பு.

அதன்பின் ஆறாம் நூற்றாண்டில் பாடல் பெற்றபோதும் சோழர் கடலாண்ட காலத்தின் பரபரப்பான கடற்போர்கள் மற்றும் தரையிறக்கங்களின் போதும் திருமலையின் ஆன்மா அதன் உச்சத்தில் இருந்ததெனலாம். அதற்கும் பிறகான நான்கு நூற்றாண்டுகால ஐரோப்பிய ஆதிக்கத்தின் போது தமிழர் தாயகத்தின் விளைநிலங்கள் காடுகளாகிப் பாசனங்கள் தூர்ந்து நெல் வெளியேறிய வாசல்களால் கோதுமை உள்ளே வரத்தொடங்கிய போதும் திருமலையின் முக்கியத்துவத்திற்குக் குறைவேதும் இருக்கவில்லை.'திருகோணமலையை வைத்திருப்பவர் இந்து சமுத்திரத்தின் திறவுகோலை வைத்திருக்கிறார்' என்று 19ம் நூற்றாண்டிலே பிரித்தானியாவின் பிரதமராக விருந்த வெலிங்டன் பிரபு சொல்லியிருக்கிறார். அங்கு அமைக்கப்பட்ட எண்ணைக் குதங்களும், விமானத்தளமும், அயலிலமைந்து விட்ட இல்மனைற் படுகையும் அதன் முக்கியத்துவத்தை மென்மேலும் அதிகரிக்கவே செய்தன.

ஐரோப்பியருக்கு முந்தைய ஐந்நூறு ஆண்டுகால தமிழர் இராட்சிய காலத்தின் போதே சிங்கள இராட்சியமானது, வளமிக்க இந்த மண்ணிலும் பாதுகாப்பரனோடு கூடிய துறைமுகத்திலும் ஒரு 'கண்' வைத்திருந்ததைத் திரு வி. நவரத்தினம் (தமிழ்த் தேசியத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்) குறிப்பிடுகிறார். பிரித்தானியர் வெளியேறிய கையோடு தீவின் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட சிங்களவர், கனிகையை நாடும் காமுகரின் வெறியோடும் மூர்க்கத் தோடும் திருமலையை வசப்படுத்துவதற்கான எத்தனங்களில் இறங்கினர். அதன் விளைவுகளே இன்றைய திருமலையின் நிகழ்வுகள்.

பொதுநலவாய அமைப்பின் உதவியோடமைந்த ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தி மற்றும் குடியேற்றத் திட்டங்கள் சிங்கள நிலப் பறிப்புத் திட்டங்களாக அமைக்கப்பட்டன. பதவியா என்ற படுவில்லிலும் கந்தளாயிலும் இருக்கும் விளைநிலங்களில் குடியேற்றப்பட்ட சிங்களக் காடையருக்கு, தமிழருக்கு எதிரான கலவரங்களில் பயன்படுத்துவதற்கான டைனமைற் குச்சிகளை குடியேற்றத்திற்குப் பொறுப்பான சிங்கள அமைச்சர் சி.பி.டி. சில்வா விநியோகித்தார் என்று அப்போதைய வவுனியா பா.உ சுந்தரலிங்கம் பாராளுமன்றத்தில் குற்றம் சாட்டியிருந்தார். திருமலைத் துறைமுகம் தேசிய மயமாக்கப்பட்டதன் விளைவாகத் தமிழர்கள் அதன் உரிமையை முற்றாக இழந்தனர் எனலாம்.

தமிழர் தரப்பினரிடம் நிரந்தரமான படைக் கட்டுமானம் அமைந்தபின் கண்மூடித்தனமான குடியேற்றங்கள் கட்டுப்படுத்தப்பட்டன. திருமலை பறிபோகிறது என்ற சங்கதி உறைக்கத் தொடங்கியதே தமிழரின் ஆயுதப் போராட்டம் தலைப்பட்ட பின்பு தான். எழிலும் வளமும் மிக்க மலைப்பட்டணம் தமிழர் தாயகத்தின் தலைநகராகத் தேசியத் தலைமையால் தெரிவு செய்யப்பட்தற்கான காரணங்கள் சாதாரணமானதாக இருந்திருக்க முடியாது. இருப்பினும் திருமலையின் மீதான சிங்களக் காமம் இன்னமும் தீரவில்லை என்பது கண்கூடு. அது திடீரென முனைப்புப் பெற்றதுபோலத் தோன்றுவதற்கான பின்புலங்கள் ஆய்விற்குரியவை.

தமிழர் தாயகக் கருத்துக்கள் அரசியல் வகையில் முனைப்புப் பெற்றபோது, தமது இயல்பின்படி பிரச்சினைகளின் அடிவேர்களைப் பாராது அடக்கும் வழியையே தேடிய சிங்களம், பெருமெடுப்பிலான வன்முறைப் பிரயோகம், கருத்து முறியடிப்பு, மற்றும் நடைமுறைத் தடங்கல்களை ஏற்படுத்தல் என்னும் மும்முனைச் செயற்பாட்டில் இறங்கியது. தாயகக் கோட்பாட்டுக் கருத்தைத் தெரிவிப்பதையும் செயல்களால் நாடுவதையும் தண்டனைக்குரிய குற்றமாக்கும் புதிய அடக்குமுறைச் சட்டங்களை அமைத்தல், தாயக நிலப்பரப்பை நிருவாகம், போக்குவரத்து மற்றும் தொழில் முறையில் ஒன்றிலொன்று சார்ந்திரா வண்ணம் அல்லது தொடர்புறா வண்ணம் துண்டாடுதல், உட்பிரிவினைகளை ஏற்படுத்தித் தூண்டுதல் என்பன முக்கியமான தடங்கல்கள்.

தமிழர் தாயகத் தரைத்தோற்றத்தில் மிகவொடுங்கிய பகுதியான திருமலையை சிங்கள மயமாக்குவதன் மூலம் தென்பகுதியைத் துண்டாடி, தாயகக் கோட்பாட்டிற்கு மிகப் பெரிய சவாலை ஏற்படுத்தலாம் என்பதே சிங்களத்தின் கணிப்பு. தமிழர் தாயகத்தின் கீழைக் கரையோரமாக காங்கேசன்துறையில் இருந்து பூமுனை வரை செல்லும் நெடுஞ்சாலையைச் செயலிழக்க வைத்ததுடன் திருத்துவதற்கான வாய்ப்புக்களையும் உதாசீனம் செய்து நேரடியாக இன்னுமொரு தமிழ்ப் பிரதேசத்திற்குள் நுழைய முடியாதபடி திருமலையைப் போக்குவரத்து அளவில் தனிமைப் படுத்தியதில் சிங்களம் ஓரளவு வெற்றியைக் கண்டிருக்கிறது. இப்போது அரச நிருவாகத்திலும் சமயம் மற்றும் சேவைக் கட்டுமானங்களிலும் சிங்கள மேலாளர்களை நிறுத்துவதன் மூலமும் திருமலையின் ஒட்டுமொத்த இயக்கத்தைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முனைகிறது. அதற்குத் தடையாக இருக்கும் கருத்தாளர்கள் கொல்லப்படுகிறார்கள். முக்கிய இடங்களில் இருக்கும் தமிழர்களை இனக்கல வரங்கள், படையினரின் படுகொலைகள் மற்றும் அடாவடிகள் போன்றவற்றால் இடம்பெயர்க்கும் முயற்சிகள் நிகழ்கின்றன. அவ்வகைக் கலவரங்களை உண்டாக்குவதற்கான செயலாகவே புத்தர்சிலை விடயத்தையும் நாம் பார்க்க வேண்டும். இப்போது கலவரங்களால் இடம்பெயர்ந்தவர்களுக்கு நன்மை செய்வது போல வேறு இடங்களில் தங்குமிட ஏற்பாடுகள் செய்து நிரந்தரமாகவே வெளியேற்றி விடவோ அல்லது தமிழர் குடிப்பரம்பலை ஐதாக்கவோ முயற்சிகள் நிகழலாம். இதன் வெளிநீட்டங்களே திருமலையின் கலவரங்கள்.



ஆனால் சம்பூர் மீதான விமானத் தாக்குதலுக்கு இந்த நாட்டம் மட்டுமே காரணமாயிருப்பதாகத் தெரியவில்லை. வேட்டையாடும் மிருகத்திற்கு வேட்டைப் பொருளின் தசை பற்றிய பிரக்ஞை மட்டுமே இருப்பதைப் போல உலக இராச தந்திரிகளுக்கும் ஒரு தரைப் பிரதேசத்தின் பொருளாதார மற்றும் பாதுகாப்புப் பெறுமானமே கருத்திற்குரியது. அந்த வகையில் தமிழீழத்தின் உற்பத்திப் புலங்கள் போக, பாதுகாப்பு மற்றும் பொருளாதார வகையில் முக்கியம் பெறுவது மூன்று புள்ளிகள். அவை காங்கேசன்துறை, ஆனையிறவு மற்றும் திருகோணமலை. அவற்றில் சேது சமுத்திர முக்கியத்துவம் ஏற்பட்டாலே தவிர காங்கேசன் துறைக்குப் பாதுகாப்புப் பரிமாணம் மட்டுமே தற்போதைக்கு உண்டு. ஆக, சம காலத்தில் அதிமுக்கியம் பெறுபவை ஆனை யிறவும் திருகோணமலையுமே.

இப்போது பன்னாட்டுப் பிரதிநிதிகள் இலங்கையிலே தமிழருக்குச் சரியாசனம் தருவதற்கான முக்கிய காரணிகளில் முதலாவது, சிறிலங்காவின் எந்தவொரு பொருளாதார இலக்குகள் மீதும் செல்வாக்குச் செலுத்தும் திறனைப் புலிகள் ஒன்றுக்கு மேற்பட்ட தருணங்களில் நிரூபித்திருப்பது. இரண்டாவது, துறைமுகம், விமானத்தளம், தொழிற்சாலை, மீன்பிடி மற்றும் மனிதவளம் போன்ற செல்வங் களைக் கொண்டுள்ள குடாநாட்டின் வாசலும் பாதுகாப்பரணுமான ஆனையிறவு புலிகளின் கையில் இருப்பது. மூன்றாவது, திருமலைத் துறைமுகத்தின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தும் படை வீச்செல்லைக்குள் புலிகள் நிலைகொண்டிருப்பது. தமிழரின் பேரம் பேசும் பலம் என்ன என்ற உலக இராசதந்திரக் கேள்விக்கு மேற்கூறிய விடயங்களின் அடிப்படையிலேயே பதில் அமைய முடியும். அந்த அழுத்தங்களின் விளைவே தென்னை மரத்தில் தேள்கொட்டியதற்குப் பனை மரத்தில் நெறிகட்டியது போல படைத்தளபதி தாக்கப்பட்டதற்குப் பதிலாக சம்பூர் சாடப்பட்டது.

சிறிலங்கா அரசின் அண்மைக்காலப் போராயுதக் கொள்வனவை நோக்கும் போது அதிலும் ஒரு கோலம் புலப்படுகிறது. அவற்றில், தரைக்கண்காணிப்பு ராடர்கள், கவசத் துருப்புக்காவிகள், கண்ணிவெடிப் பாதுகாப்பு வாகனம், மிலான் டாங்கி எதிர்ப்பு ஏவுகணை பொருத்திய ஜீப், பல்குழல் ஏவுகணை செலுத்திகள் T-55 டாங்கிகள் என்பனவற்றைத் தொகுத்துப் பார்த்தால் அவை வேக நகர்வையும் திறந்தவெளிச் செயற்பாட்டையும் கோடிகாட்டுகின்றன. இவையனைத்தும் வான் வழியாக நகர்த்தப்படக் கூடியவை என்பதும், இவையனைத்திற்குமாகத் தரையைத் தொடாமலேயே வினியோகிக்கும் ஆற்றல் உள்ள ஹேர்குலிஸ் C-130 விமானத்தையும் சிறிலங்கா கொள்வனவு செய்கின்றது என்பதும் கவனிப்பிற்குரியவை. தரையில் வேகம் குறைவான பெரிய ஆர்டிலறிகள் தவிர்க்கப்பட்டிருப்பதைப் போலவே கடலிலும் தரையிறங்குகலங்கள் இம்முறை நாடப்படவில்லை. மாறாக, கடற்கலங்களில் இருந்து ஏவக்கூடிய மோட்டார்களும், வேகத்தாக்குதற் கலங்களும், கடற்கண்ணிகளும் கோரப்பட்டிருக்கின்றன. கடலிலிருந்து ஆதரவு தரக்கூடியதும் கோடை காலத்தில் திடமான தரையாக இருப்பதுமான ஆனையிறவை அண்டிய பெருவெளிகள் போன்ற இடங்களில் மேற்கூறிய படைக்கலங்கள் தொகுப்பாகப் பயன்படுத்தபடக் கூடியவை.

வரலாற்றின் வழித்தடத்தில் திருமலை என்பது தமிழர்தாயக உணர்வுமையமாகவே இருந்து வந்திருக்கிறது. உன்னதமான பல போராளிகளையும் அவர்களைப் பெற்ற தாய்ச்சமூகத்தையும் உடைய திருமலையின் ஆன்மா உள்ளூறக் குமுறிக்கொண்டிருக்கிறது. எழுச்சிப் பேரணிகளிலும், உணர்வுக் கூட்டங்களிலும், போர்ப் பங்களிப்பிலும், அண்மைத் தேர்தலிலும் அதன் உணர்வுக் குமுறலின் ஒலி கேட்கவே செய்தது. அதன் வேதனையை பேச்சுவார்த்தைகள் தீர்த்து வைக்கவில்லை என்பது வெளிப்படை.

இந்த நாட்டில் இரத்தம் சிந்துதலைத் தவிர்க்க விரும்புபவர்கள் சிங்கள மக்களுக்கு மூன்று உண்மைகளைக் கற்றுத்தர வேண்டும். முதலாவது, தமிழர் தரப்பு சிங்களப் படைதரப்பைத் தாக்குவது ஒரு குற்றமல்ல. அது உயிர் பிழைப்பதற்கான ஒரு உத்தி. இரண்டாவது தமிழர் நாட்டைப் புதிதாகப் பிரிக்க நினைக்கவில்லை. ஐரோப்பியரின் நிருவாக வசதிகருதிய கோர்ப்பின் விளைவாக நிருவாகத்தால் மட்டும் ஒன்றிணைந்த இரு தேசங்களில் ஒன்று தனது விருப்பிற்கமையப் பிரிந்து செல்ல நினைப்பதே தமிழரின் போராட்டச்செய்தி. அது சிங்களவர்களுக்கு எதிரான யுத்தமல்ல. மூன்றாவது, தமிழர் தாயகத்தின் ஒவ்வொரு அங்குலத்திற்குமாகப் போராடுவது அந்த மண்ணின் மைந்தர்கள். அதை எதிர்த்து நிற்கும் உங்கள் வீரர்கள் அந்நியர்கள். இந்த உண்மைகளைத் துணிந்து சொல்லும் வீரம் சிங்களத் தலைவர்களில் எவருக்கும் இருந்ததில்லை. மகிந்தரும் அதற்கு விதிவிலக்கானவர் அல்லர்.



இறக்கும் தருவாயிலுள்ள ஒரு உயிருக்கு அவசர அவசரமாக சத்திர சிகிச்சை அல்லது அவசர சிகிச்சை செய்தல் இறந்துவிட்டால் சடங்கோ அல்லது கிருத்தியமோ சுடலைக்குப் பிணத்தை எடுக்கமுன் செய்வர். புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை சத்திரசிகிச்சையா? சாவீட்டுக் கிருத்தியமா?
இப்பிராந்திய அரசியலில் இச் சமாதானத்தை விடுத்து அரசியல் விமர்சனம் செய்ய முடியாதவாறு இத்தீவின் அரசியல் முக்கியத்துவமானது. எனவே ஐரோப்பிய ஒன்றியத்தின் புலிகள் மீதான தடை சர்வதேச அரசியலில் குறிப்பாக இப்பிராந்திய அரசியலில் அதிக கவனத்தை ஈர்க்கிறது.

விடுதலைப் புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத் தடை குறித்து அரசியல் விமர்சகர்களின் கருத்துக்கள் பெருவெட்டாக இருவேறாக உள்ளது. ஒன்று யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் மரணத்தைத் தவிர்ப்பதற்கு உதவக் கூடிய சத்திரசிகிச்சை இது என்பது. இரண்டு இறந்துபோன ஒப்பந்தத்தின் பிணத்தை எடுக்கவைக்கும் இருக்கின்றது என்ற வகை விமர்சனம்.

இதன்படி விடுதலைப் புலிகள் இயக்கம் சர்வதேச அரங்கிற்கு வந்துவிட்டதும் அரங்கில் அதற்குக் கிடைக்கப் பெற்ற அங்கீகாரமும் சர்வதேசத்திற்குத் தம் நடவடிக்கை குறித்துப் பொறுப்புச் சொல்லும் கண்டிப்பான கடப்பாட்டை அதற்குக் கொடுத்திருந்தது. சமாதானம் குறித்த சர்வதேச சமூகத்தின் ஆர்வம், ஈடுபாடு, நலன் என்பவை குறித்தும் கவனத்துடன் நடக்கவேண்டிய பொறுப்பும் புலிகள் இயக்கத்திற்கு இருந்தது. இதுதான் சமாதானத்திற்குப் பொருந்திவராத மகிந்த சிந்தனையைக் கொண்ட அரசாங்கத்துடனும் கூடபேசப் புலிகளை ஜெனீவாவிற்குப் போக வைத்தது.


அதாவது ஒட்டுக்குழுக்களை வைத்து மக்களையும் போராளிகளையும் படுகொலை செய்து புலிகளை தொடர்ச்சியாய் சீண்டுகின்ற போதும், யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்பது என்பதையே புதிய அரசு சர்சையாக்கிய போதிலும், விடுதலைப் புலிகளின் பயணத்திற்கு ஒரு உலங்கு வானூர்தி வழங்கப்படுவதைக் கூட தடுத்த தேவையில்லாததாகவும் ஆகிவிட்டது. புலிகள் யுத்தத்தில் ஆர்வமடைவதை இத்தடை யதார்த்தமாக்கிவிட்டது.

அதே நேரம் மகிந்த சிந்தனையை முன்வைத்து - ஒரு வகை அர்த்தத்தில் யுத்தத்தை முன்வைத்து பதவிக்கு வந்த அரசாங்கத்திற்கு இத்தடை அதை நிறைவேற்றுவதற்கான மேலுமொரு அழுத்தத்தை உருவாக்கியிருக்கின்றது. எவ்வாறெனில் சர்வதேச சமூகத் திடமிருந்து ஓரங்கட்டப்பட்டு புலிகள் பலவீனமுற்றிருக்கும் இத்தருணத்தை அரசாங்கம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற இனத் தீவிரவாதக் குரல் தெற்கில் மேலெழும்புகின்றது. மகிந்த அரசாங்கத்திற்கான ஆதரவுத் தயவைக் கொடுக்கும் சிங்களத் தீவிரவாதக் கட்சிகளான J.V.P மற்றும் கெல உறுமய என்பவற்றின் ஆதரவுகள் வலிமை மிக்க அவற்றின் நிலைப்பாட்டுக்கான அழுத்தமாக மாறும் சூழலை புலிகள் மீதான ஐரோப்பியத் தடை உருவாக்கிவிட்டது.

இதனடிப்படையில் பார்த்தால் நடைமுறையில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் நீர்த்துப் போயிருந்தும் கூட

# ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை என்ன செய்யும்?






சாவீட்டுக் கிருத்தியமாக இது அமையப் போகின்றது என்பது.

இதில் முதல்வகை விமர்சனத்தைப் பார்க்கலாம் சர்வதேச அரங்கில் இடம்பிடித்த இந்த விடுதலைப் போராட்டத்தை, ஒப்பீட்டளவில் பெற்றுக்கொண்ட அங்கிகாரத்தை இழந்து விட்டுத் தனிமைப்பட விடுதலைப் புலிகள் இயக்கம் விரும்பாது. எனவே அத்தகைய ஓர் இழப்பைத் தனிமைப்படுத்தலை ஐரோப்பிய ஒன்றியத்தடையின் மூலம் புலிகளுக்கு வழங்கும்போது யுத்த முனைப்பை கைவிட்டு அரசபடைகளின் எந்த ஓர் சீண்டலையும் சகித்துக் கொள்வதுடன் சர்வதேச சமூகம் அரசை சமாதானம் குறித்து நெகிழ்விக்கும் என்பதை நம்பிக்கையுடன் காத்திருக்க வைக்கும் நிர்ப்பந்தச் சூழலை புலிகளுக்கு உருவாக்கும்.

அதே நேரம், விடுதலைப் புலிகளைத் தடை செய்ததன் பின்னர் அரசாங்கத்தின் மீது உயர் அழுத்தத்தைப் பிரயோகிக்க விடுதலைப் புலிகள் தடை ஒரு முகாந்தரமாக அமையும். சிங்கள மக்கள் வெறுப்படையாமல், சிங்கள இனத்துவத் தீவிரவாத கட்சிகள் எதிர்ப் போராட்டங்கள் நடத்த முடியாமல் புலிகள் தடையேற்படுத்தித் தரும் புறச்சூழலில் அரசின் மீது மேற்கு லகத்தால் எந்த ஓர் உயர் அழுத்தத்தையும் பிரயோகிக்க முடியும். கூடவே புலிகள் தடையால்

அல்லது இறந்தும் கூட முழுத்தீவிர யுத்தத்திற்குள் இரு தரப்பும் இறங்க முடியாததற்கான அல்லது ஒப்பந்தத்தைப் பாடையேற்ற முடியாததற்கான காரணமாக விருந்த புறச்சூழலை ஐரோப்பிய ஒன்றியம் பாழாக்கி விட்டது என்பதுதான் இரண்டாவது வகை விமர்சனமாகும்.

**– கு. பிரபுத்திரன்**

இதில் உண்மை எது இதுதான் மிகப் பிரமாண்டமான கேள்வி இதற்கு இச்சமாதானத்தில் சிங்கள அரசிடமும் சர்வதேச சமூகத்திடமும் விடுதலைப் புலிகளிடமும் தனித்தனியான நிகழ்ச்சி நிரலே உண்டு. விடுதலைப் புலிகளின் நிகழ்ச்சி நிரலில் இத்தகைய ஐரோப்பிய ஒன்றியத்தடை எதிர்பார்க்கப் படாததல்ல. சிங்கள அதிகார வர்க்கம் சமாதான நளிமுறையில் தமிழர்களுக்கும் பேரம் பேச இடமளித்து. அவர்களது அரசியல் அபிலாசைக்கு நியாயமான உரிமையை வழங்கும் என்று விடுதலைப் புலிகள் எதிபார்க்கவில்லை.

சமாதானத்தில் சிங்கள அதிகாரத் தரப்பின் நிகழ்ச்சி நிரல் கொண்டுள்ள சூழ்ச்சி சதிகரமான உள்நோக்கத்தை நிறைவு செய்யும் வரைக்கும் தான் யுத்தநிறுத்த ஒப்பந்தம் சக்தியுள்ளது. அத்தகைய உள்நோக்கம் புலிகளிடம் வெல்ல முடியாதபோது, அதில் சிங்கள அரசு தோல்வி காணும்போது அந்த ஒப்பந்தப் பத்திரம் வெறும் வெற்றுத் தாளாகவும் அதன் மீது இடப்பட்ட கையெழுத்து வெறும் மையாகவும் ஆகிவிடும் என்பது விடுதலைப் புலிகளால் உணரப்பட்டதே.

இத்தகைய ஒரு தருணத்தில் இத்தீவின் அரசியலில் ஆர்வமும், நலனும் கொண்டிருக்கும் சர்வதேச சமூகம் போராட்டத்தில் உறுதிகொண்ட புலிகள் இயக்கத்தை யுத்த நிறுத்தத்திற்குள் சிக்கவைக்க அழுத்தத்தைப் பிரயோகிக்கும் என்பது ஏற்கனவே உணரப்பட்ட ஒன்று இதற்காக இல்லாத காற்றில் கயிறு திரிப்பதாகக் காட்ட புலிகளால் இயலாது. யாரிலும் தங்கியிராத, சொந்த மக்களின் காலில் நின்று நடக்கும் இவ் விடுதலைப் பேராட்டத்திற்கு கொடுக்கக்கூடிய சர்வதேச அழுத்தம் இத்தகைய தடைகளைத் தவிர வேறெதுவுமல்ல என்பதும் தெரிந்துதான் இருந்தது.

எதிர்பார்க்கப்படும் எந்த ஒரு விடயமும் நிகழ்ச்சி நிரலுக்குள் உள்ளடக்கப்பட்டிருக்கும். நிகழ்ச்சி நிரலுக்குள் உள்ளடங்கிய எந்த ஒரு விடயமும் அந்த அமைப்பின் பூரண ஆளுகைக்குட்படிருக்கும். எனவே விடுதலை குறித்த புலிகளின் நிகழ்ச்சி நிரலை இத்தடை குளப்பாது.

**இத்தகைய ஒரு தருணத்தில் இத்தீவின் அரசியலில் ஆர்வமும், நலனும் கொண்டிருக்கும் சர்வதேச சமூகம் போராட்டத்தில் உறுதி கொண்ட புலிகள் இயக்கத்தை யுத்த நிறுத்தத்திற்குள் சிக்கவைக்க அழுத்தத்தைப் பிரயோகிக்கும் என்பது ஏற்கனவே உணரப்பட்ட ஒன்று இதற்காக இல்லாத காற்றில் கயிறு திரிப்பதாகக் காட்ட புலிகளால் இயலாது. யாரிலும் தங்கியிராத, சொந்த மக்களின் காலில் நின்று நடக்கும் இவ் விடுதலைப் பேரோட்டத்திற்கு கொடுக்கக் கூடியசர்வதேச அழுத்தம் இத்தகைய தடைகளைத் தவிர வேறெதுவுமல்ல என்பதும் தெரிந்துதான் இருந்தது**

பிராந்திய நிலைச் சக்தியின் விருப்பு வெறுப்புக்களைக் கூட சமரசம் செய்துகொள்ளக் கூடிய வாய்ப்பிருக்கின்றது. எனவே, மேற்கின் சமாதானம் குறித்த கண்டிப்பான வேண்டு கோள்களைத் தட்டிக்கழிக்க முடியாதவாறான இக்கட்டுக்குள் அரசை சிக்கவைத்துவிடலாம்.

இந்த அடிப்படையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை மரணப்படுக்கையில் விழுந்துவிட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்கு ஒரு சத்திர சிகிச்சையாக அமையக் கூடியது. என்பது முதல் வகை விமர்சனம்.

இரண்டாவது மரணித்துவிட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு இத்தடை பிணமெடுக்குமுன் நடக்கும் ஒரு ஈமச்சடங்கா - சாவீட்டுக் கிருத்தியமாக இது போதும் புலிகளின் மூத்த அரசியல இராணுவ முக்கியஸ்தர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்த போதும் எல்லாவற்றிற்கும் மேலாக சமாதானத்தில் மகிந்த எந்த ஒரு விடயத்திலும் முன்னோக்கி நகரமாட்டார் என்பதை திட்டவட்டமாக உணர்திருந்த போதிலும்கூடப் புலிகளால் ஒரு முழுத்தீவிர யுத்தத்திற்குப் போக முடியவில்லை. ஆனால், இப்போது சர்வதேசத்திற்குப் பொறுப்புச் சொல் லும் அல்லது சர்வதேசத்தின் ஈடுபாட்டை மதித்து நடக்கும் கடப்பாடு ஐரோப்பியத் தடையால் களையப்பட்டுவிட்டது.

எனவே, இப்போது புலிகளுக்கு தம் அமைப்பினருக்கும், தம் மக்களுக்கும் பொறுப்புச் சொல்லும் கடப்பாடு முதல் தெரிவாகியதுடன் வெறெதனையும் கருத்தெடுக்கத்

**“ தமிழ் மக்கள் தமது உடற்தசையைத் தாமே சுவைப்பார்கள் என்று 1956 ஆம் ஆண்டில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா பூடகமாகச் சொன்னார். இதை அரச பயங்கரவாதத்தின் தாரக மந்திரமாகக் கொள்ளலாம். ”**

# அமைதியும் அரச பயங்கரவாதமும்

**எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது மண்ணை முதலில் மீட்டெடுப்பது இன்றைய வரலாற்றின் தேவை. இந்த வரலாற்று நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது**

**– தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்**

**- கலாநிதி க.சோமாஸ்கந்தன் -**



சிறிலங்காவின் நவீன அரசியல் வரலாற்றின் முக்கிய குறியீடுகளாகத் தமிழ் மக்களின் உரிமைப் போரும், தமிழர்களுக்கு எதிரான அரச பயங்கரவாதமும் இடம் பெறுகின்றன. உரிமைக்கோரிக்கையை நசுக்குவதற்கு அரசு ஆயுத பலத்தைப் பயன்படுத்துகிறது. தமிழர்களைத் தாக்கியழிக்கும் ஒரே நோக்கிற்காக முப்படைகளையும் அரசு பலப்படுத்துகிறது. அவை செய்யும் வன்முறைகளும், படுகொலைகளும் அரச பயங்கரவாதமாக உருப் பெற்றுள்ளன. அரச பயங்கரவாதத்தின் உச்சமாக 1983 ஆம் ஆண்டின் இன அழிப்பு நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன. நாட்டின் உயர் அரசியற்பீடம் தொட்டு அடிமட்டச் சிங்கள மக்கள் வரையிலானோர் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளில் பங்கேற்றனர். ஆயுதப் படையினரும், காடையர்களும் அதேயளவு பங்களிப்புச் செய்தனர். சிங்கள தேசத்திற்கு எதிராகக் கிளம்பிய உலகளாவிய கண்டனம் காரணமாக மீண்டுமொரு 1983 கலவரம் வரக்கூடாது என்பதில் சிங்கள அரசு மிகவும் கவனமாக இருக்கிறது.

ஆனால் 2006 மார்ச்சு - ஏப்பிரல் மாதங்களில் மீண்டுமொரு 1983 கலவரத்தின் அறிகுறிகள் திருகோணமலையில் தோன்றின. இதில் அரச இயந்திரமும், அரச படைகளும், அவர்கள் ஆதரவு பெற்ற காடையர்களும் தமிழர்கள் மீதான தாக்குதல்களை மேற்கொண்டனர். உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் மார்ச்சு 30இல் நடைபெற்றன. தமிழ் வேட்பாளர்கள் இரு முக்கிய பிரசாரக் கருவிகளைப் பயன்படுத்தினர். சென்ற வருடம் திருகோணமலை சந்தைப் பகுதியில் இரவோடு இரவாக வைக்கப்பட்ட புத்தர் சிலை, ஜனவரி 02, 2006இல் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்ட ஐந்து தமிழ் மாணவர் விவகாரம் ஆகியவற்றை முன்வைத்து நடத்தப்பட்ட பிரசாரம் பட்டினசபை, பிரதேசசபை, ஆகியவற்றின் கட்டுப்பாட்டை ரி.என்.ஏ வேட்பாளர்களுக்கு வழங்கியது. வரலாறுகாணாத இந்த வெற்றிக்கு வன்னியசிங்கம் விக்னேஸ்வரன் என்ற திருகோணமலைத் தமிழர் பேரவைத் தலைவர் மூலகாரணமாவார்.இவர் ஏப்பிரல் 07,2006 ஆம் நாள் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவர் பணியாற்றும் இலங்கை வங்கி வாசலில், அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் வைத்துப் பட்டப்பகலில் சிறிலங்காப் படைகளின் ஒட்டுக்குழுவைச் சேர்ந்த இருவரால் சுடப்பட்டார். ஏப்ரல் 11 ஆம் நாள் விக்னேஸ்வரனின் இறுதிக்கிரியைகள் நடைபெற்றபோது திருகோணமலை தீப்பற்றும் நிலையில் இருந்தது. அதே நாளில் தம்பலகாமத்தில் நடத்தப்பட்ட கடற்படை வாகனத்தின் மீதான கிளைமோர் குண்டுத் தாக்குதலில் பதினொரு கடற்படையினர் கொல்லப் பட்டனர். அத்தோடு திருகோணமலை 1977, 1983ஆம் ஆண்டுகளில் நடந்த தமிழினப் படுகொலைகளுக்குத் தயாராகிவிட்டது, ஏப்பிரல் 12ஆம் நாள் மாலை 3.20 மணியளவில் திருகோணமலை மரக்கறிச்சந்தை வாயிலில் ஒரு குண்டு வெடித்தது. மூவினத்தவரும் கொள்வனவு செய்யும் இச்சந்தை பெரும்பான்மையினர் கட்டுப்பாட்டில் இயங்கிவருகின்றது. சந்தைக்கு வந்த ஒரு சிங்களச் சிப்பாயும் இக்குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார்.

உடனடியாகத் தமிழர்கள் மீதான தாக்குதல்களை ஆயுதப் படையினர் தொடங்கினர். மீன் சந்தையில் ஆதிக்கம் செலுத்தும் சிங்களக் காடையர் கும்பல்கள் படையினரை விஞ்சும் வகையில் தாக்குதல்களை தொடங்கினர். திருகோணமலை நகரின் சண்டியர்கள் எனப்படும் கோரியாவா பிராந்திய மீனவர்கள் தாக்குதலுக்குத் தலைமை தாங்கினர். சரியாக மாலை 4.15 மணிக்கு முன்பு திட்டமிட்டபடி தாக்குதலின் இரண்டாம் கட்டம் தொடங்கியது. ஒரு ஜே.வீ.பி அரசியல் பிரமுகர் தலைமையில் கந்தளாய் மற்றும் சேருநுவரப் பகுதிகளிலிருந்து ஊர்காவற்படையினரும் பிற சிங்கள இளைஞர்களும் நான்கு லொறிகள், ஒரு பஸ்வண்டி என்பவற்றில் வந்து சேர்ந்தனர். இவர்கள் முழங்கால்களுக்கு மேற்பகுதியை மாத்திரம் மூடும் காற்சட்டை அணிந்திருந்தனர். அனைவரும் தமது தலைமுடியைக் கட்டையாக வெட்டியிருந்தனர். அவர்கள் கைகளில் வகைவகையான ஆயுதங்கள் இருந்தன.

முப்படையினரின் பாதுகாப்புடன் இவர்கள் தமிழர்களின் வீடுகள், கடைகள் மீது தாக்குதல் தொடுத்தனர். தமிழர் கடைகளில் உள்ள பொருள்கள் மிகவும் கவனமாக லொறிகளில் ஏற்றப்பட்டுக் கடற்படை முகாமிற்கு எடுத்துச்செல்லப்பட்டன. அதே கடைகள் பின்பு தீயிடப்பட்டன. முஸ்லிம்களுக்குச் சொந்தமான கடைகளுக்கும் இதே கதி நடந்தது. மணிக்கூட்டுக் கோபுரத்தடியில் ஆரம்பித்த வன்முறைகள் லிங்கபுரம், அன்புவெளிபுரம் வரை பரவியது. இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான விற்பனைநிலையம் தாக்குதலுக்கு உட்பட்டது. ஒரு தமிழ் பணியாளர் கத்திவெட்டில் படுகாயம் அடைந்தார். திருகோணமலை நகரில் வாழும் தமிழர்கள் ஒட்டுமொத்தமாக அகதி முகாம்களுக்கு விரட்டப்படப் போகிறார்கள் என்ற பலமான வதந்தி பரவத்தொடங்கியது.

இறுதி நடவடிக்கை என்று சொல்லப்படும் தமிழர்களை விரட்டும் நடவடிக்கை அன்றிரவு தொடங்கும் என்று பரவலாகப் பேசப்பட்டது. தமிழ்க் குடி மக்கள் செய்வதறியாது தவித்தனர்.

நிலைமை சரியாவதற்கிடையில் 14ஆம் நாள் ஒரு சிங்கள இளைஞனின் உடல் தூரண்காட்டில் கண்டுபிடிக்கப் பட்டது. இதையடுத்து நடேசபுரத்தில் கலவரங்கள் ஆரம்பித்தன. நடேஸ்வரர் சிவன் கோயில் 1983 ஆம் ஆண்டில் வெந்து சாம்பரானது. புனருத்தாரணம் செய்யப்பட்ட ஆலயம் மீண்டும் இப்போது அழிக்கப்பட்டது. கர்நாடகத்தைச் சேர்ந்த ஒரு சோதிடர் உட்பட பல உயிர்கள் பறிக்கப்பட்டன. திருகோணமலை இன்னும் வழமைக்குத் திரும்பவில்லை. 1983 மீண்டும் வராது என்று சொன்னவர்கள் தமது கருத்தை மாற்றிவிட்டார்கள்.

ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்பதற்கு அமைவாக அரச பயங்கரவாதத்திற்கு எடுத்துக் காட்டாகத் திருகோணமலை விளங்குகிறது. திருமலையைச் சிங்கள மயமாக்கவேண்டுமென்ற திட்டம் நிறைவேறும்வரை அங்கு அரச பயங்கரவாதம் தொடரும். அதைத் தடுக்கும் நடவடிக்கையைத் தமிழர்கள் எடுத்தபடியே இருப்பார்கள். 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 74 வீதமாக இருந்த தமிழ் மக்கள் தொகை படிப்படியாகக் குறைந்து 50 வீதத்திற்கும் கீழ் சென்றுவிட்டது. தமிழ்மக்கள் தமது உடற்தசையைத் தாமே சுவைப்பார்கள் என்று 1956 ஆம் ஆண்டில் எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்கா பூடகமாகச் சொன்னார். இதை அரச பயங்கரவாதத்தின் தாரகமந்திரமாகக் கொள்ளலாம்.

தமிழர்களுக்கு எதிரான முதலாவது இனக்கலவரம் 1956 இல் ஆரம்பமாகியது. இது நாடு சுதந்திரம் பெற்ற எட்டாவது வருடம் நடைபெற்றது. திருகோணமலையில் அண்மையில் நடந்த கலவரத்தோடு ஐம்பது வருடங்கள் சென்றுவிட்டன. சிங்களத் தலைமை பாடம் படித்ததாகவோ, தமது நடைமுறைகளை மாற்றிக்கொண்டதாகவோ வரலாறில்லை.

தமிழர்களுடைய உரிமை மறுப்பும், உயிர் பறிப்பும் தொடர்ந்தவண்ணம் உள்ளது. ஆரம்பத்தில் தமது உரிமைக் கோரிக்கையைத் தமிழ் மக்கள் சாத்வீக முறையில் பாராளுமன்ற நடைமுறைகளுக்கு உட்பட்ட விதத்தில் நடத்தினார்கள். அவர்கள் பிரிவினை கோரவில்லை. தனி நாட்டுக் கோரிக்கையை முன்வைக்கவில்லை. அரச பயங்கரவாதம் 1956 இல் ஆரம்பமாகியதாக ஆய்வுகள் முடிவு கட்டியுள்ளன. சத்தியாகிரகிகள் மீதான தாக்குதல்கள் பொலிசார் முன்னிலையில் நடைபெற்றது. தலையிட வேண்டாம் என்ற கட்டளை பொலிசாருக்கு அரசுத்தலைமையினால் விடுக்கப்பட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து கொழும்பு நகரிலும், புறநகர்ப் பகுதிகளிலும், தமிழ் கடைகள் தாக்கப்பட்டன. வேகமாக நிலமை கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டது. ஆனால் அம்பாறை, இன்கினியாகலையில் குடியேற்றப்பட்டிருந்த தமிழர்கள் விரட்டியடிக்கப்படும் வரை தாக்குதல்கள் தொடர்ந்தன. அதே தாக்குதல் மூலம் முஸ்லிம்களும் விரட்டப்பட்டனர். இனப்பிரச்சனையும் இனவேறுபாடும் இதற்கு முன்பு ஆழப் புதைந்திருந்தன. 1956க்குப் பின் அவை வெளியரங்கிற்கு வந்ததோடு அரசியல் சக்தியாகவும் மாறிவிட்டன. இவை இன அழிப்புக்கும் இனப்பாகுபாட்டிற்கும் அடிப்படைக் காரணியாக அமைகின்றன. 1956 தொடக்கம் இன்று வரை தமிழர்களுக்கு எதிரான துவேசத்தை சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகளும், பிற ஊடகங்களும் வெளிப்படுத்துகின்றன. இலங்கையில் அரசுடைமைப் பத்திரிகைகள் மும்மொழியிலும் பிரசுரமாகின்றன. தமிழர்களுக்கு எதிரான பிரசாரத்தை இவை முன்னின்று நடத்துகின்றன. அரசுடமைப் பத்திரிகைகள் இந்த நாட்டிற்குத் தேவைதானா என்று நடுநிலையாளர்கள் கேட்கின்றனர்.

வடகிழக்கு படுகொலைகள் கொழும்பு ஊடகங்களால் மறைக்கப்படுகின்றன, அல்லது திரித்துக் கூறப்படுகின்றன. இச்சம்பவங்கள் தொடர்பாக இராணுவப் பேச்சாளர் செய்யும் அறிவிப்புக்கள் உண்மைக்குப் புறம்பானவையாக இருக்கின்றன. தயங்காமல் பொய்யுரைக்கும் தனிப்பட்ட திறமைக்காகவே இராணுவப் பேச்சாளர் பதவி வழங்கப்படுகிறது. அதே போல் அமைச்சரவையின் ஊடகத் துறைப் பேச்சாளரும் பொய்பேசும் வல்லமை

உடையவராக இருகின்றார். சமஷ்டி ஆட்சிமுறையை நாட்டைத் துண்டாடுதல் என்றும், தாயகம், சுயநிர்ணய உரிமை என்பன வரலாற்று நியதிக்குப் புறம்பானவை என்றும் சிங்களத்தால் கூறப்படுகின்றது. தமிழின அழிப்பையே பேரினவாதம் தனது இலக்காகக் கொண்டுள்ளது. நியாயம் நீதியுள்ள அரசமத்தியில் இல்லாத காரணத்தால் நாடு சிதைவடைந்துள்ளது. பக்கச்சார்பான சட்டங்களும், அவற்றை அமுலாக்கும் அதிகார பீடங்களும் தமிழர்களுடைய தனிநாட்டுக் கோரிகையை வலுப்படுத்துகின்றன.

மனோரீதியாக இலங்கை பிளவுபடுவதற்குக் காரணமான 1983 ஆம் ஆண்டுக் கலவரம் பற்றி அதிகம் பேசப்படாத ஒரு முக்கிய விடயம் இருக்கிறது. அது அரச பயங்கரவாதத்தின் இன்னுமோர் முகமாக அமைகிறது. யூலை 1983இல் எரியூட்டி அழிக்கப்பட்ட கொழும்பு மாவட்டத்திலுள்ள தமிழர்களுக்குச் சொந்தமான வீடுகள், கடைக்கட்டிடங்கள், தொழிற்சாலைகள் என்பவற்றை மீள்கட்டமைப்புச் செய்வதற்காக றேப்பியா (REPIA) என்ற சுருக்குப் பெயரால் அழைக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் தொழிலகங்கள் மீள்கட்டமைப்பிற்கான ஆணையத்தை (REHABILITATION OF PROPERTY AND INDUSTRIAL AUTHORITY) உருவாக்கியது. ராஜாங்க அமைச்சர் ஆனந்த திசாடி அல்விஸ் ஆங்கிலத்தில் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார் ''தமிழர்களுக்குச் சொந்தமான சேதமடைந்த வீடுகளையும், வர்த்தக நிறுவனங்களையும் ஒரு விரிவானதிட்டத்திற்கு (MASTER PLAN) அமைவாக மீளமைப்பதற்காக அவற்றை அரசு கையேற்கும்'' இதே விடயத்தை அதே அமைச்சர் யூலை 1983 இறுதி வாரத்தில் ரூபவாகினி தொலைக்காட்சியில் தோன்றி சிங்கள மொழியில் பின்வருமாறு தெரிவித்தார். ''பெருமளவு வளத்தை, சேதமடைந்த சொத்துக்களை திருத்தியமைப்பதற்காக அரசு செலவிடவிருப்பதால் அவற்றை உரியவர்களிடம் திருப்பிக் கொடுப்பது நியாயமாகமாட்டாது. எனவே அரசு அவற்றைப்பொறுப்பேற்கும்''

இதில் பொதிந்திருந்த பெருஞ் சதியை தமிழர்களும், வேறு சிலரும் மிக விரைவாகப் புரிந்துகொண்டனர். அரசு ஏவிய காடையர்களும் யூ.என்.பி கட்சியினரும் தமிழர் சொத்துக்களை எரியூட்டுகிறார்கள். பின்பு அதே சொத்துக்களை மீளமைக்க உதவப்போவதாகக் கூறிக் கொண்டு அரசு அவற்றைத் தனது உடமையாக்குகின்றது. இதற்கான றேப்பியா சட்டத்தையும் அரசு உருவாக்கி அமுல்படுத்தத் தயார்நிலையில் இருந்தது. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல தமிழர்களுக்கு நிகழவிருந்த மிகப் பெரிய அநியாயம் நாடுதழுவிய ரீதியில் கிளம்பிய எதிர்ப்பால் தவிர்க்கப்பட்டது. அரசு பயங்கரவாதத்தின் கோரமுகம் என்று றேப்பியா ஆணையைச் சட்டம் வர்ணிக்கப்படுகிறது அது கைவிடப்படுவதற்கு அதுவே காரணமாக அமைகிறது.

சமஷ்டிக் கோரிக்கைப் பிரிவினை என்றும் தனிநாட்டுக் கோரிக்கை என்றும் குற்றம் சொல்வது சிங்களத் தலைமையின் வழமை 1920களில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா சமஷ்டி ஆட்சிமுறைக்கு ஆதரவு தெரிவித்து மேடைதோறும் பேசியுள்ளார். சிலோன் மோர்னிங் லீடர், யூலை17, 1926 இதழில் அவர் "இலங்கையின் ஒவ்வொரு மாகாணத்திற்கும் சுயநிர்ணய உரிமை கட்டாயமாக இருத்தல் வேண்டும்'' என்று கட்டுரை வரைந்தார். 1920களின் பிற்பகுதியில் டொனமோர் ஆணையத்தின் முன்தோன்றிய கண்டி மாவட்டச் சிங்கள அமைப்பின் பிரதிநிதிகள் இலங்கைத்தீவு முப்பெரும் மாவட்டங்களாக வகுக்கப்பட வேண்டும் என்றும் அதிலொன்று வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒன்றினைந்ததாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர். வடக்குக் கிழக்கு ஒன்றினைவை முதன் முதலாக முன்வைத்தவர்கள் கண்டிச் சிங்களவர்களே, தமிழர்கள் அல்ல. தம்மை ஒரு தனிநாடாக வர்ணித்த கண்டிச் சிங்களவர்கள், "தனது வாழ்வை தனது வழியில் செலுத்தவும், தனது தலைவிதியை நிர்ணயம் செய்யும் உரித்துடைய தேசம்'' என்று டொனமோர் ஆணையத்திற்குச் சமர்ப்பித்த மனுவில் தெரிவித்தனர்.

1970 ஆம் ஆண்டுத் தேர்தலில் சமஷ்டிக் கட்சியினர் வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனம் அவர்களுடைய கொள்கையைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. "தமது விவகாரங்களைத் தாமே கவனிக்க வகை செய்யும் சமஷ்டி அரசியல் சாசனம் ஒன்றுதான் தமிழ் பேசும் இனம் அழிந்து போவதைத் தடுக்கும்'' அத்தோடு மிக முக்கியமாகப் பிரிவினைக்கு எதிரான தமது உறுதியான நிலைப்பாட்டையும் அதே விஞ்ஞாபனம் வெளிப்படுத்துகிறது ''எத்தகைய பிரிவினையானாலும் அது நாட்டிற்கோ தமிழ் பேசும் இனத்திற்கோ நன்மை பயக்கப்போவதில்லை என்பதை உறுதியாக நம்புகிறோம். நாட்டைப் பிளவு படுத்தும் எந்தவித அரசியல் இயக்கத்திற்கும் ஆதரவளிக்க வேண்டாமெனத் தமிழ்பேசும் மக்களை வேண்டுகின்றோம்'' இவ்வளவு ஆணித்தரமாகக் கூறப்பட்டிருந்தாலும் சமஷ்டி என்பது நாட்டைப் பிளவுபடுத்தும் நோக்குடையது என்ற தவறான கருத்து நிலையைச் சிங்களத் தலைமை எடுத்தது.

இலங்கை வரலாற்றில் முதன் முறையாகச் சர்வதேச சமுதாயத்தின் நேரடிப்பங்களிப்போடு சிறிலங்கா அரசிற்கும் ஈழத் தமிழினத்தின் தனித்தலைமையான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மிடையில் 2002 ஆம் ஆண்டில் ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டது. முன்னைய அமைதி ஒப்பந்தங்கள் போல் இதை ஒரு தலைப்பட்சமாகத் திருத்தவோ, நிராகரிக்கவோ முடியாது. இரு பகுதியினரும் ஒன்றிணைந்து சம்மதித்தால் மாத்திரமே திருத்தம் அல்லது மாற்றம் அதில் செய்ய முடியும். ஆனால் அண்மைக் காலமாக ஒப்பந்தத்தில் கூறப்பட்டத்திற்கு தவறான வியாக்கியானங்கள் செய்வது மூலம் மாற்றம் கொண்டுவர அரசு முயற்சி செய்கிறது. இதில் முதலாவது தமிழீழ விடுதலைப் புலிகளின் அந்தஸ்து தொடர்பானது. அரசும், புலிகளும் சம பலத்தினர், சம அந்தஸ்தினர் என்ற அடிப்படையில் 2002 இன் அமைதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. சம பங்காளிகள் (EQUAL PARTNERS) என்ற சொற்கள் இது தொடரில் பயன்படுத்தப்பட்டது.

ஆனால் திடீரென்று இதில் மாற்றம் ஏற்படத்தொடங்கியது. சர்வதேச சமூகம் என்ற வரையறைக்குள் வரும் உலக நாடுகளும், நாடுகள் அல்லாத உலக அமைப்புக்களும் சிறிலங்கா அரசையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும் வித்தியாசமாகப் பார்க்கத்தொடங்கின. அமெரிக்கா, ஜப்பான் ஆகியவற்றின் தலைமையில் இயங்கும் பொருளாதார வலுப்பெற்ற நாடுகள் தாம் சிறிலங்கா அரசிற்குச் சாதகமானவர்கள் என்ற தோற்றப்பாட்டை வெளிப்படுத்தத்தொடங்கின.

தமிழர்தரப்புப் பாராளுமன்றப் பிரதிநிதிகளை ஏமாற்றியதுபோல் தன்னையும் அரசு ஏமாற்றக்கூடாது என்பதில் தமிழீழ விடுதலைப்புலிகள் மிகவும் விளிப்பாக இருக்கிறது. ஆட்சி அதிகாரங்களுள்ள இராணுவ அரசியல் அமைப்பாக இயங்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தரை, கடல், வான் பரப்புக்களில் ஆதிக்கம் செலுத்துகிறது. இதில் எந்த விதமான விட்டுக்கொடுப்புக்களுக்கும் இடமில்லை. புரிந்துணர்வு உடன்படிக்கை இரு ஆட்சி அதிகாரபீடங்கள் இலங்கைத் தீவில் இருப்பதை ஏற்றுக்கொள்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் கடலாதிக்கம் பெரும் உயிர், பொருள் இழப்புக்களை விலையாக்க கொடுத்துப்பெறப் பட்டது. கடலாதிக்கத்தைக் கைவிடுவதானது சரணாகதிக்குச் சமனானது. அதிகாரப் பகிர்விற்கு அரசியல் சாசனம் தடையாக இருப்பின் தடையை நீக்கும் முயற்சியை அரசே மேற்கொள்ள வேண்டும் அரசியல் சாசனம் உரிமை மறுப்பிற்கு ஆதாரமாக இருப்பதை ஏற்கமுடியாது.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டபின் செப்ரெம்பர் 16.2002 தொடக்கம் மார்ச் 18.2003 வரையில் ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொண்டவற்றை பேச்சுவார்த்தைக் காலத்தில் நடைமுறைப்படுத்த சிறிலங்கா அரசு தவறியது. இதன் காரணமாக யூன் 09,10.2003 நடைபெற்ற இணைத் தலைமை நாடுகளின் டோக்கியோ அமர்வுகளுக்குப் போவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மறுத்து விட்டனர். அத்தோடு அமைதிப் பேச்சுக்களின் முதலாம் கட்டம் முடிவுக்கு வந்துவிட்டது.

இரண்டாம் கட்டம் பெப்பிரவரி 22. 2006 இல் ஆரம்பித்தது. முதல் சுற்றோடு அது ஸ்தம்பித நிலை அடைந்து விட்டது. வழமைபோல் கொடுத்த வாக்குறுதியைச் சிங்களஅரசு நிறைவேற்றத் தவறிவிட்டது. போர்நிறுத்த உடன் படிக்கையின் 1:8 சரத்தின்படி நடக்க ஒப்புக்கொண்ட அரசு அதற்குமாறாக ஒட்டுக்குழுக்கள் மூலம் தமிழ் மக்கள் மீதான தாக்குதல்களைத் தீவிரப் படுத்தியுள்ளது. வட அயர்லாந்தில் ஐரிஷ் கத்தோலிக்க ஐ.ஆர்.ஏ இயக்கத்திற்கு எதிரான போரில் பிரித்தானிய அரசு, வட அயர்லாந்து புரட்டஸ் தாந்து கிறிஸ்தவத் துணைப்படைகளைப் பயன்படுத்தியது. ஏப்பிரல் 10. 1998 இல் கைச்சாத்திடப்பட்ட அமைதி உடன்படிக்கை புரட்டஸ்தாந்து துணைப்படையினர் ஆயுதக்களைவுக்கு வழிவிட்டது. புரட்டஸ்தாந்து துணைப் படைத் தலைவரான மதத்தலைவர் இயன் பெய்ஸ்லி ஜாதிக ஹெல உறுமய புத்தமதத் தீவிரவாதத் தலைவர்களுடன் ஒப்பிடப்படுகிறார். அவர் படுகொலைகளை ஊக்குவித்தார். கத்தோலிக்கர்களின் உரிமை மறுப்பிற்கு ஆதரவு வழங்கினார். அல்ஸ்ரர் வலன்ரியர் போர்ஸ் (ULSTER VOLUNTEER FORCE) என்ற துணைப்படைக் குடையமைப்பு இயன் பெய்ஸ்லியின் ஆதரவு பெற்றபடுகொலை அமைப்பு ஆட்கடத்தல்,சித்திரவதை, படுகொலை, போன்ற வற்றிற்கு இந்த அமைப்புப் பொறுப்பாகவிருக்கிறது.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான இரண்டாம் சுற்றுப்பேச்சு தொடங்காததற்கான உடனடிக் காரணமாகக் கிழக்கு மாகாணத்திலிருந்து புலிகளின் தளபதிகள் வன்னிக்கு வருவதற்குப் போக்குவரத்து ஒழுங்கு செய்யாமல் அரசு செய்த இழுத் தடிப்புக்கள் அமைகின்றன. அத்தோடு ''தமிழர் தாயகத்தை ஏற்க முடியாது. சுயநிர்ணய உரிமைக்கு இடமில்லை'' என்று மகிந்த ராஜபக்ச பகிரங்கமாகக் கூறியுள்ளார். இதற்குப்பின் பேச்சுவார்த்தைக்குப் போவதில் என்ன பயன். பேசும்படி வலியுறுத்தும் சர்வதேச சமூகம் என்னத்தைப் பற்றிப்பேசுவது என்று சொன்னால் பயனுள்ளதாக இருக்கும். தற்சமயம் தமிழ் மக்களுக்கு எதிரான பிரகடனப்படுத்தாத போரை அரசு தனது முப்படைகள் ஊடாகத் துணைஆயுதக் குழுக்களின் உதவியோடு நடத்திக் கொண்டிருக்கிறது. நாளாந்தம் அப்பாவிகள் கொல்லப்படுகிறார்கள். கருணா குழுவைச் செயலிழக்கச் செய்யப்போவதாக வாக்குறுதி வழங்கிய அதே அரசு துணை குழுவின் உதவி மூலம் தமிழ் மக்களுக்கு எதிரான போரை வெல்லப்போவதாகக் கூறுகிறது. அமைதிபற்றி ஆய்வுகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் போர்பற்றிய ஒரு அளவீடைப் பயன்படுத்துகின்றன. ஒரு ஆண்டில் 500 பொதுமக்கள் கொல்லப் பட்டால் அது முழுஅளவுப் போராக அவை முடிவு செய்கின்றன. இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதத்தில் 300 பேர் கொல்லப் பட்டுள்ளனர். சிறிலங்காவில் ஆயுதப்போர் தொடங்கிவிட்டதை இது சுட்டிக்காட்டுகிறது

***இரண்டாம் கட்டம் பெப்பிரவரி 22.2006 இல் ஆரம்பித்தது. முதல் சுற்றோடு அது ஸ்தம்பிதநிலை அடைந்துவிட்டது. வழமைபோல் கொடுத்த வாக்குறுதியைச் சிங்களஅரசு நிறைவேற்றத் தவறிவிட்டது. போர் நிறுத்த உடன் படிக்கையின் 1:8 சரத்தின்படி நடக்க ஒப்புக்கொண்ட அரசு அதற்குமாறாக ஒட்டுக்குழுக்கள் மூலம் தமிழ் மக்கள் மீதான தாக்குதல்களையும் தீவிரப்படுத்தியுள்ளது.***


திருமலையில் அண்மைய இனக்கொலையில் கொல்லப்பட்ட தாய்

# புலப்பார்வையோடமைந்த களப்பார்வை

**மட்டக்களப்பு மாவட்ட துணைத் தளபதி**
**கேணல். ரமணன்**
**(கந்தையா உலகநாதன்)**
**திருப்பழுகாமம்**
**மட்டக்களப்பு**
**பிறப்பு - 14.10.1965**
**வீரச்சாவு - 21.05.2006**






பாடசாலைக் கட்டிடத்திற்குள் இருந்த புழுக்கத்தை ஆற்றங்கரைக் காற்று கழுவிக்கொண்டிருந்தது. அது வகுப்புக்களுக்கான நேரம் அல்ல. வகுப்பறைகள் வெறிச்சோடிப்போய்க் கிடந்தன. காவலாளியும் காணப்படவில்லை. முற்றிலும் ஆளரவமற்றிருந்தது அந்தப் பாடசாலை, மதிலோரமும் தொருவோரக் கட்டிடத்திற்குள்ளும் பதுங்கியிருந்த சிலரைத் தவிர.

பச்சைக்கரைப் பாவாடையைப் போல வயலும் நீலத் தாவணிபோல வாவியும் கதிரவன் எழும்போதும் விழும்போதும் சிவக்கும் வானமுமாக கண்களுக்கு எப்போதுமே விருந்துவைக்கும் பழுகாமம், நாட்டுக் கலைகளுக்கும் நாவன்மை மிக்க பேச்சாற்றலுக்கும் நாவூறவைக்கும் மீன்கறி வகைகளுக்கும் பேர்போனது. அந்த ஊரின் வரலாற்றுத் தொன்மை பற்றி "மட்டக் களப்பு பூர்வ சரித்திரம்" (ஏட்டுச் சுவடிப் பிரதி- வித்துவான் சா.இ.கமலநாதன்) புகழுடன் பேசுகிறது. எமது தாயகத்தின் பண்பாட்டுத் தொட்டில்களில் ஒன்றான பழுகாமத்தின் இப்போதைய சிறப்பிற்கு கண்டுமணி மகாவித்தியாலயமும் காரணம்.

படுவான்கரையை முன்னேற்று வதற்கு ஓயாது உழைத்து அந்தப் பாடசாலை உருவாவதற்கு அத்திவார மிட்ட கண்டுமணி ஐயாவின் பெயரே அந்தப் பாடசாலைக்கும் இடப்பட்டதில் ஊரில் உள்ள அனை வருக்கும் மகிழ்ச்சியே. இப்போது அது கிழக்குப் புறமாக தாராளமான அளவில் ஒரு மைதானமும் இரண்டுமாடிக் கட்டிடங்களும் பரிசோதனைச் சாலையுமாக அந்தப் பகுதியின் கொத்தணிப் பாடசாலை என்ற களையோடு இருந்தது. பழுகாமத்தில் இன்றிருக்கும் பெரியவர்களில் பலர் கற்றுத் தேர்ந்ததும் சமூக முன்னேற்றத் திற்கும் விடுதலைக்கும் உழைத்த பலருக்கு எழுத்தறிவித்ததும் அதன் மேல் எழுதப்படாத பெருமைகள்.

அவற்றோடு சேர்த்து தாயக மீட்புப் போரிலும் பங்கேற்கப்போகும் பெரு மிதத்துடன் தலை நிமிர்ந்து நின்று கொண்டிருந்த அந்தப் பாடசாலையை ஒரு உழவு இயந்திரம் நெருங்கிக் கொண்டிருப்பதற்கான இரைச்சல் இப்போது கேட்கிறது. மதிலின் பின்னால் பதுங்கியிருக்கும் உருவங்கள் அசையாவிட்டாலும் ஒரு பரபரப்பிற்கு உள்ளாகின்றன. ஒரேயொரு உருவம் மட்டும் மெதுவாக தலையை நீட்டி நெருங்கும் உழவு இயந்திரத்தை உற்றுப் பார்க்கிறது. அதன் முகத்தில் திருப்தி தெரிய தலையை உள்ளே இழுத்த பின் பின்புறத்தில் பதுங்கிக்கொண்டிருந்த உருவங்களுக்கான சைகைகள் கிடைக்கின்றன. இப்போது மறைந்திருந்த உருவங்களின் கைகளில் ஆயுதங்கள் தெரிகின்றன. பெரும்பாலானவை கைக் குண்டுகள். தாக்குதல் ரைபிள்கள் இரண்டு.

உழவு இயந்திரத்தின் பெரிய சில்லுக்களின் மீதான சுரிக்காப்புத் தகடுகளிலும் பெட்டியிலுமாக வந்துகொண்டிருந்த ஆட்களில் சிலர் சீருடை அணிந்திருந்தார்கள். சிலர் சாதாரண உடையில் இருந்தார்கள். எல்லோருடைய கைகளிலும் ஆயுதங்கள். அருகிலிருந்த முகாமிலிருந்து மனித வேட்டைக்காகக் கிளம்பி வந்துகொண்டி ருந்த அவர்கள் முதல் நாளும் அதேபோல வந்து மனித வேட்டையை நடத்தியிருந் தார்கள். அவர்களின் வேட்டையில் குருத்துக்கள் முறிக்கப்பட்டன. எல்லா வயதுப் பெண்களும் சூறையாடப்பட்டார்கள். வயல் வாடிகளுக்குள்ளே உயிருடன் குடும்பங்கள் எரிக்கப்பட்டன. ஒவ்வொரு இரவும் உயிர் பிழைப்பதற்கான ஓய்வில்லாத ஓட்டமாக இருந்தது. பிய்த் தெறியப்பட்ட குடும்பங்கள் காடுகளிலும் வெளியூர்களிலுமாக கொடிய குற்றவாளிகளைப் போல ஒளித்தோடிக் கொண்டிருந்தார்கள். மனித வேட்யைக்காரர் கள் தகப்பனுக்காக மகனையும் தமை யனுக்காக தங்கை யையும் குதறிக் கொண்டிருந்தார்கள். அவ்வகையான வெறியாட்டத்திற்காக வந்துகொண்டிருந்த அந்தக் கும்பல் பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயத்தை நெருங்கியபோது திடீரெனத் தோன்றிய ஒரு உருவம் கையி லிருந்த ரைபிளால் சரமாரியாகச் சுடத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து உழவு இயந்திரத்தைச் சுற்றி லும் தோன்றிய உருவங்கள் கைக் குண்டுகளாலும் ரைபிளாலும் தாக்கத் தொடங்க திருப்பிச் சுடும் திராணியற்றுச் செத்து விழுந்தது மனிதவேட்டைக் கும்பல்.

தலை தெறிக்கத் தப்பி ஓடியோர் போக விழுந்துகிடந்தவர்களிடமிருந்த ஆயுதங்கள் களையப்பட்டன. தாக்கிய உருவங்கள் ஒவ்வொன்றாகப் பின்வாங்கிய பின் வெடிப்புகையும் இரத்தமுமாகக் கிடந்த சாலையில் விழுந்துகிடந்த இந்திய ஆக்கிரமிப்புப் படையினரையும் துரோகி களையும் ஒருமுறை உற்றுப் பார்த்துவிட்டு விடுபட்டுக் கிடந்த மேலுமொரு ஆயுதத்தை யும் எடுத்துக்கொண்டு அந்த இடத்தைவிட்டு வெளியேறிய கடைசி உருவம், ரமணன்.

அந்தச் சண்டையின் வேவு நடவடிக்கையைத் திட்டமிட்டதிலிருந்து கடைசியாக நின்று போராளிகளைப் பாதுகாப்பாக மறைவிடத்திற்குக் கொண்டுவந்து சேர்த்தது வரை தலைமை தாங்கி நடத்திய ரமணனின் வயது அப்போது 21. பயிற்சி பெற்று ஒரு வருடம் தான் ஆகியிருந்தது.

கந்தையா உலகநாதன் என்ற இயற்பெயருடன் பழுகாமத்தில் பிறந்து கண்டுமணி மகாவித்தியாலயத்தில் கல்விகற்று 86ம் ஆண்டின் முற்பகுதியில் போராட்டத்தில் இணைந்து மட்டக்களப்பு 3ம் பாசறையில் பயிற்சி முடித்த ரமணனின் குடும்பம் விடுதலைக்காகச் செலுத்திய விலை சாதாரணமானதல்ல. ரமணன் இயக்கத்தில் இணைந்த சில நாட்களிலே யே அவரின் அண்ணனும் இணைந்து விடுகிறார். இன்னுமோர் அண்ணன் (கந்தையா மோகனதாஸ்) ஆரம்பத்தில் பிறிதொரு அமைப்பில் தனது விடுதலைப் பணியை ஆரம்பித்திருந்தாலும், தேசியத் தலைவரின் மகத்துவத்தின்பால் ஈர்க்கப்பட்டு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டுக்கொண்டிருந்த போது இந்தியப் படையாலும் துரோகிகளாலும் கொடூரமான முறையில் கொல்லப்பட்டவர். அடுத்த தங்கையும் போராளியாக பல வருடங்களை நிறைவு செய்தவர். இன்னுமொரு சகோதரர் போராளியாகவிருந்து இப்போது காவற்றுறையில் பணியாற்றுபவர்.

போராட்டத்தை அன்றிலிருந்து இன்றுவரை வருடிக்கொடுக்கும் அவரின் தாயார் அனுபவித்த வேதனைகளும் கொஞ்சமல்ல. அடிக்கடி தேடிவரும் படைகளுக்கும் தொடரும் துரோகிகளுக்கும் ஈடுகொடுப்பதிலேயே அந்தத் தாயின் வாழ்கை கழிந்துகொண்டிருந்தது. அவ்வா றான ஒரு சம்பவத்தில் ஆத்திரமுற்ற எதிரிகள் அவரின் வீட்டைக் குண்டு வைத்துத் தரைமட்டமாகத் தகர்த்து விடுகிறார்கள். அவரின் தங்கை வீட்டில் தஞ்சமடைய, அந்த வீடும் தாக்குதலுக்கு உள்ளாகிறது.

இவ்வாறான சோதனைகள் சூழ்ந்த வாழ்க்கையினுள்ளும் எதிரி மீதான தனது தாக்குதல்களில் சற்றும் தளர்வைக் காட்டி யவரல்ல ரமணன். தனது வீட்டை எதிரிகள் நெருங்குவதை அறிந்து அங்கே வைக்கப் பட்டிருந்த மரங்களுக்குக் கீழே பொறி குண்டை அமைத்துவிட்டு விலகிச் செல்ல அங்கேவந்து அடாவடி செய்த படையினர் இருவர் கொல்லப்படுகிறார்கள். பலர் காயமடைகிறார்கள். தேசியத் தலைவரின் கெரில்லாத் தந்திரோபாயங்களுக்கு மிகச் சிறந்த முறையில் களநிலை வடிவம் தந்தவர்களில் ரமணனும் ஒருவர். எந்தப் பொருள் எப்போது வெடிக்கும் எங்கிருந்து சன்னங்கள் கிளம்பும் என்று இரவும் பகலும் எதிரியை ஏங்கவைத்த பெருமை ரமணனுக்கே உண்டு.

நியுட்டன் அவர்கள் மட்டக்களப் பில் இருந்தபோது தனது புலனாய்வு வாழ் வின் முதல் அத்தியாயத்தைத் துவக்கிய ரமணன், துரோகி ஒழிப்பிலும் ஊடுருவல் களை முறியடிப்பதிலும் தனது தனித்துவ முத்திரையை பதித்திருக்கிறார். ரமணனைக் கொல்வதற்கான பல சதிகளை சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டிருந்த போதும் அத்திட்டங்கள் அனைத்துமே ரமணனின் நுட்பமான தகவற் கட்டமைப் பால் முறியடிக்கப்பட்டன. அவரின் தந்தி ரோபயச் செயற்பாடுகள் தாயகத்திற்கு வெளியிலும் நீண்டிருந்தன. ரமணனின் புலனாய்வுப் பேறுகளைப் பட்டியலிடுவது சிரமம். "ரமணனை மதிய புலனாய்வுத் துறையில் இணைக்க விரும்பினேன். தேவை கருதி அவர் மாவட்ட மட்டத்தில் பணியாற்ற வேண்டியதாயிற்று," என்கிறார் தமிழீழ புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் ச.பொட்டு.

➥

**"ஒரு சமரிலே ரமணனின் சம்பந்தம் இருப்பதைப் போராளிகள் அறியும்போது அவர்களுக்கு நம்பிக்கையும் சிறிலங்கா படையினர் அறியும்போது அவர்களுக் குப் பயமும் ஏற்படுவதுண்டு. அந்தளவிற்கு ரமணனின் திட்டமிடல்கள் புகழ்பெற்ற வையாக இருந்தன. படைத்துறைச் செயற்பாடுகளைப் புலனாய் வுத் தன்மையோடு நகர்த்துவது ரமணனின் தனித்துவம்."**



# வாழ்விலொரு வழிகாட்டி

- ஆ.ந.பொற்கோ -

சண்டைக்குச் சென்ற படகுகள் கரை திருப்பியிருந்தன. அர்ப்பணம் நிறைந்த வெற்றியைச் சுமந்தபடி கடலலைகள் கரைதழுவிச் சென்றன. விழுப்புண்ணடைந்த போராளிகளைச் சுமந்தபடி வந்த படகு நோக்கி விரைவாய் ஓடினேன்.

அவன் அணியத்தில் படுத்திருந்தான். அவனின் வயிற்றுப் பகுதி குருதித்தடுப்புப் பஞ்சணையால் கட்டப் பட்டிருந்தது. குருதித்தடுப்புப் பஞ்சணையை யும் மீறி குருதி கசிந்திருந்தது. தம்பியாய் பழகியவனின் நிலைகண்டு அதிர்ச்சியுற்றபோதும் அடுத்த கணம் என்னை நிலைப்படுத்திக் கொண்டேன். விழுப்புண்ணடைந்த பெண் போராளியைப் பக்குவமாய் இறக்கி ஊர்தியில் ஏற்றினோம். ஊர்தி மருத்துவ வீடு நோக்கிப் பறந்தது. அவனின் நினைவுகள் என்னைச் சுற்றி வட்டமிட்டன.



அவனை முதன்முதல் சந்தித்தபோதே எனக்குப் பிடித்துப்போயிற்று. அவனுள் எண்ணற்ற ஆளுமைகள் அமிழ்ந்திருந்தன. ஒவ்வொரு செயற்பாட்டின் போதும் கலங்கரை விளக்காய் வழிகாட்டினான்.

அவன் ஒரு பயிற்சி ஆசிரியரென்பது அவனது தோற்றத்திலேயே பளிச்சிடும். அவனிடம் ஆண், பெண் போராளிகள் ஆர்வமாய் பயிற்சி எடுப்பார்கள். பயிற்சிக் கட்டளைகள் கனீரென ஒலிக்கும். அவனிடம் பயிற்சியெடுத்துத் தேறாதவர்கள் எவருமில்லை. படையணியில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் அவன் பரிசு பெறாத நாட்களில்லை.

அவனுடைய படகின் நேர்த்தி அவனின் முகாமைத்துவத்தைப் பறைசாற்றியது. படகிலுள்ள அனைத்துப் போராளிகளும் அவனில் மிகுந்த பற்றுதலாய் இருந்தார்கள். அவனும் அவர்களின் நலனில் ஆழ்ந்த அக்கறை காட்டினான். அவர் களிடையே சகோதர உணர்வு இறுகப் பிணைந்திருந்தது. கடற்சண்டைக்கான வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்.

காலம் கனிந்தது. கரையோர மக்களின் உயிர்களைக் காவுகொள்ள வந்த சிறிலங்காக் கடற்படை நோக்கி விரைந்தன படகுகள். மாலைப்பொழுதில் மூண்டது சண்டை. 'கனோனின்' சத்தம் காதைப் பிளந்தது சிங்களக் கடற்படைப் படகுகள் சிதைந்து மூழ்கின. எஞ்சிய கடற்படைப் படகுகள் பின்வாங்கின. அவற்றிற்குத் துணையாய் பறந்தன வானூர்திகள்.

விழுப்புண்ணடைந்த போராளி தனைப் பார்ப்பதற்காய் மருத்துவ வீட்டிற்குச் சென்றிருந்தேன். அவன் கட்டிலில் படுத்திருந்தான். என்னைக் கண்டதும் முகத்தில் மெல்லிய புன்னகை மலர்ந்தது. அவனிற்கான சத்திரசிகிச்சை நிறைவடைந்து சில நாட்கள் கழிந் திருந்தன. விழுப்புண்ணடைந்த நிலையை யும் மீறி வீரியமாய்க் கதைத்தான். முதலில் தனது படகின் நிலைபற்றிக் கேட்டான். போராளிகளின் நலன் பற்றிக் கேட்டான்.


அவனின் உணவு, ஓய்வு விடயங்களில் மிகுந்த அக்கறையெடுக்கச் சொன்னேன். கையின் மேற்பகுதியில் காயமிருந்தபோதும் விறைத்திருந்த விரல்களை அசைத்து உணர்வூட்டிக் கொண்டிருந்தான். 'எல்லாம் என்ர முயற்சியில தான் இருக்கு. கெதியில எல்லாம் சரியாகிவிடும். படகுக்கு வந்திடுவன்' எனச் சொன்னான். எனக்கென்ன சொல்வதென்று தெரியவில்லை. அக்காவைச் சந்தித்த திருப்தி அவனுள் இழையோடியது. மீண்டும் ஓய்வெடுக்கச் சொல்லிவிட்டு விடைபெற்றேன். ■

## பகிரப்படாத பக்கங்கள்

இந்தியப் படைகளின் ஆக்கிரமிப் புக் காலத்தில் தனித்துவமான திட்டங்களைத் தீட்டி தாக்குதல்களைத் தலைமை தாங்கி நடத்திய ரமணன் தம்பிலுவில் துரோகிகளின் முகாம் தகர்ப் பில் ஒரு பகுதித் தலைமையை ஏற்றுச் சமர் செய்தவர். அந்தச் சமரில் விழுப்புண் ணடைந்தவர். அதன் பின், பூநகரித் தவ ளைச் சமரிலும், ஆனையிறவுப் பீரங்கித் தளத்தின் மீதான தாக்குதலிலும் அணித் தலைமைப் பங்கேற்றுப் படை நடத்தியவர். ஜயசிக்குரு விஞ்ஞானகுளச் சமரின்போது விழுப்புண்ணடைந்தார்.

கேணல் ரமணனின் ஆரம்ப நாட் களில் இருந்தே அவரோடு நெருக்கமாகப் பழகியவரும் பல சமர்க்களங்களை அவரோடு பகிர்ந்துகொண்டவருமான கேணல் ரமேஸ் தனது நினைவுகளைப் பகிர்ந்துகொள்ளும்போது, "ஒரு சமரிலே ரமணனின் சம்பந்தம் இருப்பதைப் போராளி கள் அறியும்போது அவர்களுக்கு நம் பிக்கையும் சிறிலங்கா படையினர் அறியும் போது அவர்களுக்குப் பயமும் ஏற்படு வதுண்டு. அந்தளவிற்கு ரமணனின் திட்ட மிடல்கள் புகழ்பெற்றவையாக இருந்தன" என்றார். படைத்துறைச் செயற்பாடுகளைப் புலனாய்வுத் தன்மையோடு நகர்த்துவது ரமணனின் தனித்துவம்.

2004ம் ஆண்டு ஏப்ரல் மாதம். துரோகி கருணா எமது மாவீரர்களை அவமதிக்கும் வகையில் தாயகக் கோட்பாட்டிற்கு எதிரான நீசத்தனத்தில் இறங்கியபோது கொதித்தெழுந்த உள்ளங்களில் ரமணன் முக்கியமானவர். அவமானத்தில் இருந்தும் அழிவிலிருந்தும் எமது மக்களையும் போராளிகளையும் காப்பாற்றும் பணியில் மிகப் பழுவான பணியொன்றை விரும்பி ஏற்கிறார் ரமணன். மிகச் சில போராளிகளுடன் மட்டக்களப்புப் பகுதியைப் பின்புறமாக அண்மித்து உள் நுளைகிறார். ரமணன் வந்துவிட்ட செய்தி விடுதலையை விரும்பிய மக்களுக்குத் தேனாக, துரோகி கருணாவிற்கோ இடியாகக் கேட்கிறது. ஏற்கனவே வாகரையை இழந்துவிட்ட கருணா இப்போது மாவடி முன்மாரியையும் இழந்து கொண்டிருப்பதைக் கான்கிறான். இந்த நேரத்தில் ரமணன் தொடுத்த தந்திரோபாயத் தாக்குதலால் நிலை



குலைந்துபோய் தனது கையாட்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் கருணா தப்பியோட முயற்சிக்கிறான். முதல் அணியாக குடும்பிமலைப் பிரதேசத்திற்குள் நுழைந்து கருணாவினால் கடைசி நேரத்தில் படுகொலை செய்யப்பட்ட நீலனின் வித்துடலை மீட்ட அணி ரமணனுடையது.

அதன் பின்னர் சிறிலங்கா படைப் புலனாய்வினரும் ஒட்டுக்குழுக்களும் செய்த பெரும்பாலான சதிகளை முறியடித்து மாவடி முன்மாரிப் பிரதேசத்தின் காவலனா கவும் மட்டக்களப்பின் துணைத் தளபதியா கவும் இருந்த கேணல் ரமணன் வவுண தீவிலுள்ள போராளிகளின் காவலரண் களைப் பார்வையிட்டுக் கொண்டிருக்கும் போது எதிரியின் சதிச் சூட்டிற்கு இலக் காகி வீரச்சாவடைகிறார்.

மண்ணின் மணத்தோடும் அதற்கேயுரிய இயல்புகளோடும் சீற்றத்தோடும் வளர்ந்த ரமணன் அந்த மண்ணின் தனிச் சிறப்பான கலைகளிலும் பேச்சாற்றலிலும் சிறந்து விளங்கியவர். பூநகரித் தகர்ப்பின் பின் எழுதுமட்டுவாள் ஜெயந்தன் முகாமில் அவர் எலும்புக்கூட்டு உடையணிந்து நடனமாடியதைப் பார்த்தவர்கள் இன்றுவரை மறந்திருக்க மாட்டார்கள். தளங்களில் நடக்கும் கலை நிகழ்வுகளில் பாடியதோடு மட்டுமல்லாது தான் கற்றதும், எதிரியை மறைந்திருந்து சுட்டதுமான பாடசாலையின் மைதானத்தில் கடந்தவருட தியாகி திலீபன் நினைவு நிகழ்வின்போது தனது உற்றவரும் பெற்றவரும் பார்த்திருக்க தலைவனைப் பற்றிய பாடலைப் பாடியதும் அனைவரது கண் முன்னும் அகலாது நிற்கும். கலைகளோடு மட்டுமல்லாது விளையாட்டுக்களிலும் நேரே பங்கெடுத்து போராளிகளுடன் விளையாடி தளத்தை உற்சாகமாக வைத்திருந்த நாட்களும் பதிவுகளுக்குரியவை.

சுனாமியின் பின்னான நாட்களில் அம்பாறை மாவட்டத்தில் மக்களின் சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டபோது, எதிரியால் இலக்குவைக்கப்பட்டிருப்பது தெரிந்தும் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் மக்களோடு நின்றதும் நினைவழியா நிகழ்வுகள். பன்சேனைக் கிராமத்தில் திலீபன் மருத்துவமனையைக் கட்டுவதற்கான அவரின் காத்திரமான பங்களிப்பு அந்தக் கட்டிடத்தைப் பார்க்கும் ஒவ்வொரு பொழுதிலும் கண்முன் ஆடும்.

பழுகாமமும் அதற்குத் தலைப்பாகை கட்டி நிற்கும் ஒட்டிச் சதுப்பு நிலமும் ரமணனுடைய நினைவுகளைத் தன் ஆழங்களில் தாங்கி நிற்கின்றன. கண்ணாக் காடுகளின் சலசலப்பிலும் கொக்குப் பீச்சல் திடலில் ஓய்வு கொள்ளும் பறவையினங்களின் பாட்டிலும் ரமணனின் பெயர் நிச்சயம் சொல்லப்படும். தாயகப் பயணப் பாதையில் விழுமுன்னமே முளை விட்ட விருட்சமாகத் தனது தனித்துவமான போர் உத்திகளைத் தந்து சென்ற ரமணன் என்றும் அந்த உத்திகளின் வடிவத்திலும் நினைவுகளின் ஆழத்திலும் வாழ்ந்து கொண்டிருப்பார். ●

*- சென்ற இதழின் தொடர்ச்சி -*




சிங்கள தேசத்தில் இனவாதத்தினைப் பயன்படுத்தி ஒருவர் மேலே செல்லலாமே ஒழிய கீழே வரமுடியாது. கீழே வந்தால் அவரது அரசியல் வாழ்வே கேள்விக் குறியாகிவிடும்.

பண்டாரநாயக்கா இனவாதத்தினைப் பயன்படுத்தி மேல் நிலைக்கு வந்தார். ஆனால் நிர்ப்பந்தம் காரணமாக அவர் கீழே இறங்கி வந்தபோது அவரை வளர்த்தவர்களே அவரது உயிரைப் பறித்தனர்.

தான் ஆட்சிக்கு வருவதற்காகத் தனது நீண்டகாலக் கொள்கையைக் கைவிட்டுவிட்டுப் பேரினவாதக் கருத்து நிலை யினைக் கையிலெடுத்து தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்து ஆட்சிபீடமேறினார். பின்னர் தமிழர் போராட்டம் காரண மாகப் பண்டா - செல்வா ஒப்பந்தம் என கீழிறங்க முற்பட்ட போதுதான் உயிரைப் பலிகொடுக்க நேர்ந்தது.

சனாதிபதி மகிந்தவும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகப் பேரினவாதக் கருத்து நிலையான மகிந்த சிந்தனையைக் கையிலெடுத்தார். ஆட்சியையும் கைப்பற்றினார். இன்று கீழே இறங்க வேண்டிய நிர்ப்பந்தம் வந்தபோது கீழே இறங்குவதா? இல்லையா? எனத் தடுமாறிக்கொண்டிருக்கின்றார். கீழே இறங்கினால் அவரது அரசியல் வாழ்வும் அஸ்தமனமாகும் என்பதே இலங்கைத் தீவின் அரசியல் விதி.

பண்டாரநாயக்கா ஆட்சிக்காலத்தில் அடுத்தடுத்து தமிழர்கள் தொடர்ச்சியான போராட்டத்தினை முன்னெடுத்த போதுதான் கூட்டுத் தண்டனையாக 1958 இன அழிப்பு நடவடிக் கைகள் முடுக்கி விடப்பட்டன. வடகிழக்கிற்கு வெளியே தமிழர் களது வீடுகள், கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன. பதுளையில் ரீட்டா என்ற தமிழ்ப் பெண் கற்பழிக்கப்பட்டாள். பாணந்துறையில் கோவில் குருக்கள் உயிரோடு நெருப்பு மூட்டிக் கொல்லப் பட்டார். ஹிங்குரான் கொடவில் கந்தப்பு என்ற ஓவியர் கொல்லப்பட்டார். குடியேற்றப் பிரதேசங்களில் வாழ்ந்த தமிழர்களில் 150போர் வரை கொலை செய்யப்பட்டதோடு குடியேற்றப் பிரதேசங்களிலிருந்து கலைக்கப்பட்டனர். தமிழ் அகதிகள் வடகிழக்கிற்கு கப்பல் மூலம் அனுப்பிவைக் கப்பட்டனர்.

இந்த இன அழிப்பின் மூலம் தமிழ் மக்களுக்கு மூன்று உண்மைகள் தெளிவாகத் தெரியத் தொடங்கின. முதலாவது தமிழர் தாயகத்திற்கு வெளியே தமிழ் மக்களுக்கு நிரந்தர வாழ்க்கை இல்லையென்பது, தமது நிரந்தர வாழ்க்கை தமிழர் தாயகமான வடகிழக்கில் தான் உண்டு. தமிழர் தாயகத்தை பாதுகாப்பதில் தான் தமிழர்களது எதிர்கால வாழ்க்கை உள்ளது.

இரண்டாவது, இலங்கையின் அரச இயந்திரம். அதன் ஒரு அங்கமான படைகள் சிங்கள தேசத்திற்கு மட்டும் உரியவை. தமிழ்த் தேசத்திற்குரியவையல்ல. நடவடிக்கைகள் அனைத்தும் படைகளின் கண் முன்னாலேயே இடம்பெற்றன. எனவே சிங்கள அரச இயந்திரத்தையோ அதன் ஒரு அங்கமான படைகளையோ தமிழ் மக்கள் எதிர்காலத்தில் நம்பமுடியாது. தமிழ் மக்கள் தங்களுக்கான அரச இயந்திரத்தையும் தங்களுக்கான படையினையும் தாங்களே உருவாக்க வேண்டும்.

மூன்றாவது தமிழர் தாயகத்தில் உள்ள சிங்களக் குடியேற்றங்கள் தமிழ் மக்களின் கூட்டிருப்பைச் சிதைப்பதோடு படையினருக்கு ஒரு ஆக்கிரமிப்புக் கருவியாகவும் எதிர் காலத்தில் தொழிற்படப் போகின்றது.

தமிழர்கள் சந்தித்த முதலாவது இன அழிப்பு அவர்களின் பயணத்தினைத் தடுக்கவில்லை. மாறாகப் பயணத்தின் இலக்குக்கான நியாயப்பாடுகளை வலிமையாகத் தந்திருந்தது. தமிழ்த்தேசம் மேலும் உறுதியாகத் தமது இலக்கில் சென்றது.

1959 செப்ரம்பரில் தான் வளர்த்தவர்களாலேயே பண்டாரநாயக்கா கொலை செய்யப்பட்டார். தென் இலங்கையைப் பொறுத்த வரை அரசியல் இருப்பும், அதிகார இருப்பும் ஒன்றல்ல. அரசியல் இருப்பிற்கு இனவாதம் தேவை ஆனால் அதிகார இருப்பிற்கு இனவாதத்தினை சற்று அடக்கி வாசிக்க வேண்டிய கட்டாயமுள்ளது. பண்டாரநாயக்கா தொடக்கம் மகிந்த ராஜபக்ச வரை இதுதான் நிலைமை. மகிந்த ராஜபக்ச இதன் முழுமையாகத் தருவிக்க மறுத்ததால் இன்று யுத்தம் அவரது வாசல்படிக்கே வந்திருக்கின்றது.

1959இல் பண்டாரநாயக்கா கொல்லப்பட்டதைத் தொடர்ந்து தகநாயகக்கா பிரதமரானார். ஆனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினரின் ஒத்துழைப்பு போதியளவு அவருக்குக் கிடைக்கவில்லை. இதனால் 10 மாதகாலத்தில் தகநாயக்கா அரசாங்கம் வீழ்ந்தது. மகாதேசாதிபதி ஒலிவர் குணத்திலக்க பொதுத்தேர்தலுக்கு ஏற்பாடு செய்தார்.

1960 மார்ச்சில் நடைபெற்ற தேர்தலில் தமிழரசுக்கட்சி வடகிழக்கில் 16 ஆசனங்களைக் கைப்பற்றியது. தாயக மக்கள் தங்களது கூட்டு விருப்பத்தினைத் தெளிவாகத் தெரிவித்துக் கொண்டனர். ஆனால் சிறிலங்காவில் எந்த ஒரு கட்சிக்குமே அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. அதிக ஆசனங் களைப் பெற்ற கட்சி என்ற வகையில் ஐ.தே.க அரசாங்கத்தினை அமைக்க முன்வந்தது. தமிழரசுக்கட்சி தனக்கு எதுவித நிபந்த னையுமில்லாமல் ஆதரவு தரும் என அது கருதியிருந்தது. (2005 சனாதிபதித் தேர்தலில் ரணில் கருதியது போல)

தமிழரசுக்கட்சி நான்கு அம்சக் கோரிக்கையினை இரு பிரதான கட்சிகளிடமும் முன்வைத்தது. சமஸ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு, தமிழ்மொழி அரசகரும மொழி, குடியேற்றங்களை நீக்குதல், மலையக மக்களுக்குப் பிரயாவுரிமை என்பனவே அவ் நான்கு அம்சங்கக் கோரிக் கைகளுமாகும். சிறிலங்கா சுதந்திரக்கட்சி இக்கோரிக்கைகள் பண்டாரநாயக்காவின் கொள்கைகளுக்கு உடன்பாடானவையாக இருப்பதால் ஏற்றுக்கொள்வதாகக் கூறியது. ஆனால் ஐ.தே.க இக்கோரிக்கைகளையிட்டு வாயே திறக்கவில்லை. முன்னர் கூறியது போல வெற்றுக் காசோலையில் கூடிய தமிழர் தரப்பு கையொப்பமிடும் என்று அது நினைத்திருந்தது.

ஐ.தே.க அரசாங்கத்தை அமைத்தது. ஆனால் கொள்கைவிளக்க உரை வாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோது தமிழரசுக்கட்சி எதிர்த்து வாக்களித்தது. ஐ.தே.க.கட்சியினர் தமிழர்கள் தங்களைத் தோற்கடித்துவிட்டனர் என பிரச்சாரம் செய்தனர்.

அதேவேளை மாற்று அரசாங்கத்தினை அமைக்க சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் முன்வந்தனர். இடது சாரிக்கட்சிகள் உட்படப் பல் வற்புறுத்தியதால் தமிழரசுக்கட்சி ஆதரவளிக்க முன்வந்தது. எழுத்து மூல சம்மதக் கடிதமும் வழங்கப்பட்டது. அரசாங்கத்தை அமைக்கக் கூடிய இறுதிப் பெரும்பான்மைப் பலமும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குக் கிடைத்தது. ஆனாலும் மகாதேசாதிபதி ஒலிவர் குணத்திலக இவற்றை நிராகரித்து மறுதேர்தலுக்கு கட்டளையிட்டார். 1960 யூலையில் மறுதேர்தல் நடைபெற்றது.

இத்தேர்தலில் தமிழரசுக்கட்சி வட - கிழக்கில் 15 ஆசனங்களைக் கைப்பற்றியிருந்தது. அதேவேளை தெற்கிலங்கையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தனித்து அறுதிப் பெரும்பான்மையைப் பெற்று வெற்றியடைந்தது. சிறீமாவோ பண்டாரநாயக்கா தேர்தலில் போட்டியிடாத போதும் செனற்சபை உறுப்பினராக்கப்பட்டு அதன் மூலம் நாட்டின் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி தனித்து வெற்றியீட்டிய போதும் முன்னைய உடன்பாட்டிற்கு ஏற்ப நான்கு அம்சக் கோரிக்கையினை ஏற்று நடக்கும் என்றே தமிழரசுக்கட்சி எதிர்பார்த்தது. ஆனால் "ஆறு கடக்கும் வரைதான் அண்ணன் தம்பி ஆறு கடந்தபின் நான் யாரோ? நீ யாரோ? என்ற பழமொழி போல அரசாங்கம் தமிழர் தரப்பினைக் கைவிட்டது. தமிழ் மக்கள் மூன்றாவது தடவை சிங்களத் தலைவர்களிடம் ஏமாந்தனர். தங்களுக்கு நெருக்கடிகள் வருகின்றபோது கிட்டவருவதும் நெருக்கடிகள் தணிகின்றபோது தூரச் செல்வதும் தான் சிங்களத் தேசத்தின் மரபாக நீண்டகாலம் நிலவி வருகின்றது.

மறுபக்கத்தில் 1956இல் பண்டாரநாயக்கா கையி லெடுத்த சிங்களமயமாக்கலை சிறிமாவோ பண்டாரநாயக்கா முன்னெடுக்கத் தலைப்பட்டார். தமிழ் மக்களின் கூட்டிருப்பினைச் சிதைத்து சமூக ஜனநாயகத்திற்கான கோரிக்கையினைப் படிப்படியாக இல்லாமல் செய்வதே இந்த முன்னெடுப்பின் பிரதான நோக்கம்.

இதனடிப்படையில் அரசகரும மொழித்திட்டத்தினை வடகிழக்கில் நகர்த்துவதற்காக சிங்கள ஊழியர்கள் வட - கிழக்கில் செயலகங்களுக்கு அனுப்பும் முயற்சிகள் நடை பெற்றன. தமிழரசுக்கட்சி இதனை எதிர்த்து மாபெரும் சத்தியாக் கிரகப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தது. இதனிடையே 50களின் பிற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இன்னோர் விடயத்தினையும் நாம் கவனிக்க வேண்டும். அதுதான் தேர்தல் தொகுதிகள் விஸ்தரிப்பாகும். 1959ஆம் ஆண்டு தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழு இதற்கான நடவடிக்கைகளை எடுத்தது. பாராளுமன்ற உறுப்பினர்கள் தொகையும் 101 இலிருந்து 157ஆக அதிகரிக்கப்பட்டது.

தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரை வடக்கில் உடுவில், நல்லூர், உடுப்பிட்டி, கிளிநொச்சி என்கின்ற புதிய தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டன. அதேவேளை கிழக்கில் திருகோணமலை, மூதூர் பிரதேசம் இரட்டை அங்கத்தவர் தொகுதியாக்கப்பட்டு முஸ்லீம் பிரதிநிதியுடன் தமிழர் பிரதிநிதி ஒருவர் தெரிவு செய்யப்படுவதற்கு வழி செய்யப்பட்டது. மட்டக்களப்பு முஸ்லீம்களுக்காக அது இரட்டை அங்கத்தவர் தொகுதியாக மாற்றப்பட்டது. எனினும் முக்கியமான விடயம் அம்பாறையில் சிங்களத் தேர்தல் தொகுதி ஒன்று உருவாக்கப்பட்டமையே ஆகும். குடியேற்றப் பிரதேசமான அம்பாறை நகரத்தை மையமாகவைத்து அம்பாறைத் தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டது. அரசியல் ரீதியான சிங்கள ஆதிக்கம் கிழக்கில், அம்பாறைத் தேர்தல் தொகுதியுடனேயே தொடக்கி வைக்கப்பட்டது.

இன்று அம்பாறையில் இரண்டும், திருகோணமலை யில் ஒன்றுமாக மூன்று சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். அதேவேளை அம்பாறை மாவட்டத்தில் 07 பிரதேச சபைகளும் 01 நகரசபையுமாக 08 உள்ளூராட்சி சபைகளையும், திருக்கோணமலை மாவட்டத்தில் 05 பிரதேச சபைகளையும் சிங்களத்தரப்பு கைப்பற்றி வைத்திருக்கின்றது. மொத்தமாக கிழக்கில் 13 உள்ளூராட்சி சபைகள் சிங்களத் தரப்பிடம் இருக்கின்றது. இதற்குக் கால்கோளாக நின்றது அம்பாறைத் தேர்தல் தொகுதியே ஆகும். இவற்றில் ஒன்று கூட மரபுரீதியாக வந்தவை அல்ல. எல்லாமே குடியேற்றங்களால் கிடைக்கப் பெற்றவையாகும். சிங்கள மயமாக்கலில் இதுவும் ஒன்றுதான். சிங்கள மயமாக்கல் என்பது வெறுமனவே அரச இயந்திரத்துடன் மட்டும் தொடர்புபட்டதாக இருக்கவில்லை. அது தாயக 'மண்' வரை பரந்திருந்தது.

ஒரு பக்கத்தில் ஆட்சி அதிகாரக் கூட்டமைப்பிலிருந்து ஒதுக்கிவைப்பு. மறுபக்கத்தில் குடியேற்றச் செயற்பாடுகள் மூலம் சுய இருப்புச் சிதைப்பு. இவ் இரண்டு நடவடிக்கைகளும் வரலாற்று ரீதியாக சமாந்தரமாகவே நடைபெற்றுள்ளன. ஒன்றின் நோக்கம் ஒதுக்குதல் மற்றயதன் நோக்கம் போராட்ட வலுவைச் சிதைத்தல்.

இவை இரண்டு தொடர்பாகவும் பரந்த திட்டத்துடன் சிங்கள தேசம் இயங்கியிருக்கின்றது.

(தொடரும்...)

**- மதுசங்கர் -**

> **" பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வருவதற்காகத் தனது நீண்டகாலக் கொள்கையைக் கைவிட்டுவிட்டுப் பேரினவாதக் கருத்து நிலையினைக் கையிலெடுத்து தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டுவந்து ஆட்சிபீட மேறினார். பின்னர் தமிழர் போராட்டம் காரணமாகப் பண்டா – செல்வா ஒப்பந்தம் என கீழிறங்க முற்பட்ட போது தான் உயிரைப் பலிகொடுக்க நேர்ந்தது.**

## “ஐயா தம்பி, இதை எரிக்காதியுங்கோ”

# ரத்தம் தோய்ந்த நாளொன்றின் நினைவுகள்

~ கதிரவன் ~

1983 யூலை இன அழித்தொழிப்பில் இத்தீவு தமிழ் மக்களின் இரத்தத்தில் தோய்ந்த வரலாற்றை எவரும் மறந்திருக்கமாட்டார்கள். ஓவ்வொரு தமிழனின் மனங்களிலும் ஆழப் புதைந்துகிடக்கும் ரணமது. இதிலுள்ள துரதிஸ்டம் என்னவென்றால் அந்த கொடூரத்திற்கு மீண்டும் மீண்டும் தமிழ் மக்கள் பலியாகிவருவதுதான். புரிந்துணர்வு ஒப்பந்தம், நல்லிணக்கப் பேச்சுவார்த்தை, சர்வதேசத் தலையீடு எவையுமே சிங்களத்தின் கொடூர மனோபாவத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. எஞ்சிக்கிடந்த கொஞ்ச நம்பிக்கைகளும் பொய்த்துப் போனதன் சாட்சியாக இருக்கிறது அந்தநாள். புதுவருடக்கொண்டாட்டங்களுக்கான முனைப்பில்கிடந்தனர் திருமலை வாழ் தமிழ் மக்கள். அப்பொழுதுதான் அந்தக் கொடூரங்கள் அரங்கேறின. 2006 ஏப்பிரல் 12 ஆம் திகதி அன்று , மாலை 3.45 மணியளவில் திருமலை நகரின் மத்தியசந்தையின் பின்வாயில் பகுதியில் ஒரு குண்டு வெடிக்கிறது. அதில் 8 தமிழ்மக்கள் உட்பட 10பேர் காயமடைகின்றனர். அதனைத் தொடர்ந்து அங்கு விரைந்த சிங்களக் காடையர்கள் கூட்டம் சில மணி நேரம் வெறித்தாண்டவமாடினர். அந்த வெறித்தாண்டவம் பற்றிய சிலரது நினைவுகள்தான் இங்கு பதிவாகிறது. இத்தாக்குதல்களில் சிங்களவர் காட்டிய வேகத்தைப் பார்த்தால் முன் கூட்டியே எல்லாம் தயார்நிலையில் இருந்திருக்கிறது போலத்தான் தெரிகிறது. சரியாக 4.20 மணியளவில் சிங்களக்காடையர்கள் கடையில் பொருட்கள் வாங்கிக்கொண்டிருந்த தமிழ்மக்கள் மீது குண்டு வீச்சை நடாத்தினர். அதில் 4 தமிழர்கள் கொல்லப்பட்டும் 12பேர் காயமடைந்தனர். தொடர்ந்து மத்திய வீதியில் புகுந்த காடையர்கள் கூட்டம் கத்திகள், இரும்புக்கம்பிகள், பொல்லுகள் சகிதம் தமிழ் மக்கள் மீது தாக்குதல்தொடுத்தனர். அதே வேளை நகரின் பல பகுதிகளிலும் தமிழ் மக்கள் தாக்கப்படுகின்றனர். லிங்கநகர் பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் நின்றுகொண்டிருந்த ஒருவர் வெட்டிக்கொல்லப்பட்டு எரிக்கப்படுகின்றார். அனுராதபுரச் சந்தியில் மோட்டார்சைக்கிளில் சென்று கொண்டிருந்த தமிழர்கள் இருவர் வெட்டிக் கொல்லப்பட்டு எரிக்கப்படுகின்றனர். இதனை அப்பகுதி மக்கள் பலர் பார்த்திருக்கின்றனர். இவையனைத்தும் சிறிலங்காவின் முப்படையினரின் பார்வையிலும் ஆசியிலுமே நடந்தேறின. முதல் நாள் வெறித்தாக்குதல்களில் திருப்தியடையாத சிங்களக் காடையர் கூட்டம் மறுநாள் புதுவருடதினத்தன்று தமிழ் மக்கள் வாழும் கிராமங்கள் மீது தமது தாக்குதல்களை நடாத்தியது. தமிழ் மக்களின் வீடுகளை எரித்து சொத்துக்களையும் கொள்ளையடித்தனர். இதுவும் பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்புடனேயே நடந்துமுடிந்தது. இதன் போது கன்னியா சிவயோகபுரம் நடேசர் கோயில் சிங்களக் காடையர்களால் எரிக்கப்பட்டிருக்கிறது. 'ஐயா தம்பி இதை எரிக்காதியுங்கோ'என்று மன்றாடிய 60வயது வயோதிபத் தாயார் ஒருவரை வெட்டிக் கொன்றுவிட்டே இக்கோயிலை எரித்திருக்கின்றனர் காடையர்கள். சிங்களக்காடையர்களின் கோரத்தாண்டவத்தின்போது தமிழ் பெண்கள் சித்திரவதைக்கு உள்ளாகியிருக்கின்றனர். சிங்களக்காடையர்கள் இறந்தவர்களின் நகைகளையும் ஒன்று விடாமல் எடுத்திருக்கின்றனர். இதன்போது தோடுகளை எடுப்பதற்காகக் காதுகளை வெட்டியிருக்கின்றனர். இவைகள் பற்றி ஆதங்கப்பட்ட திருகோணமலையின் கல்விமான் ஒருவர் இந்த நூற்றாண்டில் இப்படிக் கொடுமைசெய்தவர்கள் சிங்களவர்களாகவும் இப்படியொரு கொடுமைக்கு ஆளாகியவர்கள் தமிழ்மக்களாகவும்தான் இருக்கமுடியும் என்றார். இந்தக் கொடுமைகளில் அகப்பட்டு தப்பிப்பிழைத்தவர்கள் சிலர் தங்களது வேதனைகளையும் ஆதங்கத்தினையும் இப்படிக் கொட்டித்தீர்த்தனர்.





மேற்படி நடேசர் கோயிலில் வெட்டிக் கொல்லப்பட்ட தாயாரின் மருமகனான திரு.ரவீந்திரன் தனது அனுபவங்களை இவ்வாறு விபரித்தார் 'புதுவருசத்தண்டு சொந்தக்காரர் எல்லோருமாகச்சேர்ந்து எங்கடவீட்டில் சந்தோசமாகச் சமைத்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். நாலு நாலரை மணியிருக்கும், சிங்கள இளைஞன் ஒருவன் காணாமல்போய் விட்டதாகச் செய்திகள் வந்தது. அந்தச்செய்தி வந்து 10 நிமிடங்களிருக்கும் எங்கடவீட்டுக்கு முன் பக்கத்தில் இருந்த வீடுகள் எரியுது. கூடவே ஐயோ அம்மா என்ற அவலக்குரல்களும் கேட்குது. உயிரைக்காப்பாற்றிக் கொண்டால் போதுமெண்டு பொருட்கள் எல்லாத்தையும் விட்டிட்டு வளவுக்குப் பின்னாலிருந்த வயலுக்கால ஓடினம். எண்டமாமி வயதானவர். அண்டைக்கு கோயில்ல பஜனை இருக்குதெண்டு உயிர் போனாலும் வரமாட்டன் எண்டு சொல்லிட்டார். என்ர கண்ணால பார்த்தனான் சிங்களக்காடையர்கள் கத்திகள், பொல்லுகளோட ஓடி வந்தாங்கள். பொலிஸ் அல்லது ஆமி நினைச்சிருந்தால் இதையெல்லாம் தடுத்திருக்கலாம். காலுக்கு கீழ் சுட்டிருந்தால் ஓடியிருப்பாங்கள். ஆனால் அவங்கள் காடையர்களின் காடைத்தனங்கள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தாங்கள். இதேநேரம் தமிழனென்டால் சுட்டு விட்டு கலவரத்தை அடக்கச் சுட்டம் என்டிருப்பாங்கள். இனி ஒரே வழி ஆயுதத்தை எடுத்துக் கொண்டு தலைவரோட போறது தான்'.

மூன்று பிள்ளைகளின் தாயான கிருபாகரன்– யோகராணி கோரமான தனது அனுபவங்கள் குறித்து இவ்வாறு குறிப்பிட்டார். 'வீட்டில நாங்கள் நித்திரை. திடீரென்டு எங்கட வீட்டைச் சுற்றியிருந்த வீடுகள் எல்லாம் எரியுது. ஒரே புகைமண்டலம் எங்கட நடேசர் கோயிலைப் பார்த் தால் அங்கேயும் புகைமண்டலம். எல்லாத்தையும் பொலிஸ் பாத்துக் கொண்டுதானிருந்தது. அவங்கள விட்டுப்போட்டு பயத்தில ஓடி வந்த எங்கள வீட்ட போகச் சொல்லியது பொலிஸ். இப்ப எங்களிட்ட ஒன்றுமில்ல எல்லாத்தையும் இழந்து நிக்கிறம்' என்றார் அவர்.

இதன்போது பாதிக்கப்பட்ட சந்திரன் ஜெகநாதன் என்பவர் கூறும் போது 'நான் என்ர கண்ணால பாத்தனான். ஊர்க்காவல்படையும் மகிந்தபுரம் சிங்களவரும் டயரைக் கொளுத்திக்கொண்டு வந்தாங்கள். நான் தனியாளாத்தான் இங்க இருக்கிறன். வாய்க்கால் கரையோட நிண்டு பார்த்தனான் எனக்கு நல்லாத் தெரியும். மகிந்தபுரத்தைச் சேர்ந்த ஆட்டோக்காரங்கள், அந்தப் பகுதியைச் சேர்ந்த ஊர்காவல் படையைச்சேர்ந்தவங்கள் முகத்தைக் கறுப்புத் துணியால் கட்டிக்கொண்டு வந்த வங்கள், சிலர் ஆமியின்ர சேட் போட்டிருந்தாங்கள். கத்திகள் பொல்லுகளோட வந்தாங்கள். எங்கட பகுதியிலிருந்த 42 வீடுகளை எரிச்சும், எங்கட சாமாங்களையெல்லாம் கொள்ளையடிச்சிட்டுப் போனாங்கள் இவங்களுக்குப் பாதுகாப்பாக மோட்டார் சைக்கிள் குறுப் முன்னால் சென்றது'

**“நான் என்ர கண்ணால பாத்தனான். ஊர்க்காவல் படையும் மகிந்தபுரம் சிங்களவரும் டயரைக் கொளுத்திக் கொண்டு வந்தாங்கள். நான் தனியாளாத்தான் இங்க இருக்கிறன். வாய்க்கால் கரையோட நிண்டு பார்த்தனான். எனக்கு நல்லாத்தெரியும் மகிந்தபுரத்தைச் சேர்ந்த ஆட்டோக்காரங்கள், அந்தப்பகுதியைச் சேர்ந்த ஊர்காவல் படையைச் சேர்ந்தவங்கள் முகத்தை கறுப்புத்துணியால் கட்டிக்கொண்டு வந்தவங்கள்.”**

இது பற்றி ஒரு ஆசிரியை இவ்வாறு கூறினார். திருகோணமலை மத்தியசந்தை குண்டு வெடிப்புச் சம்பவம் நடைபெற்ற வீதியைச்சேர்ந்த அந்த ஆசிரியை நாங்கள் வாயில் கதவை மூடிக்கொண்டு இருந்தம். பெரும் சத்தத்தோட சிங்களக் காடையர் கூட்டம் எங்கட வீட்டுக் கதவைத் தட்டி உதைத்தனர். எங்கள் வளவிற்கு மதில் இல்லாததால் நாங்கள் தப்பினம். எங்கட வீட்டிற்கு முன்னால் இருந்த வீடொன்றையும் எரித்தனர். வெளியிலிருந்துதான் பல காடையர்கள் கொண்டுவரப்பட்டிருகின்றனர். யாரோ ஒருவர் இது தமிழருடையது என அடையாளம் காட்ட ஒவ்வொரு கடையாக எரிக்கப்பட்டிருக்கிறது. இதில எல்லாச் சிங்களவரும் பங்கு கொண்டார்கள் எண்டுதான் நான் சொல்லுவன். இங்கயிருக்கிற சிங்களவர்கள் நினைச்சிருந்தால் நாங்கள் இஞ்ச ஒண்டா இருக்கிறம் இஞ்ச நீங்கள் இப்படியெல்லாம் செய்ய நாங்கள் அனுமதிக்க மாட்டம் எண்டு சொல்லித் தடுத்திருக்கலாம். சிங்களவர்கள் எப்போதும் எங்கள அழிக்கத்தான் காத்துக்கொண்டிருக்கிறாங்கள். அவங்கள் திருந்தப்போறதில்ல என்று ஆதங்கப்பட்டார்.

சிங்களக் காடையர்களுக்குப் பயந்து பாடசாலைகளில் தஞ்சமடைந்த மக்களையும் சோதனை என்ற பெயரில் பாதுகாப்புப்படையினர் கொடுமைப்படுத்தியிருக்கின்றனர். இது பற்றி கருத்துத் தெரிவித்த ஒரு தன்னார்வ நிறுவனப் பிரதிநிதி தங்கட வேலையெல்லாம் விழலுக்கு இறைத்த நீர் போலத்தான் என ஆதங்கப்பட்டார். 'இந்த நாலுவருட காலமாக நாங்கள் நல்லிணக்கம், ஐக்கியம், மனிதப்பாதுகாப்பு என் றெல்லாம் காசச் செலவளித்ததுதான் மிச்சம். ஐ.நா அகதி மக்களின் உரிமையெல்லாம் பேசிச்சு. நாங்களும் பேசினம். ஆனால் அகதி முகாமிலிருக்கும் மக்களையே சந்தேகத்தின் பேரில் ராணுவம் கைது செய்கிறது. விசாரணைக்கு என அழைத்துக்கொண்டு செல்கிறது. அவர்களது அகதி உரிமைவாதங்களின் அர்த்தம் என்ன?'

இவ்வாறு இந்த கொடூர இன அழித்தொழிப்பு தொடர்பில் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரிடமும் ஒவ்வொருவிதமான கதையிருக்கிறது. திருமலை இன்று அச்சம் கலந்த அமைதியுடன் தன் மண்ணின் கீழே கொதித்துக் கொண்டிருக்கும் சிங்கள இனவாத எரிமலைக் குழம்பின் மேல் உள்ளது.



# கறுப்பு வீதியின் சொந்தக்காரர்

**எழுதாத என் கவிதையை**
**எழுதுங்களேன்.**
**எல்லையில் என் துப்பாக்கி**
**எழுந்து நிற்பதால்**
**எழுந்துவர**
**என்னால் முடியவில்லை.**
**எனவே**
**எழுதாத என் கவிதையை...**

*வரிகளின் சொந்தக்காரி கப்டன் வானதி. 1991.07.11 இல் தொடங்கவிருந்த ஆணையிறவுச் சிங்களப் படைத்தளம் மீதான ஆ.கா.வெ சமருக்கான நீண்ட கடும் பயிற்சியை நிறைவுசெய்து, வெவ்வேறிடங்களில் வெவ்வேறு பயிற்சிகளைப் பெற்றோர் ஒன்றுகூடி, அப்போதிருந்த சிங்கள அரசின் தமிழர்மீதான பொருளாதாரத் தடையை மீறி முடிந்தளவு சிறப்பாக தமிழீழ நிதித்துறையினரால் தயாரிக்கப்பட்ட உணவை உண்டுவிட்டு, இயக்கச்சித் திசையில் ஆணையிறவைத் தாக்கப்போகின்றவர்களும் பரந்தன் திசையால் ஆனையிறவைத் தாக்கப்போகின்றவர்களும் பிரிகின்ற வேளை இதோ நெருங்கிவிட்டது.*

*ஓடிவந்தார் வானதி. அவர் கேணல் விதுஷா/யாழினியின் தலைமையில் இயக்கச்சியிலிருந்து நகரப்போகும் அணிக்குரியவர். பரந்தன் திசையால் தாக்கப்போகின்ற கப்டன் தமயந்தி முதலானோரிடம் ஓட்டத்தில் வந்தார்.*

*“இப்ப போய்வாங்கோ. நான் கறுப்பு றோட்டாலை வந்து உங்களைச் சந்திக்கின்றேன்” காலம் வானதியின் வருகைக்காகக் காத்திருந்தது.*



**கப்டன் வானதி**
**பத்மசோதி சண்முகநாதபிள்ளை**
**யாழ்ப்பாணம்,**
**11.07.1991 ஆனையிறவு**

*******

*பரந்தன் திசையால் சுற்றுலா விடுதியைத் தாக்கப்போகும் அணி, தலை நிமிர்த்த முடியாத வெட்டையில் வீதியைக் குடைந்து வெட்டப்பட்டிருந்த அகழியினூடே நகர்ந்தவாறு எதிரி நிலைகளை அவதானித்தது. யாருடையதோ தலையசைவைச் சிங்களப் படையினர் கண்டிருக்க வேண்டும். பொழிந்து தள்ளினார்கள் ரவைகளை.*

*நம்மவர்கள் தலையை உள்ளிழுத்துக் குனிந்தவாறே ஓட முயன்றனர். முடியவில்லை. ஆணையிறவுக்கே உரித்தான சதுப்பு நிலம் முழங்கால் வரை புதைத்ததோடு நில்லாமல், இழுத்தும் விழுத்தியது. தோள்களில் கொழுவப்பட்டிருந்த பலரது சுடுகலன்கள் சேற்றில் விழுவது தவிர்க்க முடியாதது ஆகியது. லெப்.வாகினியின் நடைபேசியும் சேற்றில் அமிழ்ந்து மீண்டது. ஒட்டிய சேற்றை ஒற்றியவாறே,*



**லெப். வாகினி**
**தேவராணி கந்தசாமி**
**மட்டக்களப்பு**
**10.07.1991 ஆனையிறவு**

*“பழுதாய் போனாலும் பரவாயில்லை. சண்டையில ஒரு புதுசு எடுத்து இயக்கத்துக்குக் குடுப்பன்” என்றார் நம்பிக்கையோடு.*

*பகைவரிடமிருந்து ஆணையிறவில் படையியல் உபகரணங்கள் எம்மால் பறிக்கப்படும் நாளுக்காகக் காலம் காத்திருந்தது.*

*******

*கட்டைக் காட்டில் கடுமையான சண்டை நடந்துகொண்டிருந்தது. வெட்டை வெளிப் பகுதியில் எம்மவர்களுக்கான விநியோகம் சிரமமாகவே இருந்தபோதும், பாணும் நெகிழப் பையில் கட்டப்பட்ட இறைச்சிக் குழம்பும் எப்படியோ எம்மிடம் வந்து சேர்ந்துவிடும் நெகிழப் பையைப் பாணாலேயே துடைத்துச் சுத்தம் செய்து சாப்பிட்டுவிட்டு, பையிலேயே எமக்கான குடிநீரை வாங்கித் தலைக்கு மேலே எங்காவது கொழுவி வைத்துவிட்டு, நா வறளும் போதெல்லாம் வாயெரிய வாயெரியக் குடித்தோம்.*

*பல தடவைகள் பகைவரின் எறிகணை வீச்சில் பைகள் பிய்ந்து கறித்தண்ணீர் தலையோடு முகம் கழுத்தெல்லாம் நனைத்து எரிவை உண்டாக்க, தண்ணீர் வரப்போகும் அடுத்த வேளைக்காய்த் தவிப்போடு காத்திருந்தோம்.*

*******

*நிலையாக ஓரிடத்தில் இருக்க முடியவில்லை. ஒரு மாதத்தில் பல தடவை நகர்ந்துகொண்டேயிருப்போம். மந்துப் பற்றை, சதுப்பு நிலம், பூவரசம் வேலி, வரம்படி, ஒற்றை ஆலமரத்தடி என்று இடங்கள் மாறும்.*

*காலமும் மாறும். கடும் வெயில் காலத்தில் வெட்டையில் அகழியில் தலைக் கவசமணிந்து கண்ணாடியால் முகத்தை மூடத்தவறினால், உப்பு மணலை வாரியள்ளியவாறு வீசும் வெப்பக் காற்று, நிலமட்டத்தோடு சுழலும். எமது விழிகளைத் தாக்கத் தவறாது.*

*வசந்த காலத்தில் வெளிகளில் வந்து ஆட்காட்டிகள் முட்டையிட்டு, எமது வயிற்றுப்பாட்டைப் பொறுப்பெடுத்துக்கொள்ளும்.*

*எங்கிருந்தோ திடீரென வரும் கொக்குக் கூட்டம் ஒற்றை ஆலமரத்தில் தங்கி ஓய்வெடுத்துக்கொண்டு, மறுபடி பறக்கும்.*

*பெயர் தெரியாத பறவைகளெல்லாம் சிறுசிறு கிளைகளில்கூட கூடுகட்டி, முட்டையிட்டுக் குஞ்சுகளோடு பறந்துபோகும்.*

*நிலத்தின் கீழ் வெட்டப்பட்ட அகழிகளில் நுளம்புத் திரிகளிலிருந்து விழும் சாம்பல் துணிக்கைகளை எண்ணி எண்ணி நேரத்தைக் கணக்கிட்டோம்.*

*ஆணையிறவை நாம் முதற்தடவை தாக்கி, ஆண்டு ஒன்று அதற்குள் ஆகிவிட்டதா? காவலுக்கு அடுத்தவரை எழுப்பிவிட்டு, விடியும் வேளைக்காகக் காத்திருந்தோம்.*

*******

*1996ஆம் ஆண்டு. காலம் போகப்போக ஆனையிறவுக்கும் எங்களுக்குமான தூரம்*

**- மலைமகள் -**

*அதிகரித்துக்கொண்டேபோனது. இப்போது எமது இருப்பு தட்டுவன்கொட்டிக் கிராமத்தில். சொத்துப் பத்தென்று சொல்லிக்கொள்வதற்குச் சுடுகலன், ரவைகள், ஒரேயொரு மாற்றுடையைத் தவிர எம்மிடம் பெரிதாக ஒன்றுமில்லை. ஆனால் அவரிடம் ஒரு கனமான முதுகுப்பை. எங்கு போனாலும் கூடவே போகும்.*

*“நகைப் பெட்டியோ?”*

*என்ற தோழிகளின் கேலியையும் பொருட்படுத்தாமல் அவர் காவிய பையினுள் யுரேனியத்தைவிடவும் பெறுமதியானவை இருந்தன.*



**கப்டன் தமயந்தி**
**கமலாலோஜினி வைத்தியநாதன்**
**மன்னார்**
**13.07.1991 ஆனையிறவு**

*ஆணையிறவில் அடிக்கடியும், அவர் போன வேறு களங்களிலும் நடந்த பல சம்பவங்களை அன்றன்றாடம் சுவையாக எழுதிவைத்த குறிப்பேடுகள் அவை.*

*அன்று அதிகாலை வழமைபோலவே அவரும் தோழிகளும் முன்னே காப்பரண்களில். சொத்துப் பத்தெல்லாம் பின்னேயுள்ள மண் வீட்டில். சண்டை தொடங்கிவிட்டது. சிங்களப் படையினரின் ராங்கிகள் முன்னேற முன்னேற, அவற்றின் திசைக்கேற்ப எமதணிகள் நகர்ந்து நகர்ந்து சண்டையிட்ட வேளையும் குறிப்பேட்டுப் பொதியின் நினைவு வராமலில்லை.*

*‘இதோ சண்டை முடிந்துவிடும். அப்படி இடம் விடுபட்டால்கூட இரண்டு நாட்களில் அடித்துப் பிடித்து எடுத்துவிடலாம்’*

*என மனம் ஆறுதல் கொள்ள சண்டையிட்டவாறு நகர்ந்து, சண்டையிட்டவாறு நகர்ந்து...*

*அந்தோ, இந்தோ என்று நான்காண்டுகள் கழிந்தனவா! குறிப்பேடுகளைக் கறையான் தின்றிருக்கக்கூடாது. ஏக்கத்தோடு காத்திருந்தது மனம்.*

*******

*அவரையே உற்றுப் பார்த்தன அனைவரது விழிகளும். அவரது விழிகளில் தெரிந்த புத்துணர்வும் சொற்களில் தொனித்த நம்பிக்கையும் எல்லோரிலும் தொற்றிக்கொண்டது.*

*“இம்முறை வென்று விடுவோம்”*

*1991, 1997, 1998இல் போய்ப் போய் வந்தவர்களும் புதியவர்களுமாகப் 2000 இல் படகேறினார்கள்.*

*வழியனுப்பும்போது அவர் சொன்னதையே அவர்கள் எதிரொலித்தார்கள்.*

*“போட்டாலை போறம். திரும்பி றோட்டாலை வாறம்”*

*என்றபடி போனார்கள்.*

*சொன்னபடி, ஆனையிறவூடே பயணிக்கும் யாழ் நெடுஞ்சாலையால் திரும்பிவந்தார்கள்.*

*******

# துரோகத்தின் வெகுமானம்...

**- சுடரவன் -**

தமது பிரதேசத்தை ஆக்கிரமித்து நிற்கும் அடக்குமுறையாளர்களுக்கு எதிராக அத்தேச மக்கள் ஒன்றிணைந்து உறுதியுடன் போராடுகின்ற போது எந்தப் பலமான எதிரியாலும் நிலைத்து நின்றுபிடிக்க முடிவதில்லை என்பதே வரலாறு. பிரான்ஸ், அமெரிக்கா, சோவியத்யூனியன் போன்ற பலவான்கள் கூட சின்னஞ் சிறிய தேசங்களிடம் கற்றுக்கொண்ட காத்திரமான பாடம் இது.

தேசப்பற்றுக்கொண்டு பொங்கியெழும் விடுதலைப் படைக்கு முகம்கொடுக்க முடியாத ஆக்கிரமிப்பாளர்கள் அம்மக்களில் ஒரு பகுதியினரையோ, குழுக்களையோ பயன்படுத்தி அந்த விடுதலைப் போரைப் பலவீனப்படுத்தி அழித்துவிட முனைவது கடந்த கால வரலாறு மட்டுமல்ல சமகால நீட்சியும் கூட.

சிறிலங்கா அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் எந்த இராணுவத் துணைப்படைக் குழுக்களும் இல்லையென்று சிறிலங்கா அரசு தொடர்ந்தும் கூறிக்கொண்டிருந்தவேளை, "சிறிலங்கா அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் ஒட்டுக்குழுக்கள் இருப்பது உண்மை. ஆனால் அவர்களுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் தொடர்பிருப்பது பற்றி எம்மிடம் போதுமான ஆதாரங்கள் இல்லை" என போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு நழுவலாகக் கூறிக் கொண்டிருந்த நேரம்...

*"விடுதலைப்புலிகளின் துணிகரத் தாக்குதல் மூன்று துணைப்படை முகாம்கள் நிர்மூலம்"*

*"வெலிக்கந்தைப் பகுதியில் சிறிலங்கா இராணுவமுகாம்களிடையில் அமைந்திருந்த துணைப்படை முகாம்கள் தாக்கியழிப்பு"*

*"ஒட்டுப்படையினரை மீட்கவந்த இராணுவத்தினர் மீது தாக்குதல் அதிகாரியுட்பட ஐவர் பலி"*

*"புலிகளின் அதிரடி 29பலி, பெருந்தொகை ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன."*

முப்பது நிமிடங்களுள் முடிவுக்கு வந்த விடுதலைப்புலிகளின் "மட்டுப்படுத்தப்பட்ட ஆயுதக்களைவு நடவடிக்கை."

உண்மை நிலையை மீண்டும் ஒருமுறை உலகறியச் செய்தது.

*****

ஜெனிவாவில் இறுதியாக நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ஒட்டுப்படை விவகாரமே முன்னுரிமை பெற்றவிடயமாக இருந்தது. முட்டிமோதி இறுதியில் மூக்குடைபட்ட சிறிலங்கா அரசதரப்பு ஒட்டுப்படைகளின் ஆயுதங்களைக்களைவதாகச் சர்வதேச சமூகத்தின் முன் ஒத்துக்கொண்டது.

ஆனால் ஒத்துக்கொண்டதற்கு மாறாகச் சிறிலங்காவின் பேச்சுக்களும், செயற்பாடுகளும் அமைந்திருந்தன.அமைச்சர்கள் ஆளுக்கொன்று பேசினர். ஒட்டுப்படைகளுக்குப் புதிதாக ஆயுதங்கள் வழங்கப்பட்டுத் தாக்குதல்கள் முடுக்கிவிடப்பட்டன. தமிழ் உணர்வாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர். விடுதலைப் புலிகள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அப்பாவிப் பொதுமக்கள் பலர் அநியாயமாகக் கொல்லப்பட்டனர். ஒட்டுப்படைகளுக்கு உயர்பாதுகாப்பு வலயங்களுள் அலுவலகங்களும் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

கையாலாகாத நிலையில் சர்வதேச சமூகமும் கவலைப்படாத நிலையில் மகிந்த அரசும் கதை பேசிக்கொண்டிருந்தன. "சிறிலங்கா அரசு ஒட்டுப்படைகளிடமிருந்து ஆயுதங்களைக் களையாவிட்டால் நாம் நேரடியாக செயலில் இறங்கவேண்டிவரும்" என விடுதலைப் புலிகள் பகிரங்கமாக விடுத்த அறிவிப்பு கண்டுகொள்ளப்படாததன் விளைவை பச்சைக் காட்டுச்சேனையில் பார்க்கமுடிந்தது.

06.05.2006 நேரம் அதிகாலை 1.15 சிறிலங்கா இராணுவமுகாம்களின் பாதுகாப்பை நம்பியிருந்த ஒட்டுப்படைகளின் மூன்று முகாம்கள் மீது சமநேரத்தில் தாக்குதல் ஆரம்பிக்கப்படுகின்றது. துல்லியமான வேவுத் தரவுகள், தாக்கமான புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் தாக்குதற்திட்டம் வகுக்கப்பட்டது. பயிற்சிகள் ஒத்திகைகள் என்பன மட்டக்களப்பு மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானுவினால் நெறிப்படுத்தப்பட்டிருந்தன.

எதிரியின் பிரதேசத்தை ஊடறுத்து மேற்கொள்ள வேண்டியிருந்த இரகசிய நகர்வு சிறப்பு அணிகளினால் சிக்கல்கள் இன்றி மேற்கொள்ளப்பட்டது. மூன்று சிறப்பு அணிகளும் தத்தமது இலக்குகளில் நிலையெடுத்து தாக்குதல் உத்தரவுக்காகக் காத்திருந்தன. உத்தரவு கிடைத்த 30 நிமிடத்தில் அனைத்து முகாம்களும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்தன. 29பேர் கொல்லப்பட 10பேர் காயமடைய ஐவர் உயிருடன் பிடிக்கப்படுகிறார்கள். பலர் உயிரைக்கையில் பிடித்துக் கொண்டு ஓடித்தப்பிவிடுகிறார்கள். முகாம்களிலிருந்த ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. வவுனியாவில் இருந்து பணப் பறிப்புக்காகக் கடத்திவரப்பட்டிருந்த வர்த்தகர் ஒருவர் மீட்கப்பட்டார். இவர் சங்கிலியால் பிணைக்கப்பட்டுச் சிறை வைக்கப்பட்டிருந்தார். தமிழர் புனர்வாழ்வு கழகப் பணியாளர்களுடன் வெலிக்கந்தை சிறிலங்கா கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்துக் கடத்தப்பட்ட வாகனம் குறித்த ஒட்டுப்படை முகாமில் நின்றுள்ளது. ஆயினும் பணியாளர் எவரும் அங்கு காணப்படவில்லை.

அதிகாலை 3.20 மணியளவில் கைப்பற்றிய முகாம்களை விடுதலைப் புலிகள் எரித்து அழித்துவிட்டு வெளியேற ஆரம்பிக்கின்றனர். தாக்குதலைவிட விட்டுவெளியேறலையே மிக அவதானமாக மேற்கொள்ள வேண்டியிருந்தது. சிறிலங்காப் படையின் முகாம் பகுதியினூடாக நகரவேண்டியிருந்தது. அத்துடன் சிறிலங்காப் படையினர் தம் சகாக்களுக்கு உதவப் பெருமளவில் புறப்பட்டு வருவதாகச் செய்தியும் கிடைத்தது. இராணுவ முகாம்களில் இருந்து பலத்த செல்தாக்குதல்கள் நடத்தப்பட்டுக்கொண்டிருந்தன.

படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் முடிந்தளவு மோதலைத் தவிர்ப்பதென்று தீர்மானிப்பட்டிருந்ததால் நகர்வுகளை மிகவும் அவதானமாகச் செய்யவேண்டியிருந்தது. இந்நிலையில் ஒட்டுப்படைகளுக்கு உதவிக்கு வந்த சிறிலங்காப் படைத்தரப்பு விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடாத்தியது. தற்காப்புத் தாக்குதல் ஒன்றுக்கான அவசியம் ஏற்பட்டதால் விடுதலைப் புலிகள் பதில் தாக்குதல் நடத்தவேண்டிய சூழல் உருவானது. விளைவு உதவிக்கு வந்த சிறிலங்கா இராணுவக் கப்டன் தர அதிகாரி உள்ளிட்ட ஐந்து படையினர் பலியாகினர். விடுதலைப் புலிகளின் சிறப்பணிகள் எதுவித இழப்புமின்றி முகாம் வந்தடைந்தன.

*****

இந்தத் தாக்குதல் நடவடிக்கை பற்றி இத்தாக்குதலை நெறிப்படுத்திய தளபதி கேணல் பானுவிடம் கேட்டபோது "இது ஒரு வெற்றிகரத் தாக்குதல் என்பதற்கு அப்பால் ஒருவகை வேதனை உணர்வுக்கும் நாம் உட்பட்டிருக்கின்றோம்" என அவர் தொடங்கியபோது ஆச்சரியமாக இருந்தது. "இத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் அனைவருமே தீவிர துரோக சிந்தனை கொண்டவர்கள் என்று நாம் கூறிவிட முடியாது. இதில் சிலர் ஆசை வார்த்தைகளை நம்பி மோசம் போனவர்கள். சிலர் பலவந்தமாகப் பிடித்துவரப்பட்டுச் சேர்க்கப்பட்டவர்கள். சிலர் வறுமையின் பிடியில் சிக்கியிருந்தவர்கள். இப்படிப்பட்டவர்களது மரணங்கள் உண்மையில் வருத்தம் தருபவையே. ஆனால் எமக்கு வேறு வழியில்லை" என்றார் கேணல் பானு.

அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில் "நாம் ஏற்கெனவே பலமுறை இத்துரோகக் கும்பல்களையிட்டு விழிப்பாக இருக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தோம். இத்துரோகக் குழுக்களுடன் சேர்ந்தியங்குவோர் இக்குழுக்களை விட்டு வெளியேறிச் சென்றுவிட வேண்டும் என்றும் விரும்பினால் எம்முடன் இணைந்து கொள்ளலாம் என்றும் குறிப்பிட்டிருந்தோம். அதன்படி பலர் இக்குழுக்களைவிட்டு வெளியேறியிருந்தனர். பலர் எம்முடன் இணைந்து கொண்டனர். இந்த நிலையில் தொடர்ந்தும் தேசப்பற்றாளர்கள், பொதுமக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். ஆட்கடத்தல், பணப்பறிப்பு என அடாவடித்தனங்கள் அதிகரித்தன. வேறெந்தத் தெரிவுமற்ற நிலையில் சிறிலங்காப்படைப் பகுதியில் அமைந்திருந்த ஒட்டுக் குழுக்களின் முகாம்களைத் தாக்கியழிக்கும் முடிவை நாம் எடுக்கவேண்டியேற்பட்டது." என விளக்கினார்.



தென்வியட்நாமில் அமரிக்கப் படைகளின் வெளியேற்றத்தின் பின் தப்பியோடும் கூலிப்படைக் குடும்பங்கள்

விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்தும் ஒட்டுக்குழுக்களின் முகாம்களில் இருந்து எடுக்கப்பட்ட ஆவணங்களிடமிருந்தும் பல முக்கிய தகவல்கள் கிடைத்துள்ளன.

குறித்த தாக்குதல் நடத்தப்படுவதற்கு ஒரு வாரத்துக்கு முன் (30.04.2006) சிறிலங்கா அரசால் 81mm மோட்டர்கள் உட்பட பல்வேறுபட்ட ஆயுதங்கள் இவ் ஒட்டுக்குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவ்வாயுதங்கள் அனைத்தும் சிறிலங்கா இராணுவத்தின் படைத்துறை வாகனங்களில் ஏற்றப்பட்டு ஒட்டுப்படை முகாம்களில் இறக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக இவ்வாயுதங்களைக் கொண்டு மட்டக்களப்பு வாகனேரிப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றைத் தாக்குமாறும் உத்தரவிடப்பட்டிருந்தது. இத்தாக்குதல் முடிந்த கையோடு ஒட்டுக் குழுக்களை இராணுவ வாகனங்களில் ஏற்றி விரைவாகத் திருமலைக்கு நகர்த்தி அங்கும் தாக்குதல் நடத்துவதென்று திட்டமிடப்பட்டிருந்தது. மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் ஒரே நேரத்தில் தாக்குதல் நடத்தக்கூடிய நிலையில் ஒட்டுப்படைகள் பலமாக இருப்பதாகக் காட்டுவதற்கான ஒரு நாடகமே இது.

இவ் வெட்டுக்குழுக்கள் பொதுவாக எல்லையோரக் கிராமங்களில் உள்ள மக்களின் வறுமையையும் அறியாமையையும் பயன்படுத்தி அவர்களை ஆட்சேர்க்கின்றனர். அத்துடன் சிறுவர்கள் இளைஞர்களைக் கடத்திச் சென்றும் ஆட்சேர்ப்பு இடம்பெறுகின்றது. குற்றவாளிகள் சமூகவிரோதிகள் ஆகியோரின் புகலிடங்களாகவும் இவையிருக்கின்றன.

ஆட்கடத்திப் பணம் பறித்தல், போதைப் பொருட்பாவனை மற்றும் சமூகச்சீரழிவு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இவர்கள் சிறிலங்காப் படையினரால் ஊக்குவிக்கப்பட்டு உதவி வழங்கப்படுகின்றனர். வர்த்தகர்களை கடத்திவைத்துப் பெறப்படும் பணத்திலும், மிரட்டிப் பெறப்படும் கப்பத்திலும் பெரும்பகுதி சிறிலங்கா இராணுவ அதிகாரிகளைப் போய்ச் சேர்வதால் இராணுவ அதிகாரிகள் இத்தகைய நடவடிக்கைகளுக்குத் தம் "பேராதரவை" வழங்கிவருகின்றனர்.

*****

அமெரிக்கா வியட்நாமிலும், பிரான்ஸ் அல்ஜீரியாவிலும் துரோகக் குழுக்களை உருவாக்கி தனது சொந்த இனத்தவரையே ஆயிரக் கணக்கில் கொன்று குவிக்கக்கூடிய கொலை வெறிப்படைகளாக அவர்களை மாற்றியிருந்தனர். காட்டிக் கொடுத்தல், கொள்ளையடித்தல், சித்திரவதை, பாலியற் பலாத்காரம் என கோடரிக்காம்புக் கூட்டம் தம் சொந்த மக்களுக்கே கொடூரம் புரிந்தது.

இத்தகையோரை அவர்களது எசமானர்கள் எந்தப் பெயரைச் சூட்டி அழைத்தபோதும் சொந்த மக்கள் அவர்களை துரோகிகள் என்றே கூறினர். இந்த இழிசொல் இந்தத் துரோகிகளுடன் மட்டும் முடிவடைந்து போகாமல் அவர்களின் பரம்பரைகளுக்குக் கூடப் பயன்படுத் தப்பட்டுவருவது பரிதாபகரமானதே.

உறுதிகொண்டு எழுச்சிபெற்ற மக்களுக்கு முகம் கொடுக்கமுடியாத நிலையில் ஆக்கிரமிப்பாளர்கள் புறமுதுகு காட்டும் பொழுது அதுவரையில் அவர்கள் பயன்படுத்திவந்த ஒட்டுப்படைகளை "அம்போ" என்று கழற்றிவிட்டு நழுவிவிடுவதே நாட்டு நடப்பு. இதே போன்ற ஒரு வரலாற்று நிகழ்வு இந்திய ஆக்கிரமிப்புப் படை எம் தாயகமண்ணைவிட்டு வெளியேற்றப்படும் போது இங்கும் நடந்தது ஞாபகத்தில் இருக்கலாம்.

வியட்நாமில் இருந்து அமெரிக்கப் படைகள் உயிரைக் கையிற் பிடித்துக்கொண்டு வெளியேறிக்கொண்டிருந்த நேரத்தில் ஆயிரக் கணக்கான தென்வியட்நாமிய அடிவருடிகள் அவர்களின் குடும்பங்களுடன் வந்து தம்மையும் அழைத்துச் செல்லுமாறு கதறிய போதும் அமெரிக்கர் அவர்களைக் கைகழுவி விட்டனர். அது போலவே அல்ஜீரியாவிலும் நடந்தேறியது. பிரான்ஸ்க்குத் தப்பிச்சென்ற அல்லது அழைத்துச் செல்லப்பட்ட அல்ஜீரியத் துரோகக் கும்பல்களையும் அவர்களது குடும்பங்களையும் பிரான்ஸ் மக்கள் தீண்டத் தகாதவர்களாகக் கருதி ஒதுக்கியே வைத்தனர். அத்துடன் இத்தகைய துரோகிகளின் மூன்றாம் தலைமுறையைக் கூட ஏற்றுக்கொள்ளக் கூடிய மனநிலையில் மக்கள் இல்லை என்பது இன்றைய அல்ஜீரிய யதார்த்தம்.

சிறிலங்கா இனவெறிப்படை கொலை வெறியாட்டம் நடத்தும் போது நீ ஒட்டுப் படைக்கு உறவினனா எனக் கேட்டு விட்டுவிடப்போவதில்லை. நீ ஒட்டுக்குழுவினனின் சகோதரியா, மனைவியா அல்லது தாயா எனக் கேட்டு சிதைத்தழிப்பிலிருந்து விலக்கழிக்கப் போவ தில்லை. தமிழர் என்ற அடையாளமே அவர் களின் அழிப்புக்கான ஆதாரம்.

இந்த யதார்த்தத்தை இனியும் புரிந்து கொள்ளாதவர்கள் எமது தேச விடுதலையை நிச்சயமாக வென்றெடுக்கப் போகும் எம் மக்களின் வெஞ்சினத்திற்கு ஆளாவதுடன் தமது தலைமுறைகளையும் தலைகுனிந்து நிற்கும் பரிதாபத்திற்கு ஆளாக்கப் போகிறார்கள் என்பதும் ஒரு வரலாற்றுத் துயராகவே இருக்கப் போகிறது.

**சிறிலங்கா இன வெறிப்படை, கொலை வெறியாட்டம் நடத்தும்போது நீ ஒட்டுப்படைக்கு உறவினனா எனக் கேட்டு விட்டுவிடப்போவதில்லை. நீ ஒட்டுக்குழுவினனின் சகோதரியா, மனைவியா அல்லது தாயா எனக் கேட்டு சிதைத்தழிப்பிலிருந்து விலக்கழிக்கப் போவதில்லை. தமிழர் என்ற அடையாளமே அவர்களின் அழிப்புக்கான ஆதாரம்.**

உலைக்களம்

வியாசன்



# வீட்டுக்கு ஒருவர் வீதியில் இறங்கினால் பூட்டுக்கள் யாவும் பொடிப்பொடியாகும்

நேற்றிருந்த வாழ்வுதொலைத்து
நெருப்புத்தின்று கிடக்கிறோம்.
எங்கள் ஆழஅகலங்கள் இடிந்துதிர
ஓடியொளிக்கவும் போக்கிடம் அற்றோம்.
வாலாட்டும் நாயின் வாழ்வுதானெனில்
ஏன் உயிர்தரிக்கவேண்டும் இனியும்?
உண்ணமட்டும் வாய்திறந்து
உதறமட்டும் காலெடுத்து
என்ன வாழ்க்கையடா இது?
அச்சமின்றி வீதியில் இறங்கவும்
ஆடிப்பாடியபடி வீட்டில் இருக்கவும்
இயல்கிறதா எம்மால்?
புங்குடுதீவில்
தர்சினியின் கையைத் தொட்டான்
கதறக்கதற மெய்யைத்தொட்டான்
பிச்செறியப்பட்ட மிச்சத்தைக்கூட
கல்லிலே கட்டிக் கிணற்றில் போட்டான்
என்ன செய்ய முடிந்தது எம்மால்?
மந்துவிலில்
கும்பாபிசேகத்துக்குச் சந்தனம் அரைத்துவிட்டு
கோயிலிற் படுத்தவரைக் காணவில்லையே
என்னதான் பண்ணமுடிந்தது எம்மால்?
அல்லைப்பிட்டியில்
பூவும் பிஞ்சுமாக
காயும் பழமுமாக
உறவுகள் குருதியிற் கிடந்தனவே பார்த்தாயா
ஏதுசெய்ய முடிந்தது எம்மால்?
நேற்று அவன்
இன்று நான்
நாளை நீயெனக் கணக்குத் தீர்க்கப்படுகிறது.
பேய்கள் உலவுகின்றன தெருவில்
பிசாசுகள் அலைகின்றன இரவில்.
எமது நிலம் நடக்கமுடியவில்லை
எமது கடல் இறங்கமுடியவில்லை
இத்தனைக்குப் பின்னும்
வாழ்வென்பதின் அர்த்தமென்ன?
இனியும் இதுதானாயின் சோறெதற்கு?
இதமான சுவாசத்துக்குக் காற்றெதற்கு?
அச்சமின்றி வாழலாம் வன்னிக்கு வாவென்றார்
பிச்சையெடுக்கவா அழைக்கின்றீரென
எச்சிற்படுத்துகிறோம் உறவுகளின் உணர்வை.
ஊரில் வாழ்வது உந்நதம்தான்
அதற்காக அடிமைகளாகவா அழிந்துபோவது?
சொந்த வீடும்,
சுற்றிய வேலியும்,
கிணறும்,
கிளிச்சொண்டன் மாமரமும்
விட்டுப் பிரிவதெனில் வேதனைதான்.
அகதியாகிய உத்தரிப்பெனில் அந்தரம்தான்.
உள்ளேயிருந்து உயிரையேன் இழக்கவேண்டும்?
அகதியென்பது
அடிமையென்பதிலும் கேவலமானதல்ல.
வன்னிநிலம் மாற்றான் நிலமல்லவே
உறவுகளால் நிரம்பிய உரிமை மண்ணல்லவா?
விடுதலையொளி சுடர்கொண்டு இலங்க
வையமே வியக்கும் வாசலல்லவா?
முற்றாக அடைபட்டு மூச்சுத் திணறமுன்
சிட்டாகச் சிறகுவிரித்துப் போயிறங்குவோம்.
எத்தனை காலத்துக்கென்றுதான்
இன்னும் இழுத்தடிப்பது?
வாழும் காலம்வரையும் போரிடுவதென்பது
தொகைகுறைந்த இனத்தைச் சுருளச் செய்யும்.
மனம் சலிக்கும்,
மரணபயம் அதிகரிக்கும்
மண்டியிடச் சொல்லும்.
நாமும் போராடி
எம் பிள்ளைகளும் போராடி
பிள்ளைகளின் பிள்ளைகளும் போராடுவதா?
என்று
தருவதை வாங்கத் தட்டேந்தச் சொல்லும்.
காலநீடிப்பு கலங்கவே செய்யும்.
உயிர்விதைத்து விளைந்த வயலின்
அறுவடைக்காரர் நாங்களல்லவா?
வன்னிக்குப் போவோம்
போவது குடியிருக்கவல்ல
மீண்டும் செப்பனிட்டுத் திரும்புவதற்கே.
அங்குதான் விடுதலைப்புயல் மையம்
கொண்டுள்ளது.
தமிழர் படைகள் அணிவகுத்துள்ளன.
தலைவன் நம்பிக்கை விதைத்து
வெற்றிக்குத் தேதி குறிக்கவுள்ளான்.
நாளை இருந்துபார்
வாசல் திறந்து புறப்படும் புலிச்சேனை
தெருவிற் கிளம்பும் புழுதிமேகம் பார்த்தே
பகைச்சேனை பறந்தோடப்போகிறது.
சேனையில் ஒருவன் நான்
மற்றவன் நீ
வீட்டுக்கு ஒருவர் வீதியில் இறங்கினால்
பூட்டுக்கள் யாவும் பொடிப்பொடியாகும்.
காலக் கடமையைக் கையிலே எடுத்து
வாழும் காலத்தை வரலாறாக்குவோம்.
போர்த்துக்கீசன் வந்திறங்கியபோது
சங்கிலியன் படைதிரட்டினான்.
வந்தவர்களை அடித்துவிரட்ட வாருங்கள் என்று
முந்தைத் தலைமுறையிடம் முறையிட்டான்.
எல்லோரும் நல்லூரைவிட்டு
கோப்பாய்க்கு இடம்பெயர்ந்தார்களேயன்றி
கோரிக்கையை நிறைவேற்றவில்லை.
என்ன நடந்தது?
முன்னூறு வருடங்கள் முதுகை நிமிர்த்தவில்லை.
பண்டாரவன்னியன் ஆங்கிலேயரை
விரட்டவென
படைதிரட்டினான்
எங்களின் பரம்பரை எழும்பவேயில்லை.
என்ன நடந்தது?
நெடுங்காலமாய் நெஞ்சே நிமிரவில்லை.
இப்போது பிரபாகரன் காலம்
பலம்கேட்டு நிற்பதே ஒரு பலமல்லவா?
என்ன செய்யும் உத்தேசம்?
திருவிழா முடிந்தது
காப்பு விற்க வந்தவர் கடையை மூடுகின்றனர்.
வந்த அலுவல் முடிந்ததும்
வண்டிலைப் பூட்டுகின்றனர்.
இனியெங்கு விடுதலை நெருப்பு விலாசமிடுமோ
அங்குபோய் ஆட்டம் போடுவர்.
நாங்கள் எங்கு போவது?
இது எங்கள் மண்
எங்கள் கடல்
எங்கள் வானம்
விட்டுவிட்டு எப்படி வெளியேறமுடியும்?
போராடுவது ஒன்றே பெருமைதரும்
புலியாவது ஒன்றே விடிவுதரும்.
"ருகுணுபுத்தா"வுக்கு எவரோ
உசார் ஊசி ஏற்றியுள்ளனர்.
ஏழிலை செவ்வாயும்
அட்டமத்தில் சனியும்
மகிந்தாவைப் போட்டுலுப்புகிறது
சண்டையைத் தொடங்கச் சங்கூதப்போகிறார்.
எதிர்கொள்ள வேண்டும்
எல்லோரும் வாருங்கள்.